# இஸ்ரவேல் கோத்திரக் குறிப்புகள்



ஆன்ட்ரு தேவ்

# இஸ்ரவேல் கோத்திரக் குறிப்புகள்

**சகோ. ஆண்ட்ரு தேவ்**

(இயேசுவின் இயக்கம்)

***Bible Calls***

CHENNAI. INDIA

**TRIBES OF ISRAEL - NOTES**
DR.ANDREW DEV ©

Second Edition : Jan. 2014
Distributed by : Bible Calls, Chennai, India
E-mail : Biblecalls@ gmail.com
Contact : The Jesus Mission, P.O. Box 1040, Chennai-10
Website : thejesusmission.org
Cell : 91-9444498080/9244448080
Printed at Student Offset Services, Chennai -1

**Price : Rs. 60/-**

இப்புத்தகச்செய்திகள் தவறாகக் கையாளப்படுவதை தவிர்க்கவும். ஆசிரியரின் அனுமதியில்லாமல், இப்புத்தகத்திலுள்ள செய்திகள் அச்சிடப்படவோ அல்லது மொழிபெயர்க்கப்படவோ கூடாது.

# என்னுரை

வேதப்புத்தகம் ஒரு கடலைப் போன்றது. அதன் தியானம் ஒரு கடலின் பயணத்தைப் போன்றது. அதன் சத்தியங்கள் கடலின் அலைகளைப் போல புதுப்புது வெளிப்பாட்டோடு மனிதனைத் தேடி வரக்கூடியது. பாலுக்கும் தேனுக்கும் ஒப்பான இந்த வசனங்கள் நம்முடைய வாழ்க்கையை பெலப்படுத்தக்கூடியதாய் இருக்கிறது. இருபுறமும் கருக்கான இப்பட்டயம் நம்மை ஒழுங்குபடுத்தக் கூடியதாய் நிற்கிறது. கண்ணாடி போல் இருக்கும் இதன் வசனங்கள் நம் ஆன்மாவை அழகுபடுத்தக்கூடியதாய் இருக்கிறது.

இஸ்ரவேல் கோத்திரக்குறிப்புகள் என்ற இப்புத்தகம் அநேக ஆண்டுகளாக வேதத்தை ஆராய்ந்ததால் வந்த பலனாகும். இஸ்ரவேலரைப் பற்றிய குறிப்புகளை ஒட்டுமொத்தமாய் படிப்பதை விட, பல உட்பிரிவுகளோடு படிப்பது வேதப்பிரியருக்கு எளிமையாய் இருக்கும் என்று நான் எண்ணியதின் விளைவாய் இப்படியொரு புத்தகம் உருவானது. இது வேதாகமக்கல்லூரி பயிலுவோருக்கும், போதகர்களுக்கும் உதவியாய் இருப்பதுமின்றி வேதத்தைப் படிக்கும் ஒரு புது விசுவாசிக்கும் கருத்துகளை தெளிவாய் விளங்கிக்கொள்ள வழிவகுக்கும்.

இக்குறிப்புகள் உங்களது சபை மக்களுக்கு வேதபாடம் நடத்துவதற்கும் ஜெபக்குழுவில் தியானிப்பதற்கும் மட்டுமின்றி உங்கள் பிரசங்கத்திற்கும் பேருதவியாய் இருக்கும் என்று நம்புகின்றேன்.

தேவகிருபை உங்களோடு இருப்பதாக!

அன்புடன்

21–02–2008 **ஆன்ட்ரு தேவ்**

சென்னை இயேசுவின் இயக்கம்

## பைபிள் காலிஸ்

# வெளியிடும் எமது புத்தகங்கள்

1. வேதாகம விளக்கம் – புதிய ஏற்பாடு
2. வேதாகம விளக்கம் – பழைய ஏற்பாடு
3. வேதாகம அகராதி
4. வேதாகம முன்னுரை – பழைய & புதிய ஏற்பாடு
5. வேதாகம கால வாழ்க்கை முறை
6. வேதாகமக் குறிப்புகள்
7. பரலோகம் எப்படி இருக்கும் ?
8. நரகம் எப்படி இருக்கும் ?
9. எப்படி ஜெபிக்கவேண்டும் ?
10. எப்படி ஜெபிக்கக்கூடாது ?
11. அசுத்த ஆவிகள் என்ன செய்கின்றன ?
12. தேவதூதர்கள் என்ன செய்கிறார்கள்?
13. மரணத்திற்குப் பின் நடப்பது என்ன?
14. நியாயத்தீர்ப்பு எப்படி நடக்கும்?
15. இயேசுவின் டைரி
16. நெறிந்த நாணல்
17. துர்உபதேசங்கள்
18. ஜெபத்தின் ரகசியம்
19. ஜெபவாழ்க்கை
20. Dictionary of Bible Names
21. Dictionary of Baby Names
22. Golden Words (Quotations)

# பொருளடக்கம்

## கோத்திரங்கள்


**இஸ்ரவேல் கோத்திரம்** 1

1. ரூபன் கோத்திரம் 2
2. சிமியோன் கோத்திரம் 3
3. லேவி கோத்திரம் 4
4. யூதா கோத்திரம் 6
5. இசக்கார் கோத்திரம் 8
6. செபுலோன் கோத்திரம் 8
7. பென்யமீன் கோத்திரம் 9
8. தாண் கோத்திரம் 11
9. நப்தலி கோத்திரம் 12
10. காத் கோத்திரம் 13
11. ஆசேர் கோத்திரம் 14
12. மனாசே கோத்திரம் 14
13. எப்பிராயீம் கோத்திரம் 15

**இதர கூட்டத்தினர் பற்றிய குறிப்புகள்**

14. இஸ்மவேலர்கள் 17
15. மோவாபியர்கள் 18
16. அம்மோனியர் 19
17. ஏதோமியர்கள் 21
18. கேனியர்கள் 24
19. கிபியோனியர்கள் 24
20. ஏத்தியர்கள் 25
21. எமோரியர்கள் 26
22. கானானியர்கள் 27
23. ஏவியர்கள் 29
24. ஏனாக்கியர்கள் 29

| | | |
|---|---|---|
| 25. | மீதியானியர்கள் | 30 |
| 26. | பெலிஸ்தியர்கள் | 31 |
| 27. | அமலேக்கியர்கள் | 34 |
| 28. | ரேகாப்பியர் | 35 |
| 29. | சீதோனியர் | 35 |
| 30. | எகிப்தியர்கள் | 37 |
| 31. | அசீரியர் | 40 |
| 32. | பாபிலோனியர் | 42 |
| 33. | மேதிய பெர்சியர்கள் | 46 |
| 34. | சதுசேயர்கள் | 48 |
| 35. | பரிசேயர்கள் | 48 |
| 36. | வேதபாரகர் | 50 |



**பலிகள்**


| | | |
|---|---|---|
| 1. | பலிபீடங்கள் | 52 |
| 2. | பலிகள் / காணிக்கைகள் | 53 |
| 3. | தகனபலிபீடம் | 55 |
| 4. | தூப பீடம் | 56 |
| 5. | பாவநிவாரண பலி | 57 |
| 6. | குற்றநிவாரண பலி | 58 |
| 7. | சர்வாங்க தகனபலி | 59 |
| 8. | சமாதான பலி | 61 |
| 9. | பானபலி | 62 |
| 10. | போஜனபலி | 63 |
| 11. | அசைவாட்டும் பலி | 64 |


**பண்டிகைகள்**


| | | |
|---|---|---|
| 1. | யூபிலி வருடப்பண்டிகை | 65 |
| 2. | ஐம்பதாம் நாள் பண்டிகை | 66 |
| 3. | பூரீம் பண்டிகை | 66 |
| 4. | ஏழாம் வருடப் பண்டிகை | 67 |
| 5. | கூடாரப் பண்டிகை | 67 |
| 6. | பஸ்கா பண்டிகை | 68 |
| 7. | வருடாந்திரப் பண்டிகை | 69 |
| 8. | ஆசரிப்புக் கூடாரம் | 69 |

# கோத்திரக் குறிப்புகள்



## இஸ்ரவேல் கோத்திரம்
## (The Tribes of Israel)

**இவர்கள் வம்சம்:**

யாக்கோபின் 12 பிள்ளைகளும் இஸ்ரவேல் கோத்திரத்தார் என அழைக்கப்பட்டனர் – ஆதி.35:23–26; 49:28; யாக்.1:1

இவர்கள் எதிர்காலத்தைக் குறித்து யாக்கோபு முன்னுரைத்தான்– ஆதி.49:1–8

இவர்கள் வருங்காலத்தைக் குறித்து மோசே முன்னுரைத்தான் – உபா.33:6–29

**இவர்களது வனாந்தர வாழ்க்கை :**

ஒவ்வொரு கோத்திரமும் ஒரு தலைவரின்கீழ் இயங்கியது – எண்.1:4–16

இவர்கள் பல குடும்பங்களாக பிரிக்கப்பட்டனர் – எண்.1:2; 26:5–50

ஆண்களில் பலரை யுத்தத்திற்கென தெரிந்தெடுத்தனர் – எண்.31:4

எகிப்திலிருந்து புறப்பட்டபோது 6 லட்சம் புருஷர்கள் இருந்தனர் – யாத்.12:37

வனாந்தரத்தில் எண்ணப்பட்ட புருஷர்கள் 6,03,550 பேர் – எண்.2:32

பாளைய பயணத்தில் 4 பிரிவுகளாய் பிரிக்கப்பட்டனர் – எண்.10:14–28

ஆசரிப்பு கூடாரத்தைச் சுற்றிலும் கோத்திரங்களாக வரிசைப்படுத்தப்பட்டு இருந்தனர் – எண்.2:2–31

**இவர்களது கானான் வாழ்க்கை :**

இவர்கள் மக்கள் தொகைக்கேற்ப கானானின் இடம் ஒதுக்கப்பட்டது – எண்.33:54

ரூபன், காத், மனாசேயின் பாதி கோத்திரத்தார் யோர்தானின் கிழக்கு பகுதியை தேர்ந்தெடுத்து குடியேறினர் – உபா.3:12–17; யோசு.13:23–32

மற்ற கோத்திரத்தாருக்கு உதவி செய்யும்படி இவர்களும் அழைக்கப்பட்டனர் – எண்.32:6–32; உபா.3:18–20

கானானுக்குள் சென்ற மொத்த மக்கள் 6,01,730 பேர் – எண்.26:51

கானான் தேசம் மட்டும் ஒன்பதரை கோத்திரத்தாருக்கு சீட்டு போட்டு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது – யோசு.14:1–5

கானானில் குடியேறிய ஒவ்வொரு கோத்திரத்தாருக்கும் எல்லைகள் வகுத்து கொடுக்கப்பட்டன – யோசு.15:1–63

எல்லா கோத்திரத்தாரும் அவரவர் எல்லையில் குடும்பத்தோடு குடியிருக்கும்படி அவர்களுக்கு சுதந்திரம் அளிக்கப்பட்டது – எண்.36:3–9

கோத்திரத்தாரின் பெயர்கள் பிரதான ஆசாரியனின் மார்ப்பதக்கத்தில் முத்திரை வெட்டாய் வெட்டப்பட்டது – யாத்.28:21; 39:14

ரெகொபெயாம்மின் ஆட்சிவரை இவர்கள் அனைவரும் ஒரே ஆட்சிக்குட்பட்டிருந்த மக்களாக இருந்தனர் –1 இரா.12:16–20

# I. ரூபன் கோத்திரம்
## (The Tribe of Reuben)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த முதல் மகன் –ஆதி.29:32

ரூபனின் வம்சத்தார் இக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் – ஆதி.46:9–10

யாக்கோபு இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – ஆதி.49:3–4

மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:6

**இவர்களது கோத்திரம் :**

இவர்கள் கோத்திரத்தலைவனாக எலிசூர் இருந்தான் – எண்.1:5

கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 46,500 பேர் – எண்.1:21

கோத்திர சார்பாக கானானை வேவு பார்க்க சம்முவா சென்றான் – எண்.13:4

இஸ்ரவேலரின் பயணத்தில் இரண்டாம் பிரிவில் இருந்தவர்கள் – எண்.10:18

ஆசரிப்புக் கூடாரத்தின் தெற்கில் பாளையமிறங்கியவர்கள் – எண்.2:10

கூடாரத் திறப்பு விழாவின்போது காணிக்கை படைத்தனர் – எண்.7:30–35

கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 43,730 பேர் – எண்.26:7

யோர்தானின் கிழக்கு பகுதியை சுதந்தரிக்க விரும்பியவர்கள் – எண்.32:1–5
கானானை இஸ்ரவேலின் மற்ற கோத்திரங்கள் சுதந்தரிக்க உதவியவர்கள் – உபா.3:18–20
தாங்கள் விரும்பின இடத்தை சுதந்தரித்தவர்கள்– உபா.3:16–17; யோசு.13:15–23
சாபம் கூறுகிற கூட்டத்தில் இடம் பெற்றிருந்தனர் – உபா.27:13
யோசுவாவால் அழைத்து பேசி அனுப்பப்பட்டவர்கள் – யோசு.22:1–9
பலிபீடம் கட்டி மற்ற கோத்திரத்தாரை புண்படுத்தினார்கள் – யோசு.22:10–29
சிசெராவுக்கு எதிராக வர உதவாதவர்கள் – நியா.5:15–16
சிலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டனர் – 1 நாளா.12:37–38
இவர்கள் மீது தாவீது தலைவர்களை நியமித்தான் – 1 நாளா.26:32; 27:16
ஆகாரியரோடு போரிட்டு வென்றனர் – 1 நாளா.5:10, 18–22

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் நகரங்களைக் கட்டி பெயர்களை சூட்டினார்கள் – எண்.32:37–38
சீரிய ராஜா ஆசகேலால் சிறைபிடிக்கப்பட்டார்கள் – 2 இரா.10:32–33
அசீரிய ராஜா தில்காத்பில் நேசரால் சிறையாக கொண்டுபோகப்பட்டார்கள் – 1 நாளா.5:6,26
தாத்தான் இவர்கள் கோத்திரத்தில் பிரபலமாய் இருந்தான் – எண்.16:1
அபிராம் இவர்கள் கோத்திரத்தில் பேர் பெற்றவனாயிருந்தான் – எண்.26:9
அதினா இவர்கள் கோத்திரத்தில் திறமை வாய்ந்தவனாய் இருந்தான்– 1 நாளா.11:42

# 2. சிமியோன் கோத்திரம்

## (The Tribe of Simeon)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் ஏழாம் மகன் சிமியோன் – ஆதி.29:33
யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்தவன் – ஆதி.29:33
இவனைக் குறித்து யாக்கோபு முன்னறிவித்தான் – ஆதி.49:5–7

**இவர்களது கோத்திரம் :**

செலூமியேல் இவர்கள் கோத்திரத்து தலைவனாய் இருந்தான் – எண்.1:6
கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 59,300 பேர் – எண்.1:23
கோத்திர சார்பாக சாப்பாத் வேவு பார்க்க சென்றான் – எண்.13:5
கானானை பங்கிட சாமுவேல் பிரபுவாய் இருந்தான் – எண்.34:20
இஸ்ரவேலரின் பயணத்தில் இரண்டாம் பிரிவில் இருந்தார்கள் – எண்.10:18–19

ஆசரிப்பு கூடார தென்பகுதி இவர்களுக்கு ஒதுக்கப்பட்டது – எண்.2:10–12
ரூபன் கோத்திரத்திற்குப்பின் இவர்கள் சென்றனர் – எண்.2:10–12
கூடார திறப்பின்போது இவர்கள் காணிக்கை படைத்தனர் – எண்.7:36–41
இவர்கள் கோத்திரத்தில் 22,200 குடும்பங்கள் இருந்தன – எண்.26:14
மோவாப்பிரோடு பாவம் செய்து பலர் கொல்லப்பட்டனர் – எண்.25:9,14
ஆசீர்வாதம் கூறுகிற கூட்டத்தில் இடம் பெற்றனர் – உபா.27:12
இவர்கள் சுதந்தரிக்கும் எல்லை யூதாவில் கிடைத்தது – யோசு.19:1–8

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் பட்டணங்களும் கிராமங்களும் இவர்கள் எல்லைக்குள் வந்தது – யோசு.19:2–8; 1 நாளா.4:28–33
கானானியரோடு யுத்தம் பண்ண யூதாவோடு சென்றனர் – நியா.1:3,17
இவர்களில் சிலர் தாவீதை இராஜாவாக்க வந்தனர் – 1 நாளா.12:25
இவர்களில் சிலரை தாவீது தலைவனாக்கினான் – 1 நாளா.27:16
இம்மக்களில் பலர் ஆசாவோடு இணைந்து கொண்டனர் – 2 நாளா.15:9
யோசியா ஆட்சியில் இவர்களில் இருந்த விக்கிரகங்கள் அகற்றப்பட்டன – 2 நாளா. 34:1–7
இவர்களில் ஒரு பிரிவினர் அமலேக்கியரை வீழ்த்தி அவர்கள் இடங்களில் குடியேறினர் – 1 நாளா.4:39–43

# 3. லேவி கோத்திரம்
## (The Tribe of Levi)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் மூன்றாம் மகன் லேவியின் வம்சம் – ஆதி.29:34
யாக்கோபுக்கும் லேயாலுக்கும் பிறந்த மகன் – ஆதி.29:32–35
ஆசாரிய வம்சத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்ட கோத்திரம் – எண்.25:13
இவர்கள் ஆசாரியர்களாகவும், ஆசாரியர்களுக்கும், ஆசரிப்பு கூடாரத்திற்கும் தேவையான அனைத்து வேலைகளையும் செய்பவர்களாகவும் இருந்தனர் – எண்.1:47–54; 3:6–10; 25:13; உபா.10:8–9; 18:1–5
யாக்கோபு இவனைக் குறித்து முன்னறிவித்தான் – ஆதி.49:5–8
மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:8–12
இஸ்ரவேலில் கணக்கிடக்கூடாதக் கோத்திரம் – எண்.1:47–49

**இவர்களது குடும்பங்கள் :**

இக்கோத்திரம் 3 பிரிவுகளாக பிரிக்கப்பட்டது – எண்.3:17–21; 4:4–32; 1 நாளா.6:16–48
கெர்சோனின் குடும்ப வம்சத்தார் – எண்.3:18, 21–26
கோகாத்தின் குடும்ப வம்சத்தார் – எண்.3:19,27–28
மெராரி குடும்ப வம்சத்தார் – எண்.3:20,33–34
ஆசரிப்புகூடாரப் பணிக்கென தெரிந்துகொண்டவர்கள் – எண்.3:8; 1 நாளா.15:2
இவர்கள் சுத்திகரிக்கப்பட்ட சந்ததியார் – எண்.8:6,14
இஸ்ரவேலரின் முதற்பேற்றுக்கு பதில் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் – எண்.3:12
விக்கிரகத்திற்கு எதிராக வைராக்கியம் கொண்டவர்கள் – யாத்.32:26–28
ஆசரிப்புகூடார வேலைக்கு பணியமர்த்தப்பட்டவர்கள் – எண்.8:26
இவர்களது 25வது வயதில் ஊழியத்திற்கு வரவேண்டியவர்கள் – எண்.8:24
30 வயது முதல் 50 வயதுவரை சேனைப்பணிக்கு வேண்டியவர்கள் – எண்.4:3,23

**இவர்களது சுத்திகரிப்பின் கடமைகள் :**

லேவியர் சுத்த ஜலத்தால் கழுவப்பட வேண்டியவர்கள் – எண்.8:7
சர்வாங்க சவரம் பண்ணவேண்டியவர்கள் – எண்.8:7
வஸ்திரங்களை தோய்த்து சுத்திகரிக்க வேண்டியவர்கள் – எண்.8:7
பாவநிவாரண பலியிடவேண்டியவர்கள் – எண்.8:8,12
இஸ்ரவேல் புத்திரர் லேவியர்மீது கைவைக்க வேண்டும் – எண்.8:10
கர்த்தருக்கு முன்பாய் காணிக்கையானவர்கள் – எண்.8:11,15
ஆசாரியர்களுக்கு முன் முன்னிருத்தப்படவேண்டியவர்கள் – எண்.8:13
ஆரோனுக்கும் அவன் குமாரருக்கும் கொடுக்கப்பட்டவர்கள் – எண்.3:9; 8:19
ஆசரிப்பு கூடாரத்தில் சுற்றிலும் இருக்க வேண்டியவர்கள் – எண்.1:50–53; 3:23,29,35
இஸ்ரவேலரின் நடுவிலே பாளையம் இறங்கியவர்கள் – எண்.2:17

**இவர்களது ஊழியங்கள் :**

உடன்படிக்கைப் பெட்டியை சுமப்பவர்கள் – உபா.10:8
கர்த்தரின் சந்நிதியில் நின்று ஆராதனை செய்பவர்கள் – உபா.10:8
ஆராதனைக்கு வரும் மக்களை ஆசீர்வதிப்பவர்கள் – உபா.10:8
ஆசாரியர்களுக்கு உதவி செய்பவர்கள் – எண்.3:6–7; 18:2
இஸ்ரவேலருக்கு ஊழியம் செய்பவர்கள் – 2 நாளா.35:3
பரிசுத்த ஸ்தலத்தை காவல் காக்கிறவர்கள் – எண்.18:3–4; 1 நாளா.23:32
கூடார தட்டுமுட்டுக்களை பராமரிக்கிறவர்கள் – எண்.3:8; 1 நாளா.9:28–29
மாவு, ரசம், எண்ணெய், சுகந்தவர்க்கங்களை காப்போர் – 1 நாளா.9:29–30
பொக்கிஷங்களை விசாரித்து பாதுகாக்கிறவர்கள் – 1 நாளா.26:20
தசம பாகங்கள், காணிக்கைகளுக்கும் பொறுப்பாளர்கள் –2 நாளா.31:11–19
கூடாரத்தின் ஆராதனையில் பங்கேற்பவர்கள் – எண்.8:19–22
கூடாரத்தை இறக்கி, தூக்கி, நிறுத்தி வைப்போர் – எண்.1:50–51; 4:5–33

பலிகளை ஆயத்தம் செய்து ஆசாரியர்களுக்கு உதவுபவர்கள் – 1 நாளா.23:30
தேவசமூகத்து அப்பங்களை ஆயத்தம் பண்ணுவோர் – 1 நாளா.9:29–30
பரிசுத்தப் பொருள்களை விசாரித்து கவனிப்பவர்கள் – 1 நாளா.23:28–29
பரிசுத்தப் பொருள்களின் அளவுகளை சரிபார்ப்பவர்கள் – 1 நாளா.23:29
மக்கள் செய்யவேண்டியதை போதிப்பவர்கள் – 2 நாளா.17:8–9; 35:3
மக்களை ஆசீர்வதித்து அனுப்புகிறவர்கள் – உபா.10:8
ஆசரிப்புகூடார வாசலை காப்போர் – 1 நாளா. 9:17–26; 23:5; நெகே.12:25
பரிசுத்த இசையை வாசிப்பவர்கள் – 1 நாளா.23:5; 2 நாளா.5:12–13
சேனைக்கு முன் துதிபாடல் பாடுகிறவர்கள் – 2 நாளா. 20:21–22
நியாயங்களைக் குறித்து தீர்ப்பளிக்கிறவர்கள் – உபா.17:9; 1 நாளா.23:4
இராஜாக்கள் அவசரத்திற்கு உதவுவோர் –2 இரா.11:5–9; 2 நாளா.23:5–7
இஸ்ரவேலின் எல்லைகளில் சுதந்திரம் பெறாதோர் – உபா.10:9; யோசு.13:33
இஸ்ரவேலர் குடும்பங்களில் கலந்தவர்கள் – உபா.12:12,18,19; 14:29; 16:11,14
குடியிருக்கும்படி பட்டணங்களைப் பெற்றவர்கள் – எண்.35:2–8
பணிவிடைக்காக தசமபாகம் பெறவேண்டியவர்கள்
– எண்.18:21,24; 2 நாளா.31:4–5; நெகே.12:44–45; எபி.7:5
லேவியர் வாங்கும் காணிக்கையில் ஆசாரியருக்கு தசமபாகம் கொடுக்க வேண்டியவர்கள் – எண்.18:26–32
காணிக்கையின் ஒரு பகுதியை பெறவேண்டியவர்கள் – உபா.18:1–2
தாவீது இவர்களை கணக்கிட்டு தொகைப் பார்த்தான் – 1 நாளா. 23:2–3
தாவீது இவர்களை நான்கு பிரிவுகளாகப் பிரித்தான் – 1 நாளா.23:4–6
இவர்களை வயதிற்கேற்றாற்போல் வேலைக்குப் பிரித்தான் – 1 நாளா.23:24–32
லேவியரின் உட்பிரிவை 24 பகுதிகளாக பிரித்தான் –1 நாளா.23:6; 25:8–31
இவர்களை வகுப்பாக பிரித்தான் – 2 நாளா.8:14; 31:17
சிறையிருப்பிற்கு பின்பும் இப்படியே பணிசெய்தனர் – எஸ்றா.6:16–18
இவர்களுக்குள் அதிகாரிகளும் தலைவர்களும் இருந்தனர் – எண்.3:24,35
இவர்கள் அனைவரும் பிரதான ஆசாரியன் கீழ் இருந்தனர் – எண்.3:32
இவர்களில் கோராகின் கூட்டத்தோடு சிலர் அழிந்தார்கள் – எண்.16:1–35

# 4. யூதா கோத்திரம்
## (The Tribe of Judah)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் நான்காம் மகன் யூதாவின் வம்சம் – ஆதி.29:35
யாக்கோபுக்கும் லேயாளுக்கும் பிறந்த மகன் – ஆதி.29:31,35
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – ஆதி.49:8–12
மோசே இவர்களை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – உபா.33:7

| | |
|---|---|
| இவர்கள் கோத்திரத்தில் நகசோன் தலைவனாய் இருந்தான் | – எண்.1:7 |
| கானானை வேவு பார்க்க காலேப் தெரிந்துகொள்ளப்பட்டான் | – எண்.13:6 |
| கானானை பங்கிட காலேப் தெரிந்துகொள்ளப்பட்டான் | – எண்.34:19 |
| இவர்களில் யுத்தத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் 74,600 பேர் | – எண்.1:27 |
| ஆசரிப்பு கூடார கிழக்குப் பகுதியில் பாளையமிறங்கினர் | – எண். 2:3 |
| இஸ்ரவேலர் பயணத்தில் முதல் பிரிவில் இருந்தனர் | – எண்.10:14 |
| ஆசரிப்பு கூடார திறப்பு விழாவில் காணிக்கை படைத்தனர் | – எண்.7:12–17 |
| இவர்கள் கோத்திரத்தாரின் குடும்பங்கள் | – எண்.26:19–21 |
| இவர்களில் கானானுக்குள் நுழைந்தவர்கள் 76,500 பேர் | – எண்.26:22 |
| ஆசீர்வாதம் கூறுகிற கூட்டத்தில் இருந்தனர் | – உபா.27:12 |
| கானானில் இவர்கள் சுதந்தரித்த எல்லைகள் | – யோசு.15:1–12 |
| கானானியரை துரத்துவதற்கு முதலில் வந்த கோத்திரம் | – நியா.1:3–20 |
| கிபியாவுக்கு எதிராக போரிட புறப்பட்டவர்கள் | – நியா.20:18 |
| இஸ்ரவேலில் முதல் நியாயாதிபதி இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் | – நியா.3:9 |
| இவர்கள் சவுல் மன்னனுக்கு போரில் உதவி செய்தார்கள் | – 1 சாமு.11:8; 15:4 |
| சவுலுக்கு பிறகு இக்கோத்திரத்திலிருந்தே அரசன் வந்தான் | – 1சாமு.15:28; 16:1,12,13 |
| தாவீதை பின்பற்றின முதல் கோத்திரம் | – 2 சாமு.2:10 |
| இக்கோத்திரத்தை தாவீது 71/2 ஆண்டுகள் ஆண்டான் | – 2 சாமு.2:11; 5:5 |
| தாவீது இவர்களில் தலைவர்களை நியமித்தான் | – 1 நாளா.27:18 |
| தாவீதை திரும்ப அழைத்த கோத்திரம் | – 2 சாமு.19:11–15 |
| மற்ற கோத்திரத்தாரைவிட செல்வாக்கு மிகுந்திருந்தார்கள் | – 2 சாமு.19:41–43; 20:1–2 |
| தாவீதின் வீட்டுக்கு போர் வீரர்களாயும் இருந்தனர் | – 1 இரா.12:21 |
| சிறையிருப்பிற்கு பிடிக்கப்பட்ட கடைசி கோத்திரம் | – 2 இரா.25:21–23 |
| இக்கோத்திரத்திலிருந்தே இயேசு கிறிஸ்து வந்தார் | – மத்.1:3–16; எபி.7:14 |
| பெசலெயேல் இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – யாத்.31:2; 35:30 |
| நகசோன், காலேப் இக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் | – எண்.7:12; 13:6 |
| ஆகான் இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – யோசு.7:18 |
| பெத்தகியா இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – நெகே.11:24 |
| போவாஸ் இக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் | – ரூத்.4:17–22 |
| ஓபேத், ஈசாய் இக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் | – ரூத்.4:21–22; 1 சாமு.16:1 |
| எலிகூ இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – 1 நாளா.27:18 |
| அப்சலோம் இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – 2 சாமு.3:1–3 |
| எல்க்கானான் இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – 2 சாமு. 21:19; 23:24 |
| அதோனியா இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – 1 இரா.1:5–6 |
| யோனத்தான் இக்கோத்திரத்தை சேர்ந்தவன் | – 2 சாமு.21:21 |
| தாவீது, சாலொமோன் இக்கோத்திரத்தை சேர்ந்தவர்கள் | – 1 இரா.1:34; ரூத்.4:22 |

# 5. இசக்கார் கோத்திரம்

## (The Tribe of Issachar)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் 5ம் மகன் இசக்கார் என்பவனின் வம்சம் – ஆதி.30:17–18
யாக்கோபுக்கு லேயாள் பெற்ற மகன் – ஆதி.30:17
யாக்கோபு இவனை ஆசீர்வதித்தான் – ஆதி.49:14–15
மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:18–19
இவர்கள் கோத்திரத்தில் நெதனெயேல் தலைவனாய் இருந்தான் – எண்.1:8
கானானை வேவு பார்க்க ஈகால் தெரிந்து கொள்ளப்பட்டான் – எண்.13:7
கானானை பங்கிட பல்த்தியேல் தெரிந்துகொள்ளப்பட்டான் – எண்.34:26
யுத்தத்திற்கு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் 54,400 பேர் – எண்.1:29
கூடாரத்தின் கிழக்கு பகுதியில் பாளையம் இறங்கினார்கள் – எண்.2:5
யூதா கோத்திரத்திற்குப்பின் பாளையம் இறங்கினர் – எண்.10:14–15
கூடாரத் திறப்பு விழாவில் காணிக்கைப் படைத்தனர் – எண்.7:18–23
இக்கோத்திரத்தாரின் குடும்பங்கள் – எண்.26:23–24
இவர்களில் கானானுக்குள் சென்றவர்கள் 64,300 பேர் – எண்.26:25
இவர்கள் ஆசீர்வதிக்கிறக் கூட்டத்தில் இருந்தனர் – உபா.27:12
இவ்வம்சத்தாருக்கு கானானில் கிடைத்த எல்லைகள் – யோசு.19:17–23

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் சிசேராவை எதிர்க்க தெபொராளோடு இணைந்தனர் – நியா.5:15
தாவீது இவர்களில் தலைவர்களை தெரிந்தெடுத்தான் – 1 நாளா.27:18
சாலொமோன் இவர்களில் தலைவர்களை தெரிந்தெடுத்தான் – 1 இரா.4:17
தாவீதின் முடிசூட்டு விழாவில் இவர்களில் பலர் பங்கேற்றனர் – 1 நாளா.12:32
தாவீதின் காலத்தில் இவர்களில் பராக்கிரமசாலிகள் இருந்தனர் – 1 நாளா.7:2,5
இவர்களில் பலர் முறையில்லாமல் பஸ்கா அனுசரித்தனர் – 2 நாளா. 30:18
இக்கோத்திரத்தில் தோலா என்பவன் பிரபலமானவன் – நியா.10:1
இக்கோத்திரத்தில் பாஷா என்பவன் முக்கியமானவன் – 1 இரா.15:27

# 6. செபுலோன் கோத்திரம்

## (The Tribe of Zebulun)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் ஆறாம் மகனின் வம்சம் – ஆதி.30:19
லேயாளிடத்தில் பிறந்தவன் – ஆதி.30:20
யாக்கோபு செபுலோனை ஆசீர்வதித்தான் – ஆதி.49:13

**இவர்களது கோத்திரம் :**

மோசே இக்கோத்திரத்தை ஆசீர்வதித்து முன்னுரைத்தான் –உபா.33:18–19
எலியாப் இவர்கள் கோத்திரத்து தலைவனாயிருந்தான் – எண்.1:9; 10:16
கானானை வேவு பார்க்க காதியேல் சென்றான் – எண்.13:10
கானானை பங்கிட எலிசாப்பான் தெரிந்து கொள்ளப்பட்டான் – எண்.34:25
கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 57,400 பேர் – எண்.1:31
பாளயத்தில் முதலாம் பிரிவில் இருந்தவர்கள் – எண்.10:14–17
கூடாரத்து கிழக்கில் யூதாக்கு அருகில் பாளயமிறங்கியவர்கள் – எண்.2:3,7
கூடாரத் திறப்பின்போது காணிக்கைப் படைத்தவர்கள் – எண்.7:24–29
இவர்கள் கோத்திரத்தாரின் குடும்பங்கள் – எண்.26:26–27
இவர்கள் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள் 60,500 பேர் – எண்.26:27
இவர்கள் சாபம் கூறுகிற பிரிவில் இருந்தார்கள் – உபா.27:13

**இவர்களது வாழ்க்கை :**

கடல்துறை அருகே குடியிருந்தவர்கள் – ஆதி.49:13
எழுதுகோலை பிடிக்கும் கல்விமான்கள் நிறைந்தவர்கள் – நியா.5:14
அவர்கள் சுதந்தரித்த பூமியின் எல்லை விவரங்கள் – யோசு.19:10–16
கானானியரை துரத்தாமல் வரிக்கட்ட வைத்தவர்கள் – நியா.1:30
சிசேராவை எதிர்க்க தெபொராவுக்கு உதவியர்கள் – நியா.5:18
மீதியானியரை எதிர்க்க கிதியோனோடு இணைந்தவர்கள் – நியா.6:35
ஏலோன் இஸ்ரவேலுக்கு நியாயாதிபதியாய் இருந்தான் – நியா.12:11–13
பலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் பங்கேற்றனர் – 1 நாளா.12:33
இஸ்மாயா இக்கோத்திரத்துக்கு தலைவனாயிருந்தான் – 1 நாளா.27:19
சிலர் எசேக்கியாவின் புரட்சிக்கு உதவினர் – 2 நாளா.30:10,11,18
இயேசுவின் ஊழியத்தால் ஆசீர்வதிக்கப்பட்ட இடம் – ஏசா.9:1; மத்.4:13–15

# 7. பென்யமீன் கோத்திரம்

## (Tribe of Benjamin)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் 12ம் மகன் பென்யமீன் என்பவனின் வம்சம் – ஆதி.35:16–18
இவனது தாய் ராகேல் இவனுக்கு பெனொனி என பெயரிட்டாள் – ஆதி.35:18
இவனது தகப்பனோ இவனுக்கு பென்யமீன் என பெயரிட்டான் – ஆதி.35:18
யோசேப்பு இவனை மிகவும் நேசித்தான் –ஆதி.43:29–34
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – ஆதி.49:27

மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:12
இவர்கள் கோத்திரத் தலைவனாக அபீதான் இருந்தான் – எண்.1:11
கானானை வேவு பார்க்க பல்த்தி என்பவன் சென்றான் – எண்.13:9
கானானை பங்கிட்டு கொடுக்க எலிதாத் என்பவன் இருந்தான் – எண்.34:21
கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 35,400 பேர் – எண்.1:36–37
இவர்கள் சேனைக்கு அபீதான் தலைவனாய் இருந்தான் – எண்.10:24
பாளையத்தில் மூன்றாம் பிரிவாக சென்றவர்கள் – எண்.2:22–24
கூடார சிறப்பு விழாவில் காணிக்கை படைத்தனர் –எண்.7:60–65
பென்யமீன் குடும்பத்தாரின் பட்டியல் – எண்.26:38–41
இக்கோத்திரத்தாரில் 45,600 பேர் கானானுக்குள் சென்றனர் – எண்.26:41
மக்களை ஆசிர்வதிக்கிற கோத்திரங்களில் இவர்களும் ஒருவர் – உபா.27:12
இவர்கள் கோத்திரத்தாருக்கு கிடைத்த எல்லைகள் – யோசு.18:11–28

**இவர்கள் வரலாறு :**

சவுலின் வில் வீரன் இவர்கள் கோத்திரத்தைச் சேர்ந்தவன் – 1 நாளா.12:2
சிசெராவுக்கு இக்கோத்திரத்தார் பின் சென்றனர் – நியா.5:14
அம்மோன் புத்திரர் இவர்கள்மீது யுத்தத்திற்கு வந்தார்கள் – நியா.10:9
கிபியாவின் மனிதர்கள் இவர்களை அடியோடு அழித்தனர் – நியா.20:12–48
மீதியாயிருந்த மக்களுக்கு மனைவிகளை தேடினர் – நியா. 21:1–23
இவர்கள் கோத்திரத்திலிருந்து முதல் இராஜா தேர்ந்தெடுக்கப்பட்டான்
– 1 சாமு. 9:15–17; 10:20,21
தாவீதுக்கெதிராக சவுலோடு இணைந்து செயல்பட்டனர் –2 சாமு.2:15,25,31
இக்கோத்திரத்தார் சிலர் தாவீதுக்கு உதவினர் – 2 நாளா.12:1–7,16
சிலர் சவுல் வீட்டாருக்கு எதிராக கலகம் செய்தனர் – 2 சாமு.3:19
சிலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் பங்கேற்றனர் – 1 நாளா.12:29
தாவீதை சந்திக்க சீமேயியுடன் 1000 பேர் சென்றனர் – 2 சாமு.19:16–17
தாவீதின் நாட்களில் இவர்கள் மிகக் குறைவாய் இருந்தனர் – 1 நாளா.7:6–12
இவர்களில் சிலர் தலைவர்களாகவும் இருந்தனர் – 1 இரா.4:18; 1 நாளா.27:12
யூதா ராஜ்யத்திற்கு நம்பிக்கைக்குரியவர்களாக இருந்தனர் – 1 இரா.12:21
சிறையிருப்பிலிருந்து திரும்பியவர்கள் இருந்தார்கள் – எஸ்றா.1:5; நெகே.11:4

**இவர்கள் முக்கிய மனிதர்கள் :**

எலியாதா என்றவனிடம் 2,00,000 வீரர்கள் இருந்தனர் – 2 நாளா.17:17
யோசபாத்திடம் 1,80,000 ஆயுதபாணிகள் இருந்தனர் – 2 நாள.17:17–18
ஏகூத் எனும் நியாயாதிபதி இவர்கள் கோத்திரத்தை சேர்ந்தவன் – நியா. 3:15
கீஸ் எனும் பராக்கிரமசாலி இவர்கள் கோத்திரத்தான் – 1 சாமு.9:1
சவுல் என்னும் தலைவன் இவர்கள் கோத்திரத்தான் – 1 சாமு.9:2; 10:1

அப்னேர் என்ற பராக்கிரமசாலி இக்கோத்திரத்தான் – 1 சாமு.14:51; 17:55
எல்க்கானான் என்பவன் வீரன் இவர்கள் கோத்திரத்தான் – 2 சாமு.21:19
புதிய ஏற்பாட்டின் பவுல் இவர்கள் கோத்திரத்தை சேர்ந்தவன் – பிலி.3:5

# 8. தாண் கோத்திரம்
## (The Tribe of Dan)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் ஐந்தாம் மகன் தாண் என்பவனின் வம்சம் – ஆதி.30:6
யாக்கோபுக்கும் பில்காளுக்கும் பிறந்த மகன் – ஆதி.30:5–6
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – ஆதி.49:16–17
மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:22

**இவர்களது கோத்திரம் :**

இக்கோத்திரத்தில் அகியேசேர் தெரிந்துகொள்ளப்பட்டான் – எண்.1:12
இவர்களில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 62,700 பேர் – எண்.1:39
இவர்களில் கானானை வேவு பார்க்க அம்மியேல் சென்றான் – எண்.13:12
புக்கி என்பவன் கானானை பங்கிட நியமிக்கப்பட்டான் – எண். 34:22
இக்கோத்திரத்தில் பாளையமிறங்கியவர்கள் 1,57,600 பேர் – எண்.2:31
இவர்கள் பாளையத் தலைவனாக அகியேசேர் இருந்தான் – எண்.10:25
ஆசரிப்பு கூடாரத்தில் வடபுறம் இவர்களுக்கு ஒதுக்கப்பட்டது – எண்.2:25
இவர்கள் கூடார திறப்பின்போது காணிக்கை படைத்தனர் – எண்.7:66–71
இவர்களில் 64,400 பேர் கானானுக்குள் சென்றனர் – எண்.26:42–43
சாபம் கூறுகிற கூட்டத்தில் இடம் பெற்றனர் – உபா.27:13
எல்லைகளை சுதந்தரிக்க 7வது சீட்டு விழுந்தது – யோசு.19:40–46

**இவர்களது வாழ்க்கை :**

கடல்கடந்த வியாபாரங்களில் கவனம் செலுத்தினர் – நியா.5:17; எசே.27:19
எமோரியர்களால் தாக்கப்பட்டனர் – நியா.1:34
புது சுதந்திரம் கிடைக்க இடம் தேடினர் – நியா.18:1–2
இவர்களது எல்லை வசதியில்லாமல் இருந்தது – யோசு.19:47
லாயீஸ் நாட்டை உளவு பார்க்க சென்றார்கள் – நியா.18:7–29
மீகாவில் விக்கிரகங்களை சூறையாடினர் – நியா.18:17–27
மீகாவின் விக்கிரகங்களை தங்களிடம் வைத்துக்கொண்டனர் – நியா.18:30–31
சிசேராவை எதிர்க்க உதவி செய்யாதவர்கள் – நியா.5:17
பராக்கிரமசாலி சிம்சோன் தாண் கோத்திரத்தை சேர்ந்தவன் – நியா.13:2,24,25

தாவீதின் முடிசூட்டு விழாவில் வீரர்கள் கலந்து கொண்டனர் – 1 நாளா.12:35
இவர்களில் சிலரை தாவீது தலைவனாக்கினான் – 1 நாளா.27:22

# 9. நப்தலி கோத்திரம்
## (The Tribe of Naphtali)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் ஆறாம் மகன் நப்தலி வம்சம் – ஆதி.30:7–8
யாக்கோபுக்கும் ராகேலின் வேலைக்காரி பில்காளுக்கும் பிறந்த மகன்– ஆதி.30:8
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னுரைத்தான் – ஆதி.49:21
மோசே இக்கோத்திரத்தை ஆசீர்வதித்தான் – உபா.33:23
இக்கோத்திர தலைவனாக அகீரா இருந்தான் – எண்.1:15
கானானை வேவு பார்க்க நாகபி தெரிந்துகொள்ளப்பட்டான் – எண்.13:14
கானானை பங்கிட பெத்தாக்கேல் தெரிந்துகொள்ளப்பட்டான் – எண்.34:28
இக்கோத்திரத்தில் எண்ணப்பட்ட புருஷர்கள் 53,400 பேர் – எண்.1:42,43
இஸ்ரவேல் பயணத்தில் 4–வது பிரிவாக பாளையமிறங்கியவர்கள் – எண்.10:25,27
கூடார வடப்பகுதியில் பாளையமிறங்கியவர்கள் – எண்.2:25,29
கூடார திறப்பு விழாவில் காணிக்கைப் படைத்தார்கள் – எண்.7:78–83
இவர்களது குடும்ப விவரங்கள் – எண்.26:48–49
கானானுக்குள் நுழைந்தவர்கள் 45,400 பேர் – எண்.26:50
இவர்கள் சாபம் கூறுகிற கூட்டத்தில் இருந்தனர் – உபா.27:13
இவர்களுக்கு கிடைத்த எல்லைகள் – யோசு.19:32–39
இவர்கள் கானானியர் நடுவில் குடியிருந்தனர் – நியா.1:33
இவர்களில் பலர் சிசேராவை எதிர்க்க பாராக்குடன் சென்றனர் – நியா.4:6,10
சிசேராவை எதிர்க்க இவர்கள் துணிந்து உதவி செய்தனர் – நியா.5:18
மீதியானியரை எதிர்க்க கிதியோனுடன் இணைந்து சென்றனர் – நியா.7:23
பலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டனர் –1 நாளா.12:34
இவர்களில் பலரை தாவீது பதவியில் அமர்த்தினான் – 1 நாளா.27:19
சாலொமோனும் இவர்களுக்கு பதவிகளைக் கொடுத்தான் – 1 இரா.4:15
பெனாதாத் இவர்களை பழிவாங்கினான் – 1 இரா.15:20
யோசியாவால் இவர்கள் விக்கிரகங்களெல்லாம் தகர்க்கப்பட்டன –2 நாளா.34:4–6
இவர்கள் திகிலாத்பிலேசர் இராஜாவால் சிறைபிடிக்கப்பட்டனர் – 2 இரா.15:29
பாராக் என்பவன் இவர்களில் முக்கிய மனிதனாய் இருந்தான் – நியா.4:6
ஈராம் என்பவன் இவர்களில் பெயர்பெற்றவனாய் இருந்தான் – 1 இரா.7:13,14
இயேசுவின் ஊழியத்தில் குறிப்பிடத்தக்கவர்கள் – ஏசா.9:1–2; மத்.4:13–15

# 10. காத் கோத்திரம்
## (The Tribe of Gad)

**இவர்கள் வம்சம் :**

| | |
|---|---|
| யாக்கோபின் ஏழாவது மகன் காத் என்பவனின் வம்சம் | – ஆதி.30:11 |
| லேயாளின் வேலைக்காரி சில்பாளிடம் பிறந்தவன் | – ஆதி.30:10 |
| யாக்கோபு காத்தை ஆசீர்வதித்தான் | – ஆதி.49:19 |
| மோசே காத் கோத்திரத்தை ஆசீர்வதித்தான் | – உபா.33:20–21 |
| இக்கோத்திரத் தலைவனாக எலியாசாப் நியமிக்கப்பட்டான் | – எண்.1:14 |
| கானானை வேவு பார்க்க கூவேல் நியமிக்கப்பட்டான் | – எண்.13:15 |
| இக்கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 45,650 பேர் | – எண்.1:25 |
| பாளையத்தில் 2ம் பிரிவில் கடைசியாய் சென்றவர்கள் | – எண்.10:18–20 |
| கூடாரத்தில் தென் பகுதியில் பாளையம் இறங்கியவர்கள் | – எண். 2:10–14 |
| கூடாரத் திறப்பின்போது காணிக்கை படைத்தார்கள் | – எண்.7:42–47 |
| இக்கோத்திரத்தாரின் குடும்பங்கள் | – எண்.26:15–18 |
| இவர்களில் கானானுக்குள் நுழைந்தவர்கள் 40,500 பேர் | – எண்.26:18 |
| இவர்கள் சாபம் கூறுகிற அணியில் இருந்தவர்கள் | – உபா.27:13 |

**இவர்களது வாழ்க்கை :**

| | |
|---|---|
| இக்கோத்திரத்தாருக்கு ஆடு மாடுகள் திரளாய் இருந்தன | – எண்.32:1 |
| யோர்தானின் கிழக்குப் பகுதியை சுதந்தரித்தவர்கள் | – எண்.32:1–33 |
| இக்கோத்திரத்தாருக்கு கிடைத்த எல்லைகள் | – யோசு.13:24–28 |
| இக்கோத்திரத்தார் கட்டின பட்டணங்கள் | – எண்.32:34–36 |
| இவர்கள் கானானை பிடிப்பதற்கு உதவியவர்கள் | – யோசு.4:12–13 |
| கானானை வென்றபின் தங்கள் பகுதிக்கு திரும்பினார்கள் | – யோசு.22:9 |
| இவர்கள் தங்களுக்கென ஒரு பலிபீடம் கட்டினார்கள் | – யோசு.22:10–34 |
| இஸ்ரவேலரில் பலர் காத் நாட்டில் அடைக்கலம் புகுந்தனர் | – 1 சாமு.13:7 |
| இக்கோத்திர பராக்கிரமசாலிகள் தாவீதோடு இணைந்தனர் | – 1 நாளா.12:8–11 |
| பலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் பங்கேற்றனர் | – 1 நாளா.12:37–38 |
| இவர்கள்மீது தாவீது சில தலைவர்களை நியமித்தான் | – 1 நாளா.26:32 |
| இவர்கள் ஆகாரியரோடு போரிட்டு வென்றனர் | – 1 நாளா.5:18–22 |
| சீரியாவில் ஆசகேல் ராஜா இவர்களை முறியடித்தான் | – 2 இரா.10:32–33 |
| ஆசீரியாவிற்கு இவர்கள் சிறைபிடித்து போகப்பட்டனர் | – 1 நாளா.5:22,26 |
| இவர்கள் நிலங்களை மோவாப்பியரும் அம்மோனியரும் பிடித்துக்கொண்டனர் | – எரே. 49:1 |

# 11. ஆசேர் கோத்திரம்

## (The Tribe of Asher)

**இவர்கள் வம்சம் :**

யாக்கோபின் எட்டாவது மகன் ஆசேர் என்பவனின் வம்சம் – ஆதி.30:13
லேயாளின் வேலைக்காரி சில்பாள் பெற்ற இரண்டாம் மகன் – ஆதி.30:12
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – ஆதி.49:20
மோசே இவர்களைக் குறித்து முன்னறிவித்தான் – உபா.33:24–25
கோத்திரத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 41,500 பேர் – எண்.1:40–41
பாகியேல் இவர்கள் கோத்திரத்தின் தலைவனாயிருந்தான் – எண்.1:13
இவர்கள் கோத்திர சார்பாக சேத்தூர் வேவு பார்க்க சென்றான் – எண்.13:13
கானானை பங்கிட அகியூத் என்பவன் பிரபுவாய் இருந்தான் – எண்.34:27
இஸ்ரவேலரின் பயணத்தில் பாகியேல் தலைவனாய் இருந்தான் – எண்.10:26
பாகியேல் ஆசேர் சந்ததிக்கு சேனாபதியாய் முன்சென்றான் – எண்.2:27
ஆசரிப்பு கூடார திறப்பில் பாகியேல் காணிக்கை செலுத்தினான் – எண்.7:72–77
ஆசேருடைய குடும்ப வம்சங்கள் – எண்.26:44–47
இவர்களில் கானானுக்குள் சென்றவர்கள் 53,400 பேர் – எண்.26:47
ஆராதனையில் சாபங்கூறப்படும்பொழுது நிற்கவேண்டியவர்கள் – உபா.27:13
ஐந்தாம் சீட்டு விழுந்து எல்லைகளை பங்கிட்டுக் கொண்டனர் – யோசு.19:24–31

# 12. மனாசே கோத்திரம்

## (The Tribe of Manasseh)

**இவர்கள் வம்சம் :**

யோசேப்பின் மூத்த குமாரன் மனாசேயின் வம்சத்தார் – ஆதி.41:51
யாக்கோபு இவனை தன் வம்சத்தில் சேர்த்துக் கொண்டான் – ஆதி.48:5
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னுரைத்தான் – ஆதி.48:20; 49:22–26

**இவர்களது கோத்திரம் :**

மோசே இக்கோத்திரத்தை ஆசீர்வதித்து முன்னுரைத்தான் –உபா.33:13–17
இக்கோத்திரத்தின் தலைவனாக கமாலியேல் நியமிக்கப்பட்டான் – எண்.1:10
இவர்கள் கோத்திரத்தில் எண்ணப்பட்டவர்கள் 32,200 பேர் – எண்.2:21
கானானை வேவு பார்க்க காதி நியமிக்கப்பட்டான் – எண்.13:11
கானானை பிரித்து தர அன்னியேல் நியமிக்கப்பட்டான் – எண்.34:23
பாளையத்தில் மூன்றாம் பிரிவில் சென்றவர்கள் – எண்.10:22–23
ஆசரிப்பு கூடாரத்தின் மேற்குப் பகுதியில் எப்பிராயீம் கோத்திரத்திற்கு

அடுத்ததாய் பாளையம் இறங்கினார்கள் – எண்.2:18–20
கூடாரத் திறப்பின்போது காணிக்கைப் படைத்தார்கள் – எண்.7:54–59
இக்கோத்திரத்தாரின் குடும்பங்கள் – எண்.26:29–34
இவர்களில் கானானுக்குள் நுழைந்தவர்கள் 52,700 பேர் – எண்.26:34
இவர்கள் ஆசீர்வாதம் கூறுகிற அணியில் இருந்தார்கள் – உபா.27:12
இக்கோத்திரத்தாரில் பாதிபேர் யோர்தானின் கிழக்குப்பகுதியை பெற்றனர் – எண்.32:33, 39–42; யோசு.13:29–31
மீதி பாதி கோத்திரத்தார் கானானில் குடியேறினர் – யோசு. 17:1–11
இவர்கள் கானானியரை துரத்தி விடாமல் அவர்களை தங்களுக்கு வரி கட்டுகிறவர்களாக்கிக் கொண்டனர் – யோசு.17:12–13; நியா.1:27–28
இவர்களில் சிலர் தாவீதுக்கு உதவி சவுலை எதிர்த்தனர் –1 நாளா.12:19–21
பலர் தாவீதின் முடிசூட்டு விழாவில் பங்கேற்றனர் – 1 நாளா.12:31–37
இவர்கள் ஆசாவின் ஆட்சியில் இணைந்தனர் – 2 நாளா.15:9
பஸ்காவை ஆசரிக்க எசேக்கியாவோடு இணைந்தனர் – 2 நாளா.30:1,11,18
இவர்களில் சிலரை தாவீது தலைவர்களாக்கினான் –1 நாளா.26:32; 27:20,21
எப்பிராயீம் கோத்திரத்தோடு சண்டையிட்டனர் – நியா.12:1,6; ஏசா.9:21
எசேக்கியா, யோசியாவின் நாட்களில் இம்மக்கள் வழிபட்ட விக்கிரகங்கள் அகற்றப்பட்டன – 2 நாளா. 31:1; 34:3–6

**இக்கோத்திரத்தில் முக்கியமானவர்கள் :**

செலோப்பியாத்தின் மகள்கள் குறிப்பிடத்தக்கவர்கள் – எண்.27:1–7
கிதியோன் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – நியா.6:15
அபிமெலேக் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – நியா.9:1
யோதாம் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – நியா.9:5,7,21
யாவீர் இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – நியா.10:3
யெப்தா இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – நியா.11:1
பர்சிலா இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – 2 சாமு.17:27
எலியா தீர்க்கதரிசி இக்கோத்திரத்தைச் சேர்ந்தவன் – 1 இரா.17:1

# 13. எப்பிராயீம் கோத்திரம்

## (The Tribe of Ephraim)

**இவர்கள் வம்சம் :**

யோசேப்பின் 2ம் மகன் எப்பிராயீம் என்பவனின் வம்சம் –ஆதி.41:52
யாக்கோபு இவனை தன்னுடையவன் என்றான் – ஆதி.48:5
யாக்கோபு இவனை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – ஆதி.48:20

மோசே இவர்களை ஆசீர்வதித்து முன்னறிவித்தான் – உபா.33:13–17
இக்கோத்திர தலைவனாக எலிஷாமா தேர்ந்தெடுக்கப்பட்டான் – எண்.1:10
கானானை வேவு பார்க்க ஓசேயா தெரிந்துகொள்ளப்பட்டான் – எண்.13:8
தேசத்தை பங்கிட கேமுவேல் தெரிவு செய்யப்பட்டான் – எண்.34:24
இவர்கள் வம்சத்தில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்கள் 40,500 பேர் இராஜா – எண்.1:33
இவர்கள் மூன்றாவது அணியாக பாளையமிறங்கியவர்கள் – எண். 10:22
ஆசரிப்பு கூடாரத்திற்கு மேற்கே இருந்தவர்கள் – எண்.2:18
ஆசரிப்பு கூடார திறப்பு விழாவில் காணிக்கை படைத்தவர்கள் – எண்.7:48–53
குடும்பங்களும் அதில் யுத்தத்திற்கு எண்ணப்பட்டவர்களும் – எண்.26:35–36
ஆசீர்வதிக்கிற கூட்டத்தில் நின்றவர்கள் – உபா.27:12
இவர்கள் வம்சத்தாருக்கு கிடைத்த எல்லைகள் – யோசு.16:5–9

## இவர்களது வாழ்க்கை :

கானானியரை துரத்தாமல் அவர்களை கப்பம் கட்ட செய்தனர் –யோசு.16:10
பெத்தேலுக்கு விரோதமாய் போரிட்டார்கள் – நியா.1:22–25
அமலேக்கியருக்கு விரோதமாய் போரிட்டார்கள் – நியா.5:14
மீதியானியர்களுக்கு விரோதமாய் போரிட்டார்கள் – நியா.7:24–25
போரிட ஏன் அழைக்கவில்லையென கிதியோனை கேட்டனர் –நியா.8:1–3
போரிட ஏன் அழைக்கவில்லையென யெப்தாவை கேட்டனர் – நியா.12:1–4
கீலேயாத்தியரால் இவர்களில் 42,000 பேர் வீழ்த்தப்பட்டார்கள் –யோ.12:5,6
தாவீதின் முடிசூட்டுவிழாவிற்கு 24,800 வீரர்கள் பங்கேற்றனர் – 1 நாளா.12:30
இவர்களிலிருந்து தாவீது தலைவர்களை தெரிந்தெடுத்தான் – 1நாளா.27:10,20
இஸ்ரவேல் அரசில் இவர்கள் பெரும்பான்மையாக இருந்தனர் – எரே. 31:9,20
இவர்களில் பலர் யூதா அரசின் ஆசாவின் பக்கம் சென்றனர் – 2 நாளா.15:9
சீலோவில் ஆசரிப்பு கூடாரத்தை கட்டினர் – யோசு.18:1; 19:51
இக்கோத்திரத்தார் இருந்த பெத்தேலில் யெரொபெயாம் கன்றுக்குட்டி வைத்தான் –1 இரா.12:29–30
யோசுவா இவர்களது கோத்திரத்தை சேர்ந்தவன் – எண்.13:8; யோசு.1:1
அப்தோன் இவர்கள் கோத்திரத்தை சேர்ந்தவன் – நியா.12:13–15
சிக்ரி இவர்கள் கோத்திரத்தை சேர்ந்தவன் – 2 நாளா.28:7

# இதர கூட்டத்தினர் பற்றிய குறிப்புகள்

# 14. இஸ்மவேலர்கள்

## (The Ishmaelites)

**இவர்கள் வம்சம் :**

ஆபிரகாமுக்கும் ஆகாருக்கும் பிறந்த இஸ்மவேலின் வம்சம் – ஆதி.16:15

இவனது வம்சம் 12 கோத்திரங்களாக பிரிந்தது – ஆதி.25:12–17; 1 நாளா.1:28–31

இவர்கள் 12 பிரபுக்களின்கீழ் குடியிருந்தனர் – ஆதி.25:12–17; 1 நாளா.1:28–31

இவர்கள் ஆகாரியர்கள் என அழைக்கப்பட்டனர் – 1 நாளா.5:10; சங்.83:5

இவர்கள் இஸ்மவேலர் என்றும் அழைக்கப்பட்டனர் – சங்.83:5

இவர்கள் அரபியன் (ஆகாரின் சந்ததியார் ஆகாரியர்கள் என்று இஸ்மவேலின் வம்சத்தார் இஸ்மவேலர் என்றும் அழைக்கப்பட்டனர். இவ்விரு கூட்டத்தாரும் இணைந்த சந்ததியே அரபியர்களாவர்) என்றும் அழைக்கப்பட்டனர் – ஏசா.13:20

**இவர்கள் தேசம் :**

இவர்கள் ஆவிலா தொடங்கி எகிப்துக்கு எதிராக அசீரியாவுக்குப் போகிற வழியில் இருக்கும் சூர் மட்டும் வாசம் பண்ணினார்கள் – ஆதி.25:18

இவர்கள் தேசம் அரபி தேசம் என்று அழைக்கப்பட்டது – எரே.25:24

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – எரே.25:24

இவர்கள் மாகாணங்கள் அதிபதிகளால் ஆளப்பட்டன – 2 நாளா.9:14

இவர்கள் கூடாரங்களில் வசித்து வந்தனர் – ஏசா.13:20

இவர்கள் மந்தை மேய்ப்பதில் புகழ் பெற்றிருந்தனர் – 1 நாளா.5:21; ஏசா.13:20

பொன் ஆபரணங்கள் அதிகம் வைத்திருந்தனர் – நியா.8:24

பலர் எகிப்தை மையமாகக் கொண்டு வியாபாரம் செய்தனர் – ஆதி.37:25

மொத்த வியாபாரத்தில் கைத்தேர்ந்திருந்தனர் – ஆதி.37:25; எசே.27:20,21

இஸ்மவேலர் மீதியானியர் இணைந்து வியாபாரம் செய்தனர் – ஆதி.37:25,28

வனாந்தரங்களில் தங்கியிருந்து பயணப்பட்டனர் – எரே.3:2

இவர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய் கூடியவர்கள் – சங்.83:5–7

கிதியோன் இவர்களை மேற்கொண்டான் – நியா.8:10–24

ரூபனியர், காத்தியர் இவர்களை மேற்கொண்டார்கள் – 1 நாளா.5:10,18–20

உசியா இவர்களை மேற்கொண்டான் – 2 நாளா.26:7

இவர்கள் சாலொமோனுக்கு பரிசுகளை கொடுத்தார்கள் – 2 நாளா.9:14

யோசபாத்துக்கு ஆடுகளை காணிக்கையாக அனுப்பினர் – 2 நாளா.17:11

**இவர்களைக் குறித்த முன்னறிவிப்புகள் :**

இவர்கள் சந்ததியை பெருகப்பண்ணுவேன் – ஆதி.16:10
இவர்கள் சந்ததி எண்ணி முடியாததாய் இருக்கும் – ஆதி.16:10
அவனை (இஸ்மவேல்) ஆசீர்வதித்து பெருகப்பண்ணுவேன் – ஆதி.17:20
அவன் (இஸ்மவேல்) 12 பிரபுக்களை பெறுவான் – ஆதி.17:20
அவன் துஷ்ட மனுஷனாய் இருப்பான் – ஆதி.16:12
அவன் கை எல்லாருக்கும் விரோதமாய் இருக்கும் – ஆதி.16:12
எல்லாருடைய கை அவனுக்கு விரோதமாய் இருக்கும் – ஆதி.16:12
தன் சகோதரர் எல்லாருக்கும் எதிராக குடியிருப்பான் – ஆதி.16:12
அவனையும் ஒரு ஜாதியாக்குவேன் – ஆதி.21:13,18
மற்ற தேசங்களோடு இவர்கள் நியாயம் தீர்க்கப்படுவர் – எரே.25:23–25
இவர்கள் புகழ் மங்கி குறைந்து போகும் – ஏசா.21:13–17
இவர்கள் கிறிஸ்துவை அறிந்து அவரை பணிவர் – சங்.72:9–15
பவுல் அப்போஸ்தலன் இவர்கள் தேசத்திற்கு சென்றான் – கலா.1:17

# 15. மோவாபியர்கள்

## (Moabites)

**இவர்கள் வம்சம் :**

லோத்துக்கும் அவன் மூத்த மகளுக்கும் பிறந்த மோவாப்பின் வம்சம்– ஆதி.19:37
இவர்கள் லோத்தின் புத்திரர்கள் என்று அழைக்கப்பட்டார்கள் – உபா.2:9
கேமோஷ் தேவனின் மக்கள் என்றும் அழைக்கப்பட்டார்கள் – எண். 21:29; எரே.48:46
இவர்களுக்கு தனியாக குடியிருக்கும் எல்லை இருந்தது – உபா.2:9
அர்னோன் ஆறு பிரிக்கும் எல்லையில் இருந்தனர் – எண்.22:13
பெரிய நகரங்களை கைப்பற்றியவர்கள் – எண்.21:28,30; ஏசா.15:1–4
இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – எண்.23:7; யோசு.24:9

**இவர்களது குணநலன்கள் :**

இவர்கள் பெருமையும் மேட்டிமையும் அகங்காரமும் கோபமும், வீம்பும் நிறைந்த மக்களாய் இருந்தனர் – ஏசா.16:6
விக்கிரக ஆராதனைக்காரர்களாய் இருந்தனர் – 1 இரா.11:7
குறி சொல்லுதல், நாள் பார்த்தல், சூனியக்காரரிடம் செல்லுதல், சொப்பனக் காரரிடம் செல்லுதல் போன்றவற்றை கடைபிடித்தனர் – எரே.27:9
மிகுந்த செல்வ செழிப்போடு இருந்தனர் – எரே.48:7
சுகபோகமாய் வாழ்ந்தனர் – எரே.48:11
போரில் பராக்கிரமசாலிகளாய் திகழ்ந்தனர் – எரே.48:14

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

எமோரியரின் இராஜாவால் இவர்கள் சூறையாடப்பட்டார்கள் – எண்.21:26
இஸ்ரவேலரை தங்கள் வழியே கடந்து செல்ல அனுமதிக்காதவர்கள் – நியா.11:17–18
இஸ்ரவேலரின் மக்கள் தொகையைக் கண்டு கலங்கியவர்கள் – எண்.22:3
பீலேயாமை அனுப்பி சபிக்க கேட்டவர்கள் – எண்.22:1–24:25
இவர்கள் இஸ்ரவேலரை விக்கிரகத்தால் கெடுத்தனர் – எண்.25:1–3
இவர்களது எல்லைகள் இஸ்ரவேலருக்கு கொடுக்கப்படவில்லை – உபா.2:9
இவர்களோடு இஸ்ரவேலர் கலப்புத் திருமணம் செய்தனர் – ரூத்.1:4; 1நாளா.8:8; 1இரா.11:1
கர்த்தருடைய சபைக்கு உட்படக்கூடாதவர்கள் – உபா.23:3,4; நெகே.13:1,2
இஸ்ரவேலரோடு எப்பொழுதும் பகையைக் காட்டினர் – எசே.25:8
சவுல் இவர்களை அடக்கி ஆண்டான் – 1 சாமு.14:47
இவர்கள் தாவீதுக்கு அடைக்கலம் கொடுத்தனர் – 1 சாமு.22:4
தாவீதுக்குக் கப்பம் கட்டும் மக்களாயினர் – 2 சாமு.8:2,11
மேசா ராஜா இஸ்ரவேல் ராஜாவுக்குக் காணிக்கை கொடுத்தான் – 2 இரா.3:4
ஆகாப் மரித்தபின் இஸ்ரவேலருக்கு எதிராகக்கலகம் செய்தனர் – 2 இரா.1:1; 3:5
இஸ்ரவேலும் யூதாவும் இவர்களுக்கு எதிராக வந்தனர் – 2 இரா.3:6–7
தண்ணீரின் நிறத்தால் யுத்தத்தில் ஏமாந்தனர் – 2 இரா.3:21–24
இஸ்ரவேலராலும் யூதாவாலும் தோற்கடிக்கப்பட்டனர் – 2 இரா.3:24–26
இஸ்ரவேலருக்கு எதிராக தன் மகனையே பலியிட்டார்கள் – 2 இரா.3:27
யூதாவுக்கு எதிராக யுத்தம் செய்யக்கூடி வந்தனர் – 2 இரா.24:2

**இவர்களைக் குறித்த முன்னறிவிப்பு :**

இஸ்ரவேலரைக் குறித்து அஞ்சி நடுங்குவார்கள் – யாத்.15:15
இவர்கள் பாழ்பட்டு வருத்தப்படுவார்கள் – ஏசா.15:1–9; 16:2–11
இவர்களது அழிவைத் தடுக்க முடியாது – ஏசா.16:12
மூன்று வருடங்களுக்குள் அழிந்து போவார்கள் – ஏசா.16:13–14
பாபிலோனுக்குள் சிறைவைக்கப்படுவர் – எரே.27:3–8; 48:7
இவர்கள் இஸ்ரவேரை வெறுத்ததால் தண்டனை பெற்றனர் – எரே.48:26–27
சிறையிருப்பிலிருந்து விடுதலை பெற்றனர் – எரே.48:47
இஸ்ரவேலரால் கீழ்ப்படுத்தப்படுவர் – ஏசா.11:14
மேசியாவின் வருகையில் இவர்கள் அழிக்கப்படுவர் – ஏசா.25:10

# 16. அம்மோனியர்

## (The Ammonites)

**இவர்கள் வம்சம் :**

லோத்தின் இளையமகளின் மகன் பென்னம்மியின் சந்ததியே அம்மோனியர் – ஆதி.19:35–38
லோத்தின் புத்திரர்களே அம்மோனியர்கள் – ஆதி.19:35–38; உபா.2:19

**இவர்களது தேசம் :**

இவர்கள் சம்சூமியர் இனத்தோடு இணைந்திருந்தவர்கள் – உபா.2:20–21
அம்மோனியர் எல்லைகள் அரணிப்பாய் இருந்தது – எண்.21:24
அர்னோன் துவங்கி யாப்போக்குவரை தேசம் இருந்தது – எண்.21:24
ரப்பா என்ற பட்டணம் இவர்களுக்குப் புகழ்பெற்றதாய் இருந்தது –எரே.49:2
இந்நகரத்தின் அரமனை பெயர் பெற்றது – ஆமோ.1:14
ஆயி பட்டணம் புகழ்வாய்ந்ததாய் இருந்தது – எரே.49:3
இவர்களது பள்ளத்தாக்குகள் மிக செழிப்பாய் இருந்தது – எரே.49:4
காத் புத்திரருக்கு இவர்களின் தேசத்தில் பாதி பகிரப்பட்டது – யோசு.13:24–28
இவர்களது தேசத்தின் அழிவு குறித்து எரேமியா முன்னுரைத்தான்– எரே.49:1–6
இவர்களின்மீது அழிவுவருவதாய் ஆமோஸ்தீர்க்கன் முன்னுரைத்தான்– ஆமோ.1:13–15
இவர்களது முடிவை செப்பனியா தீர்க்கன் முன்னுரைத்தான் – செப்.2:8–10
இவர்களது அழிவைக்குறித்துஎசேக்கியல்தீர்க்கன் முன்னுரைத்தான் – எசே.25:1–7
கர்த்தர் இவர்களுக்கு எச்சரிப்பைக் கொடுத்தார் – எரே.27:1–8

**இவர்களது வாழ்க்கை :**

அம்மோன் புத்திர வம்சம் வளர்ந்துப் பெருகியது – எரே.25:21
அம்மோனியர்கள் பரம்பரை இராஜாக்களால் ஆளப்பட்டனர் – 2 சாமு.10:1

**இவர்களது குண நலன்கள் :**

இவர்கள் பாதகம் செய்கிற மக்கள் – ஆமோ.1:13
கீலேயாத் தேசத்து கர்ப்பவதிகளைக்கீறிப்போட்ட இரக்கமற்றவர்கள்– ஆமோ.1:13
இவர்கள் இஸ்ரவேலரை நிந்தித்தவர்கள் – செப். 2:8
இவர்கள் அகங்காரமுள்ளவர்கள் – செப்.2:10
எல்லை மீறி பெருமை பாராட்டி தூஷணம் பேசியவர்கள் – செப்.2:8
இவர்கள் கணக்கற்ற ஆபரணங்களைக்கண்டெடுத்தார்கள் – 2 நாளா.20:23–25
இவர்கள் தேவர்களை சேவித்தவர்கள் – நியா.10:6
மோளோகுக்கு தொழுகை நடத்தியவர்கள் –1 இராஜா.11:7
மில்கோம் என்ற கடவுளை வணங்கியவர்கள் –1 இராஜா. 11:33

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

இவர்கள் பரிசுத்தத்தலம் சீர்குலைந்தபோது சிரித்தவர்கள் – எசே.25:3
இஸ்ரவேல் தேசம் பாழாக்கப்படுகிறபோது மகிழ்ந்தவர்கள் – எசே.25:3
யூதா வம்சம் சிறைக்குச் சென்றபோது நிந்தித்தவர்கள் – எசே.25:3
இஸ்ரவேலருக்கு விரோதமாய் கைகொட்டி பூரித்தவர்கள் – எசே.25:6
இஸ்ரவேலர்மீது வர்மம் வைத்து ஆகடியம் பண்ணியவர்கள் – எசே.25:6
இவர்கள் கர்த்தருடைய சபைக்கு உட்படக்கூடாதவர்கள் – உபா.23:3
இஸ்ரவேலருக்கு உதவாது சபிக்க ஆள் தேடியவர்கள் – நெகே.13:1
இவர்களுடையதை இஸ்ரவேலர் தேடக்கூடாது – உபா.23:6

இவர்களது சுதந்தரத்தில் இஸ்ரவேலருக்குப் பங்கில்லை – உபா.2:19
இஸ்ரவேலர் இவர்களை விட்டு விலகிப்போக வேண்டும் – 2 நாளா.20:10
இவர்கள் அமலேக்கியரோடு இணைந்து இஸ்ரவேலரை எதிர்த்தவர்கள்– நியா.3:13
இஸ்ரவேலர் பாகாலை சேவித்தபோது தேவன் இஸ்ரவேலரை பெலிஸ்தர், அம்மோன் புத்திரர் கையில் 18 வருடங்கள் விற்றுப்போட்டார் –நியா.10:6–9
யெப்தா இஸ்ரவேலரை இவர்களிடமிருந்து மீட்டார் – நியா.10:15–18, 11:4–33
நாகாஸ் என்பவன் இஸ்ரவேலரிடம் இரக்கமற்று நடந்தான் –1 சாமு.11:1–3
சவுல் தலைமையில் இவர்கள் முறியடிக்கப்பட்டார்கள் – 1 சாமு.11:11
ஆனூன் என்ற அரசன் தாவீதின் ஆட்களை அவமானபடுத்தினான்–2 சாமு.10:1–4
இவர்கள் தாவீதுக்கு எதிராக ஆட்களைக் கூட்டியவர்கள் – 2 சாமு.10:6
இவர்கள் போரில் தோற்கடிக்கப்பட்டவர்கள் – 2 சாமு.10:7–14; 12:26–29
இவர்களது இராஜ கிரீடம் மற்றும் பொக்கிஷம் சூறையாடப்பட்டது–2 சாமு.12:30
இவர்களது ஜனங்கள் தாவீதால் அடிமைப்படுத்தப்பட்டார்கள் –2 சாமு.12:31
இவர்களது பொருட்கள் கர்த்தருக்குரியதாய் மாற்றப்பட்டது – 2 சாமு.8:11–12
அம்மோன் புத்திரரில் பலவான்கள் தாவீதின் சேவகராய் இருந்தனர்– 2 சாமு.23:37
சாலமோன் அம்மோனியப் பெண்களை மணந்தான் – 1 இரா.11:1–5
யோவாப் இவர்களைத் தோற்கடித்தான் – 1 நாளா.20:1; சங்.83:6–7
இவர்கள் அற்புதமாய் தோற்றுப்போனார்கள் –2 நாளா.20:5–24
உசியாவுக்கு இவர்கள் காணிக்கை கொடுத்தார்கள் – 2 நாளா.26:8
யோதாம் இவர்களைத் தோற்கடித்தான் – 2 நாளா.27:5
இவர்கள் காத்துடைய சுதந்தரத்தைக் கைப்பற்றிக்கொண்டவர்கள் – எரே.49:1
யூதாவுக்கு எதிராகக் களமிறங்கியவர்கள் – 2 இரா.24:2
இஸ்ரவேலர் கட்டிய அலங்கத்தை தொபியா அவமதித்தான் – நெகே.4:3,7,8
யூதர்கள் இவர்களது பெண்களை மணந்தனர் – எஸ்றா 9:1–3; நெகே.13:23–28
அம்மோனியர் பாபிலோனுக்கு அடிமையாக்கப்படுவதாய் முன்னுரைக்கப் பட்டது – எரே.25:9–21; 27:3,6
இவர்கள் இஸ்ரவேலருக்கு செய்தவைகளுக்காக தண்டனை பெறுவதாய் முன்னுரைக்கப்பட்டது – எசே.25:2–10; செப்.2:8,9
இவர்கள் சிறையிருப்பை மாற்றுவதாக கர்த்தர் கூறினார் – எரே.49:6
முடிவில் யூதர்களுக்கு அடிமைகளாவதாய் அறிவித்தார் – ஏசா.11:14

# 17. ஏதோமியர்கள்

## (The Edomites)

**இவர்கள் வம்சம் :**

ஈசாக்கின் மகன் ஏசாவிற்கு ஏதோம் என்றும் பெயர் – ஆதி.36:9
ஏசா ஏத்தியப்பெண்ணையும், ஏவியப்பெண்ணையும், இஸ்மவேல் பெண்ணையும்

மணமுடித்ததால் அவன் வம்சம் தனி வம்சமானது – ஆதி.36:2–3
ஈசாக்கின் மகன் ஏசாவின் வம்சத்தாரே ஏதோமியர்கள் – ஆதி.36:1,9
இவர்கள் ஏசாவின் புத்திரர்கள் என அழைக்கப்பட்டனர் – உபா.2:4

**இவர்கள் தேசம் :**

இவர்கள் சேயீர் மலைகளில் குடியிருந்தவர்கள் – ஆதி.36:8; உபா.2:4
இவர்கள் குடியிருந்த இடத்தை தேவனே இவர்களுக்கு கொடுத்தார் – உபா. 2:5
இவர்கள் பூமி செழிப்பாயிருக்குமென ஈசாக்கு ஆசீர்வதித்தான் – ஆதி.27:39
மலைகளின் வெடிப்பிலும் மேடுகளின் உச்சியிலும் வசித்தனர் – எரே.49:16; மல். 1:3
இவர்கள் தேசங்களில் சாலைகள் நன்றாய் இருந்தன – எண்.20:17
இவர்களது பட்டணங்கள் மிக பலத்த அரணானவைகளாக இருந்தன – சங்.60:9
இவர்கள் தேசத்திற்கு சேயீர் மலை என்ற மறுபெயர் இருந்தது –எசே.35:2
இவர்கள் தேசம் ஏசாவின் பர்வதம் என்றும் அழைக்கப்பட்டது – ஒபதி.1:21
இவர்கள் தேசம் தூமா என்றும் அழைக்கப்பட்டது – ஏசா.21:11
இவர்கள் தேசம் இதுமேயா என்றும் அழைக்கப்பட்டது – மாற்.3:8
இவர்கள் தேசம் ஏதோம் என்றும் அழைக்கப்பட்டது – ஏசா.63:1
தின்காபா என்ற பட்டணம் இவர்களுக்கு இருந்தது – ஆதி.36:32
தின்காபா பட்டணத்திற்கு தேதான் என்ற மறுபெயரும் உண்டு –எரே.49:8
ஆவித், பாகு, போன்ற பட்டணங்கள் விசேஷமானது – ஆதி.36:35–39
போஸ்றா பட்டணம் மிக உறுதியானது – எரே.49:22; ஆமோ.1:12
தேமான் அறிவாளிகள் நிறைந்த பட்டணம் – எரே.49:7; ஆமோ.1:12; எசே.25:13
எசியோன்கேபேர் கப்பல் கட்டும் துறைமுகப்பட்டணம் – 1 இரா.9:26

**இவர்களது ஆட்சி :**

இவர்கள் பிரபுக்களால் ஆளப்பட்டார்கள் – ஆதி.36:15–30; யாத்:15:15
பிறகு இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – ஆதி.36:31–39; எண்.20:14
சில காலம் அரசப்பிரதிநிதிகளால் ஆளப்பட்டார்கள் – 1 இரா.22:47
தோவேக் என்பவன் ஆசாரியர்களைக் கொன்று போட்டவன் – 1 சாமு.22:18
ஆதாத் என்பவன் சாலோமோனுக்கு எதிராக எழுந்தவன் – 1 இரா.11:14,19
எலிப்பாஸ் என்பவன் யோபுவின் நண்பன் – யோபு 2:11

**இவர்களது குணநலன்கள் :**

இவர்கள் அறிவும் ஞானமும் நிறைந்த மக்கள் – எரே.49:7
அகந்தையும் தன்னம்பிக்கையும் நிறைந்த மக்கள் – எரே.49:16; ஒபதி.1:3
இவர்கள் பராக்கிரமம் நிறைந்த இரக்கமற்ற மக்கள் – எரே.49:19
குரோதம் தீர்த்துப் பழிவாங்கி குற்றம் செய்கிற மக்கள் – எசே.25:12
விக்கிரக ஆராதனை செய்கிற மக்கள் – 2 நாளா.25:14,20
இவர்கள் மூடநம்பிக்கைகளில் பழக்கமுள்ள மக்கள் – எரே.27:3,9

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

இவர்கள் இஸ்ரவேலருக்கு மனமிரங்காத மக்கள் – 2 நாளா.20:10; எசே.35:5
எனினும் இஸ்ரவேலரால் வெறுக்கப்படக்கூடாதவர்கள் – உபா.23:7
இவர்கள் இஸ்ரவேலருக்கு பயப்படவேண்டியவர்கள் – உபா.2:4
இஸ்ரவேலர் இவர்களிடம் எச்சரிக்கையாய் இருந்தார்கள் – உபா.2:4
இவர்களோடு போர் செய்ய வேண்டாமென தேவன் சொன்னார் – உபா.2:5
இவர்களிடத்தில் பொருள் வாங்கலாமென தேவன் கூறினார் – உபா.2:6
இவர்களது மூன்றாம் தலைமுறை பிள்ளைகள் சபைக்கு வரலாம் – உபா.23:8
இஸ்ரவேலருக்கு வழி கொடுக்காததால் பிரிந்து போனார்கள் – எண்.20:21
ஏதோமின் ராஜா இஸ்ரவேலருக்கு உதவி செய்ய மறுத்தான் – நியா.11:17
சவுல் இவர்களுக்கு விரோதமாய் போரிட்டான் – 1 சாமு.14:47
இவர்கள் தாவீதை சேவித்தார்கள் – 2 சாமு.8:14; 1 நாளா.18:11,13
யோவாப்பும் அபிசாயும் இவர்களை சங்கரித்தனர் – 1 இரா.11:16; 1 நாளா.18:12
இவர்களில் எகிப்தில் தஞ்சமடைந்தனர் – 1 இரா.11:17–19
தாவீதின் மரணத்திற்குப் பின்பு திரும்பி வந்தனர் – 1 இரா.11:21–22
சாலமோனின் அரசுக்கு எதிரியாய் இருந்தனர் – 1 இரா.11:14
இவர்கள் கூட்டம் சேர்த்து கர்த்தரை எதிர்த்தார்கள் – சங்.83:4–6
யூதா மக்களின் துதி பாடலால் முறிந்தோடினார்கள் –2 நாளா.20:22
யூதாவின் ராஜா யோராமுக்கு எதிராக கலகம் செய்தனர்
– 2 இரா.8:20–22; 2 நாளா.21:8–10
அம்த்சியா இராஜாவால் தோல்வி கண்டார்கள் – 2 இரா.14:7,10; 2 நாளா.25:11,12
விக்கிரக ஆராதனையில் இஸ்ரவேலரை சிக்க வைத்தனர் – 2 நாளா. 25:14,15,20
ஆகாசு இராஜாவுக்கு எதிராக நடந்தனர் – 2 நாளா.28:17–20
யூதாவுக்கு எதிராக பாபிலோனுக்கு உதவினர் – ஒபதி.1:11; சங்.137:7–9

**இவர்களைக் குறித்த அறிவிப்புகள் :**

மூத்தவன் இளையவனை சேவிப்பான் – ஆதி. 25:23; 27:29
உன் சகோதரனுக்கு நீ எஜமானாய் இருப்பாய் – ஆதி. 27:29
நான் அவனை உனக்கு எஜமானாக வைத்தேன் – ஆதி. 27:37
நீ உன் சகோதரனை சேவிப்பாய் – ஆதி. 27:40
இஸ்ரவேலர் இவர்களை சுதந்தரிப்பார்கள் – எண்.24:18
இவர்கள் தேவனால் தண்டிக்கப்படுவார்கள் – எரே.9:25–26; 25:15–27; எசே.32:29
இஸ்ரவேலரை தண்டிப்பதற்கு எழுப்பப்படுவார்கள்
– ஏசா.34:5–8; 63:1–4; புல.4:21; ஆமோ.1:11,12; ஒப.1:10,15
இவர்கள் அடையப்போகும் முடிவு – ஒப.1:18
இவர்கள் தேசத்தின் அழிவு – ஏசா.34:9–17; எசே.35:7–15
பாபிலோனின் இராஜா இவர்களைத் தண்டிக்கும் கருவியாவான் – எரே.27:3–6

இஸ்ரவேலர் இவர்களைத் தண்டிப்பார்கள் – எசே.25:14; ஒப.1:18
இவர்களது வீழ்ச்சி மலைப்பை ஏற்படுத்தும் – எரே.49:17,21
எதிர்காலத்தில் இஸ்ரவேலுக்கு அடிமையாவார்கள் – ஏசா.11:14; ஆமோ.9:12

# 18. கேனியர்கள்

## (The Kenites)

**இவர்கள் வம்சம் :**

கானான் மக்களின் வம்ச வழி வந்தவர்கள் – ஆதி.15:19
ரேகாப் வீட்டாரின் சந்ததி குடும்பங்கள் 1 நாளா.2:55

**இவர்கள் தேசம் :**

அரணிப்பான இடத்தில் வாசம் பண்ணியவர்கள் – எண்.24:21
பட்டணங்களில் குடியிருந்தவர்கள் – 1 சாமு. 30:29

**இவர்களது வாழ்க்கை :**

மீதியானியருடன் உறவு வைத்தவர்கள் – நியா.4:11; எண்.10:29
மோசே இவர்கள் இனத்தில் பெண் எடுத்தான் – நியா.1:16; யாத்.2:21
இஸ்ரவேலர் பயணத்தில் உதவி செய்தனர் – யாத்.18:1–27
இஸ்ரவேலருக்கு உதவியாய் வர அழைக்கப்பட்டவர்கள் – எண்.10:29–32
இஸ்ரவேலரோடு இணைந்து வாழ்ந்தார்கள் – நியா.1:16; 4:11
அமலேக்கியரோடு இணைந்து வாழ்ந்தார்கள் – 1 சாமு.15:6
அமலேக்கியரோடு சேர்த்து அழிக்கப்படாதவர்கள் – 1 சாமு.15:6
சிசெராவை வீழ்த்துவதற்கு இவர்களில் யாகேல் உதவினாள் – நியா.4:22; 5:24
தாவீது இவர்களைக் கொள்ளையிட்டதுபோல் நடித்தான் – 1 சாமு.27:10
தாவீது கொள்ளையிட்டதில் இவர்களுக்கும் பங்கு அனுப்பினான் – 1 சாமு.30:29
இவர்களது அழிவு முன்னுரைக்கப்பட்டது – எண்.24:21–22

# 19. கிபியோனியர்கள்

## (The Gibeonites)

**இவர்கள் வம்சம் :**

எமோரியரில் ஒரு பகுதி மக்கள் கிபியோனியர் – 2 சாமு. 21:2
ஏவியர் என அழைக்கப்பட்ட மக்கள் – யோசு.9:7
கிபியோனின் குடிகள் என வர்ணிக்கப்பட்டவர்கள் – யோசு.9:3

**இவர்களது வாழ்க்கை :**

இம்மனுஷர்கள் மிகுந்த பலம் படைத்தவர்கள் – யோசு.10:2

இவர்கள் பட்டணங்களில் குடியிருந்தனர் – யோசு.9:17
இவர்கள் இஸ்ரவேலரை ஏமாற்றியவர்கள் – யோசு.9:4–13
இஸ்ரவேலரோடு உடன்படிக்கை செய்துகொண்டவர்கள் – யோசு.9:15
இஸ்ரவேலர் இவர்களை ஒன்றும் செய்யாமல் விட்டனர் – யோசு.9:18–19
இஸ்ரவேலருக்கு இவர்கள் பணிவிடை செய்தனர் – யோசு.9:20–27
இவர்கள் கானானின் இராஜாக்களால் தாக்கப்பட்டனர் – யோசு.10:1–5
இஸ்ரவேலரால் விடுவிக்கப்பட்டனர் – யோசு.10:6–10
சவுல் இவர்களை வெட்டிக் கொன்று போட்டான் – 2 சாமு.21:1
இவர்கள் வெட்டப்பட்டதால் இஸ்ரவேலர் பாதிக்கப்பட்டனர் – 2 சாமு.21:1–2
தாவீது இவர்களுக்கு உதவி செய்தான் – 2 சாமு.21:2
இவர்கள் சவுலின் வீட்டாரைப் பழிவாங்கினர் – 2 சாமு. 21:3–9
இவர்களில் பலர் சிறையிருப்பிலிருந்து திரும்பினார்கள் – நெகே.7:25

# 20. ஏத்தியர்கள்

## (Hittites)

**இவர்கள் வம்சம் :**

கானானின் மகன் கேத் என்பவனின் வம்சமே ஏத்தியர்கள் – ஆதி.10:15
இவர்கள் ஏத்தின் புத்திரர்கள் என அழைக்கப்பட்டனர் – ஆதி.23:3,20
கானான் தேசத்தில் குடியிருந்த 7 இனத்தில் இவர்களும் ஒருவர் – உபா.7:1

**இவர்களது வாழ்க்கை :**

ஆபிரகாம் இவர்களிடத்தில் நிலம் வாங்கினான் – ஆதி.23:3–20
இவர்கள் எபிரோனில் குடியிருந்தனர் – ஆதி.23:2,3,19
இவர்கள் இராஜாக்களால் ஆளப்பட்டனர் – 1 இரா.10:29; 2 இரா.7:6
இவர்கள் இடத்தை தேவன் இஸ்ரவேலுக்கு வாக்களித்தார் – ஆதி.15:20; யாத்.3:8
இஸ்ரவேலர் இவர்களுடன் இணையக்கூடாது – உபா.7:1–3
இவர்கள் இஸ்ரவேலரால் துரத்தப்பட வேண்டும் – உபா.7:24
இவர்கள் நிலம் காலேப்புக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது – யோசு.14:13
இஸ்ரவேலரோ இவர்களோடு இணைந்து கொண்டனர் – நியா.3:5–6
சாலொமோன் இவர்களை அடிமைப்படுத்திக் கொண்டான் –1 இரா.9:20,21
இவர்கள் தேசத்தில் லூஸ் எனும் பட்டணம் கட்டப்பட்டது – நியா.1:26
ஏசா இவர்களிடத்தில் பெண் எடுத்தான் – ஆதி.26:34
சாலொமோன் இவர்களது இனத்தில் பெண் எடுத்தான் – 1 இரா.11:1
இஸ்ரவேலர் இவர்கள் இனத்தில் உறவு வைத்தனர் – நியா.3:5–6
சிறையிருப்புக்குப்பின்பும் இஸ்ரவேலர் இவர்களுடன் இணைந்தனர் – எஸ்றா.9:1

இம்மக்களில் எப்பெரோன் என்பவன் புகழ்பெற்ற செல்வந்தன் – ஆதி.49:30
அகிமெலேக் என்பவன் இவ்வினத்தில் மிகச்சிறந்த வீரன் – 1 சாமு. 26:6
உரியா இவ்வினத்தைச் சேர்ந்த மிகச்சிறந்த உத்தமன் – 2 சாமு.11:6,21

# 21. எமோரியர்கள்
## (The Amorites)

**இவர்கள் வம்சம் :**

நோவா வம்சத்தில் வரும் கானான் என்பவனின் மூத்த மகனின் வம்சத்தார் – ஆதி. 10:15–16; 1 நாளா.1:13–14
கானான் தேசத்தில் குடியிருந்த 10 தேசத்தவர்களில் ஒருவர் – ஆதி.15:18–21
கானானில் இவர்கள் ஐந்து பிரபல இனத்தவர்களில் ஒரு இனத்தவர் – யாத்.3:8,17
கிபியோனியர் என்ற கூட்டத்தவர் இவர்களிலிருந்தனர் – 2 சாமு.21:2
கானான் தேசத்தின் தகப்பன் என்று அழைக்கப்பட்டவர்கள் – எசே.16:3

**இவர்களது ஆட்சி:**

இவர்கள் தனித்தனி இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – யோசு.5:1; 9:10
இவர்களது இராஜாக்கள் பிரபலமானவர்களாய் இருந்தனர் –சங்.136:18
சீகோன் என்ற இராஜா மிக பலத்தவனாய் இருந்தான் – சங்.136:19
இவன் இருந்த பட்டணம் பலத்த பாதுகாப்பானது – எண்.21:26–27
இவன் இஸ்ரவேலர் பயணத்திற்கு உதவாமல் போனதோடன்றி அவர்களை எதிர்த்தான், முடிவில் பட்டயக்கருக்கால் விழுந்தான் – எண்.21:23–24

**இவர்களது எல்லைகள் :**

இவர்கள் மலைநாட்டில் குடியிருந்தவர்கள் – எண்.13:29; உபா.1:7,20
ஏரேஸ், ஆயலோன், சால்பீம், அக்கராபீம் போன்றவைகள் இவர்களது மலை தேசங்களிலிருந்த எல்லைகள் – நியா.1:35–36
தாண் புத்திரர் இவ்விடத்தில் வரும்பொழுது இவர்கள் எதிர்த்தார்கள் – நியா.1:34
இவர்கள் மோவாபின் எல்லைகளைக் கைப்பற்றி முன்னேறியவர்கள்– எண்.21:26
இவர்களது பட்டணங்கள் பலத்த அரணாய் இருந்தன – எண்.32:17
காத், ரூபன், மனாசேயின் பாதி கோத்திரத்தாருக்கு இவர்களது எல்லைகள் பகிர்ந்து கொடுக்கப்பட்டது – எண்.32:33

**இவர்களது குணநலன்கள் :**

இவர்கள் அதிக பலசாலிகளாய் இருந்தனர் – ஆமோ.2:9
அக்கிரமக்காரர்களாய் விளங்கினர் – ஆதி.15:16
தேவர்களை சேவிப்பவர்களாய் இருந்தனர் – யோசு.24:15
இவர்கள் சகல அருவருப்புகளையும் செய்தனர் – உபா.20:18

நரகலான விக்ரகங்களை பின்பற்றி அருவருப்பாய் நடந்தனர் – 1 இரா.21:26
விக்கிரக காரியங்களில் மிகக்கேடாக நடந்தனர் – 2 இரா.21:11

**இவர்களது சரித்திரம் :**

கெதர்லாகோமேர் என்ற அரசன் இவர்களை சங்கரித்தான் – ஆதி.14:5–7
ஆபிரகாம் இவர்களை விடுவித்துக் கொண்டு வந்தான் – ஆதி.1413–24
யாக்கோபு இவர்களது நிலத்தை வாங்கி யோசேப்புக்குக்கொடுத்தான்– ஆதி.48:22
இவர்கள் தேவ கோபம் வரும்படி அக்கிரமம் செய்தார்கள் – ஆதி.15:16
இவர்கள் அழிக்கப்படுவோர் பட்டியலில் இருந்தனர் – உபா.20:16–17
இஸ்ரவேலரால் வீழ்த்தப்பட்டார்கள் – எண்.21:22–24
இவர்களது நிலங்களும் உயிர்களும் கைப்பற்றப்பட்டது – எண்.21:21–35
இவர்களது இடங்கள் ரூபன் புத்திரருக்கு பகிர்ந்தளிக்கப்பட்டன– யோசு.13:15–31
இவர்கள் மற்ற இராஜாக்களோடு கூடி இஸ்ரவேலரை எதிர்த்தனர் – யோசு.10:5
யோசுவாவின் தலைமையில் அற்புதமாய் தோற்கடிக்கப்பட்டார்கள் – யோசு.10:11–14
இவர்களது இராஜாக்கள் வெட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்கள்– யோசு. 10:24–27
இவர்களில் கிபியோனியர் என்போர் இஸ்ரவேலரை ஏமாற்றினர் – யோசு.9:3–16
இஸ்ரவேலரை வெளியேற்ற முடியாமல் தோற்றுப்போனார்கள் –நியா.1:34–35
சாமுவேலின் நாட்களில் இஸ்ரவேலரோடு சமாதானமானார்கள் – 1 சாமு.7:14
சாலொமோனின் நாட்களில் அடிமைகளாய் இருந்தனர் – 1 இரா.9:20–22
ஆகாப் இவர்களது அருவருப்புகளைப் பின்பற்றினான் – 1 இரா.21:26
மனாசே இவர்களது அருவருப்பைக் கடைப்பிடித்தான் – 2 இரா.21:11
இவர்களது பெண்களை மணந்த யூதர்கள் கண்டிக்கப்பட்டனர் – எஸ்றா.9:1–2

# 22. கானானியர்கள்

## (The Canaanites)

**இவர்கள் வம்சம் :**

நோவாவின் மகன் காம் பெற்ற கானானின் வம்சம் – ஆதி.9:22; 10:6
நோவா இந்த கானானை சபித்தான் – ஆதி.9:25–26
கானான் பெற்ற பிள்ளைகளின் வம்சம் – ஆதி.10:15–18

**இவர்கள் தேசம் :**

சீதோன் முதல் கேரார் வழியாய்க் காசா வரைக்கும் சோதோம், கொமோரா,
அத்மா, செப்பாயிம் வழியாய் லாசா வரை இவர்கள் எல்லை – ஆதி.10:19
இவர்களுக்குள் பல தேசங்கள் இருந்தன –ஆதி.10:20
இவர்களுக்குள் பல இனத்தவரும் பல வம்சத்தவரும் இருந்தனர் – ஆதி.10:20
இவர்கள் தங்களுக்குள் பல மொழிகளைப் பேசினர் – ஆதி.10:20

இவர்கள் ஏழு வகையான பலத்த இன மக்களில் ஒரு வகையினர் – உபா.7:1
பாலும் தேனும் ஓடும் தேசத்தில் இவர்கள் குடியிருந்தனர்– யாத். 3:17; எண்.13:27

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் மக்கள் தொகை பெருத்தவர்கள் – உபா. 7:17
இவர்கள் பலம் நிறைந்த பெரிய இனத்தவர் – எண்.13:28; உபா.7:1
இவர்கள் ஒவ்வொருவரும் பலவான்களாக இருந்தனர் – எண்.13:28
கடலருகேயும் நதியருகேயும் குடியிருந்தவர்கள் – எண்.13:29
இவர்களது பட்டணங்கள் பெரியவைகளாய் இருந்தன – உபா.1:28
பட்டண மதில் சுவர்கள் மிக உயரமாய் இருந்தன – உபா.1:28
பட்டணங்கள் அனைத்தும் அரணிப்பானவைகளாய் இருந்தன –எண்.13:28
மரம், கல், வெள்ளி, பொன்னுமான விக்கிரகங்களை வணங்கினர்– உபா.29:17
தீக்கடக்கப்பண்ணுதல், குறி சொல்லுதல், நாள் பார்த்தல், அஞ்சனம் பார்த்தல், சூனியம் செய்தல், மந்திரம் செய்தல், மாய வித்தை காட்டுதல், ஆவிகளோடு பேசுதல், செத்தவர்களிடத்தில் குறிகேட்டல் போன்ற அருவருப்புகளை இவர்கள் செய்ததால் தேவன் இவர்களைத் துரத்திவிட நினைத்தார் – உபா.18:9–11
இவர்கள் தங்கள் தேசத்தைத் தீட்டுப்படுத்தினார்கள் – லேவி.18:24–27
இவர்களது பாவங்களால் தேவன் இவர்களைத் துரத்தினார் – உபா.9:4; 18:12

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

ஆபிரகாமுக்கு இவர்கள் தேசம் வாக்களிக்கப்பட்டது – ஆதி.12:1–5
ஆபிரகாம் சந்ததிக்கு இவர்களது தேசம் வாக்களிக்கப்பட்டது –ஆதி.13:14–17; 15:21; 17:8
கானானியர் வாழ்ந்த இடத்தில் ஆபிரகாம் வந்தான் – ஆதி.12:6;13:7; 14:13
ஆபிரகாம் இவர்களிடம் நிலத்தை வாங்கினான் – ஆதி.23:2–6
இவர்களோடு இஸ்ரவேலர் உடன்படிக்கை செய்யக்கூடாது –உபா.7:2; நியா.2:2
இஸ்ரவேலருக்கு இவர்களோடு திருமண உறவு கூடாது – உபா.7:3; யோசு.23:12
இவர்களது தேவர்களை வணங்கக்கூடாது – யாத்.23:24; உபா.7:25
இவர்களுக்கு இரக்கம் காட்டக்கூடாது – உபா. 7:2,24
இவர்களது விக்கிரகங்களைத் தகர்க்க வேண்டும் – யாத். 23:24; உபா.7:5,25
இவர்களுக்கு இஸ்ரவேலர் பயப்படக்கூடாது – உபா.7:17,18; 31:7
இஸ்ரவேலரைக்கண்டு இவர்கள் அஞ்சவேண்டும்– யாத்.15:15,16; யோசு.2:9–11; 5:1
இஸ்ரவேலருக்கு இவர்கள் அடிமைப்படவேண்டும்– யோசு.10:1–11:23; நியா.1:1–36
இஸ்ரவேலரை சோதிப்பதற்காக விடப்பட்டவர்கள் – நியா.2:21,22; 3:1–4
இஸ்ரவேலரைத்தண்டித்துத் திருத்துவதற்கு விடப்பட்டவர்கள்–எண்.33:55; நியா.2:3; 42
இவர்கள் இஸ்ரவேலரைத் தம்வசப்படுத்தினர் – நியா.2:3,19; சங்.106:36–38
கானானியர்களில் சிலர் இயேசுவைத் தேடி வந்தனர் – மத்.15:22

# 23. ஏவியர்கள்
## (Hivites)

கானான் பெற்றவன் வம்சத்தில் வருபவர்கள் ஏவியர்கள் – ஆதி.10:17
இவர்கள் ஆவியர் என்றும் அழைக்கப்பட்டனர் – யோசு.13:3
கானானில் குடியிருந்த 7 இனங்களில் இவர்களும் ஒருவர் – உபா.7:1
இவர்கள் லீபனோனின் மலைகளில் குடியிருந்தனர் – நியா.3:3
இவர்கள் பிரபுக்களால் ஆளப்பட்டார்கள் – ஆதி.34:2
சீகேம் பிரபு தீனாளைத் தீட்டுப்படுத்தினான் – ஆதி.34:1–31
விருத்தசேதனம் செய்யப்படாதவர்கள் – ஆதி.34:14
யாக்கோபின் பிள்ளைகள் இப்பிரபுவோடு போரிட்டனர் – ஆதி.34:29
இவர்கள் இஸ்ரவேலரோடு கலந்திருந்தனர் – யோசு.9:3–27
ஏசா இவ்வினத்தில் பெண் எடுத்தான் – ஆதி.36:2
இவர்களது தேசத்தை தேவன் இஸ்ரவேலருக்குக்கொடுத்தார் – யாத்.3:8; 23:23
இஸ்ரவேலர் இவர்களை அழிக்கும்படி கட்டளை பெற்றனர் – உபா.7:1,2,24
இவர்களில் ஒரு பகுதி இஸ்ரவேலரை சோதிக்க வைக்கப்பட்டனர் – நியா.3:2–4
சாலொமோன் இவர்களை அடிமைகளாக வைத்துக்கொண்டான் – 1 இரா.9:20,21

# 24. ஏனாக்கியர்கள்
## (The Anakim)

**இவர்கள் வம்சம் :**

அர்பாவின் மகன் ஏனாக்கின் வம்சத்தாரே ஏனாக்கியர் – யோசு.15:13; எண்.13:22
இவர்கள் ஏனாக்கின் புத்திரர் எனப்பட்டனர் – உபா.1:28
ஏனாக் புத்திரர் என்றும் அழைக்கப்பட்டனர் – உபா.9:2
இராட்சத பிறவிகளென அழைக்கப்பட்டனர் – எண்.13:33
இராட்சதர்கள் என அழைக்கப்பட்டனர் – எண்.13:33; உபா.2:11
பலவான்களும் நெடியவர்களுமாய் இருந்தனர் – உபா.1:28
பெரியவர்களும் நெடியவர்களுமாய் இருந்தனர் – உபா.9:2
ஜனம் பெருத்ததும் பலத்ததுமாய் இருந்தனர் – உபா.9:1
இவர்களின் அர்பா என்பவன் இம்மக்களுக்குள்ளே பெரியவன் – யோசு.14:15
ஆனாக்கின் தகப்பன் அர்பா என்பவனுக்குப்பட்டணம் இருந்தது – யோசு.21:11

**இவர்கள் தேசம் :**

இவர்கள் மூன்று வகை குடிகளாக இருந்தனர் – யோசு.15:14

இவர்கள் மலை தேசத்தில் குடியிருந்தனர் – யோசு.11:21
எபிரோன், தெபீர், ஆனாப் ஆகிய பகுதிகளில் வசித்தார்கள் – யோசு.11:21
எபிரோன் இவர்களது முக்கிய நகரமாய் இருந்தது – யோசு.14:15
எபிரோனுக்கு கீரியாத் அர்பா என்ற மறுபெயர் இருந்தது– யோசு.14:15; நியா.1:10
யூதாவின் மலைதேசத்தில் எபிரோன் இருந்தது – யோசு.21:11
தெபீர் என்ற பட்டணத்திற்கு கீரியாத்செப்பேர் என மறுபெயர் உண்டு– நியா.1:11

**இவர்களது சரித்திரம் :**

இவர்கள் திரளானவர்களாய் இருந்தனர் – உபா.2:10,21
இஸ்ரவேலர் இவர்களைக் கண்டு பயந்தனர் – எண்.13:33; 14:1
இவர்களது எபிரோன் பட்டணம் காலேபுக்கு கொடுக்கப்பட்டது – யோசு.14:6–14
காலேப் இந்த எல்லைகளை சுதந்திரமாக்கினான் – யோசு.15:13–15
ஒத்னியேல் இவர்களது இடங்களைப் பிடித்தான் – யோசு.15:15–17; நியா.1:12–13
யோசுவா மலை தேசமாகிய எபிரோனிலும், தெபீரிலும் ஆனாபிலும், யூதாவின் சகல மலைகளிலும் இஸ்ரவேலின் சகல மலைகளிலும் குடியிருந்த இவர்களை நிக்கிரகம் பண்ணி அவர்களைப்பட்டணங்களோடு சங்கரித்தான் – யோசு.11:21

# 25. மீதியானியர்கள்

## (Midianites)

**இவர்கள் வம்சம் :**

ஆபிரகாமுக்கும் கேத்தூராளுக்கும் பிறந்த மீதியானின் வம்சம் – ஆதி.25:1–2

**இவர்கள் தேசம் :**

யோர்தானின் கிழக்கு திசையில் இவர்கள் வசித்து வந்தனர் – எண்.22:1–4
வேறு சிலர் ஒரேப் அருகில் வசித்து வந்தனர் – யாத்.2:15; 3:1
இவர்கள் தேசம் மீதியான் தேசம் என்றும் அழைக்கப்பட்டது – யாத்.2:16
யெகொவாவை வணங்கும் மக்களும் இருந்தனர் – யாத்.2:16; 18:9–12
இவர்களுக்குள் ஆசாரியர்களும் இருந்தனர் – யாத்.2:16

**இவர்களது வாழ்க்கை :**

இவர்கள் இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – எண்.31:8; நியா.8:5
கூடாரங்களில் வசித்து வந்தார்கள் – ஆப.3:7
வாணிகத்தை தொழிலாகக் கொண்டிருந்தனர் – ஆதி.37:28,36
எகிப்திற்கு வியாபார பயணம் மேற்கொண்டிருந்தனர் – ஆதி.37:36
ஆதாத் என்ற அரசன் இவர்களை முறியடித்தான் – 1 நாளா.1:46
இவர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாக நின்றனர் – எண்.22:4

இஸ்ரவேலருக்கு இவர்கள் அஞ்சினார்கள் – ஆப.3:3–7
மோவாபியரோடு இணைந்து இவர்களும் இஸ்ரவேலரை சபிக்க முயற்சித்தார்கள் – எண்.22:5–7
இஸ்ரவேலரை விக்கிரகத்திற்கும் வேசித்தனத்திற்கும் இழுத்தனர் – எண்.25:1–6
இவர்கள் பாவத்தால் தண்டிக்கப்பட்டனர் – எண்.25:16–18; 31:1–12
இவர்கள் இஸ்ரவேலரை ஏழு வருடம் ஒடுக்கினர் – நியா.6:1–6
கிதியோன் இவர்களை ஒடுக்கினான் – நியா.6:11–14; 7:16–22
இவர்கள் அமலேக்கியரோடு இணைந்து கிதியோனை எதிர்த்தனர் – நியா.6:33–34
முடிவில் கிதியோனால் அழிக்கப்பட்டனர் – நியா.7:16–26; 8:10–12
இவர்கள் அரசர்கள் வெட்டி வீழ்த்தப்பட்டார்கள் – நியா.7:24–25; 8:12,21
இவர்களது அழிவு முன்குறிக்கப்பட்டது – சங்.83:9–11
இவர்களுக்கும் கர்த்தரின் சுவிஷேசம் செல்லும் – ஏசா.60:6

# 26. பெலிஸ்தியர்கள்
## (The Philistines)

**இவர்கள் வம்சம் :**

கஸ்லூகீம் என்பவனின் வம்சத்தார் – ஆதி.10:14
இவர்கள் கப்தோரியர் என அழைக்கப்பட்டிருக்கலாம் – உபா.2:22
இவர்கள் கிரேத்தியர் என்றும் அழைக்கப்பட்டனர் – 1 சாமு.30:14; செப்.2:5
துவக்கத்தில் கப்தோர் தேசத்தில் குடியிருந்தவர்கள் – எரே.47:4; ஆமோ.9:7
ஆவியரை துரத்தி அவ்விடங்களை ஆக்கிரமித்துக் கொண்டவர்கள் – உபா.2:22
ஆசேரீம் துவங்கி ஆசாவரை குடியேறியவர்கள் – உபா.2:22
இவர்கள் தேசம் பெலிஸ்தியா என அழைக்கப்பட்டது – சங்.108:9
இவர்களுக்கு அஸ்தோத், காசா, அஸ்கலோன், காத், எக்ரோன் என்னும் பிரபலமான ஐந்து பட்டணங்கள் இருந்தது – யோசு.13:3; நியா.3:3; 1 சாமு.6:17
இந்த ஐந்து பட்டணங்களும் ஐந்து அதிபதிகளால் ஆளப்பட்டது – 1 சாமு.6:16
இவர்களில் தலைசிறந்த இராஜாக்கள் இருந்தனர் – ஆதி.21:22,34;26:8

**இவர்களது குணநலன்கள்:**

இவர்கள் கர்வம் நிறைந்த மக்கள் – சகரி.9:6
குரோதம் வைக்கிற மக்கள் – எசே.25:15
பழிக்குப்பழி வாங்கும் மக்கள் – எசே.25:15
விக்கிரக வழிபாடு செய்யும் மக்கள் – நியா.16:23
இவர்கள் தாகோன் என்னும் தெய்வத்தை வழிபட்டவர்கள் – நியா.16:23
பலி செலுத்தும் வழக்கம் உள்ளவர்கள் – நியா.16:23

விக்கிரக கோயில்களை வைத்திருந்தவர்கள் – 1 சாமு.5:2
நாள் பார்க்கிறவர்களாய் இருந்தனர் – ஏசா.2:6
பூசாரிகளையும் குறி சொல்லுகிறவர்களையும் நம்பினர் – 1 சாமு.6:1–2
யுத்தத்திற்கு பெயர்போனவர்கள் – 1 சாமு.17:1; 28:1
மிக வலிமையான சரீர உருவத்தைக் கொண்டவர்கள்
– 1 சாமு.17:4–7; 2 சாமு.21:16, 18–20

**பெலிஸ்தியரும் இஸ்ரவேலரும் :**

தேவன் இவர்கள் தேசத்தை இஸ்ரவேலருக்கு அளித்தார் – யோசு.13:2,3;15:45,46
இஸ்ரவேலரை சோதிப்பதற்காகவும் இவர்கள் இருந்தனர் – நியா.3:1–3
இஸ்ரவேலரின் எதிரிகளோடு இணைந்து செயல் பட்டவர்கள் –சங்.83:5–8
இஸ்ரவேலின் நியாயாதிபதியான சம்கார் என்பவன் பெலிஸ்தியரில் 600 பேரை ஒரே தாற்றுக்கோலால் முறியடித்தான் – நியா.3:31
யாவீரின் மரணத்திற்குப்பின் பெலிஸ்தியர் இஸ்ரவேலரை 18 வருடம் ஒடுக்கினார்கள் – நியா.10:7,8
அப்தோன் மரணத்திற்குப்பின் பெலிஸ்தியர் இஸ்ரவேலரை 40 வருடம் ஒடுக்கினார்கள் – நியா.13:1
இஸ்ரவேலர் இவர்களைப்போல நடந்ததால் கண்டிக்கப்பட்டார்கள்
– நியா.10:6–7; ஆமோ.6:2
கிப்தோனிலே பாஷா நாதாபை வெட்டிப்போட்டான் – 1 இரா.15:27
யோராமுக்கு எதிராக எழுப்பப்பட்டார்கள் – 2 நாளா.21:16–17
உசியாவால் வீழ்த்தப்பட்டார்கள் – 2 நாளா.26:6–7
யூதாவைக் கைப்பற்றி மேற்கொண்டார்கள் – 2 நாளா.28:18–19
எசேக்கியாவால் வீழ்த்தப்பட்டார்கள் – 2 இரா.18:8

**பெலிஸ்தியரும் சிம்சோனும் :**

சிம்சோன் பெலிஸ்தியர்களிடமிருந்து இஸ்ரவேலரை இரட்சிப்பவன் – நியா.13:5
இவர்களது இனத்தில் பெண்ணை மணந்தவன் –நியா.14:1,10
அஸ்கலோனில் 30 பெலிஸ்தியரைக் கொன்றுபோட்டவன் – நியா.14:19
இவர்களது திராட்சத் தோட்டம், ஒலிவத் தோப்புகளை சுட்டெரித்தவன் – நியா.15:3–5
கழுதையின் தாடை எலும்பால் 1000 பேரைக்கொன்றுபோட்டவன் – நியா.15:15–16
பெலிஸ்தியரால் பிடிக்கப்பட்டு குருடாக்கப்பட்டவன் – நியா.16:21
முடிவில் பெலிஸ்தியர் பலரை ஒரே மண்டபத்தில் அழித்துப்போட்டவன்– நியா.16:29–30

**பெலிஸ்தியரும் சாமுவேலும் :**

சாமுவேலின் நாட்களில் இவர்கள் இஸ்ரவேரை எதிர்த்தனர் – 1 சாமு.4:1
பெலிஸ்தியர் இஸ்ரவேலரை எபெனேசரில் தோற்கடித்தனர் – 1 சாமு.4:1–2
பெலிஸ்தியர் இஸ்ரவேலரை வீழ்த்தி பேழையைக் கைப்பற்றினர்– 1 சாமு.4:3–11

தேவனுடைய பெட்டியை தங்கள் தாகோன் கோவிலில் வைத்தனர் – 1 சாமு.5:1–4
வாதையால் பாதிக்கப்பட்டு பேழையை ஒப்படைத்தனர் – 1 சாமு.5:6–12
மிஸ்பாவிலே இஸ்ரவேலோடு போரிட்டு வீழ்த்தப்பட்டனர் – 1 சாமு.7:7–14
சாமுவேலின் நாட்களிலெல்லாம் கர்த்தருடைய கரம் பெலிஸ்தியருக்கு விரோதமாய் இருந்தது – 1 சாமு. 7:13

**பெலிஸ்தியரும் யோனத்தானும் :**

யோனத்தான் கேபாவிலே இவர்களை முறியடித்தான் – 1 சாமு.13:3
யோனத்தான் தாணையத்தில் இவர்களை முறியடித்தான் – 1 சாமு.14:1–14

**பெலிஸ்தியரும் சவுலும் :**

சவுலின் நாட்களில் இவர்கள் அவன்மீது படையெடுத்தனர் – 1 சாமு.13:1–14
சவுலால் இவர்கள் தோற்கடிக்கப்பட்டனர் – 1 சாமு.14:15–23
சவுலின் நாட்களெல்லாம் இவர்ளோடு யுத்தம் நடந்தது – 1 சாமு.14:52
கோலியாத்தின் தலைமையில் இவர்கள் சவுலை எதிர்த்தனர் – 1 சாமு.17:4–10
சூநேமில் பாளையமிறங்கி சவுலுக்கு எதிராக படையெடுத்தனர் – 1 சாமு.28:4
கில்போவா மலையில் போரிட்டு சவுலை வீழ்த்தினார்கள் – 1 சாமு.31:1–30

**பெலிஸ்தியரும் தாவீதும் :**

கோலியாத்தின் தலைமையில் வந்த பெலிஸ்தியரை தாவீது வீழ்த்தினான் – 1சாமு.17:40–50
தாவீது பெலிஸ்தியரின் நுனித்தோலை வெட்டினான் – 1 சாமு.18:25–27
மீண்டும் தாவீது பெலிஸ்தியரை முறியடித்தான் – 1 சாமு.19:8
தாவீது சவுலுக்கு பயந்து பெலிஸ்தியர் தேசத்தில் தங்கினான் – 1 சாமு.27:1–7
தாவீது ஆகீசின் நம்பிக்கையைப் பெற்றான் – 1 சாமு.28:2; 29:9
பெலிஸ்தியர் தாவீதிற்கு பயந்து அவனைப் புறக்கணித்தனர் – 1 சாமு.29:2–7
தாவீது ராஜாவானபோது பெலிஸ்தியர் எதிர்க்கலாயினர் – 2 சாமு.5:17,18
தாவீது பெலிஸ்தியரை தேவ உதவியோடு முறியடித்தான் – 2 சாமு.5:19–25
இஸ்ரவேலருக்கு எதிராக ஆப்பெக்கில் படையெடுத்தனர் – 1 சாமு.28:1; 29:1
அமலேக்கியரால் சூறையாடப்பட்டவர்கள் – 1 சாமு.30:1–16

**இவர்களைக் குறித்து முன்னறிவிப்புகள் :**

சீரியரோடு இணைந்து இஸ்ரவேலருக்கு எதிராவார்கள் – ஏசா.9:11–12
மற்ற தேசத்தார்களோடு தண்டிக்கப்படுவார்கள் – எரே.25:20
தீருவின் அழிவால் கலங்குவார்கள் – சகரி.9:3–5
இவர்கள் கர்வம் அழிக்கப்படும் – சகரி.9:6
இவர்கள் வஞ்சககுணத்திற்கு பதிலடி வழங்கப்படும்– எசே.25:15–17; ஆமோ.1:6–8
இவர்கள் மீதியில்லாமல் அழிக்கப்படுவார்கள் – எரே.47:1; செப்.2:5–6
இவர்கள் நகரங்கள் அழிக்கப்பட்டு குடிகள் பாழாகும் – எரே.47:5; செப்.2:4
எதிர்காலத்தில் இவர்கள் தேசம் இஸ்ரவேலரிடம் வரும் – ஒப.1:19; செப்.2:7

# 27. அமலேக்கியர்கள்

## (The Amalekites)

**இவர்கள் வம்சம் :**

ஏசாவின் குமாரனாகிய எலீப்பாசுக்குப் பிறந்தவன் அமலேக் – ஆதி.36:12

ஏசாவின் மனைவி ஆதாள் என்பவளின் புத்திரன் – ஆதி. 36:12

ஏதோம் தேசத்தில் பிறந்த பிரபுக்களின் சந்ததியே அமலேக்கியர் – ஆதி. 36:16

**இவர்களது தேசம் :**

இவர்கள் கானான் தேசத்து தென் திசையில் குடியிருந்தனர் – எண்.13:29

இவர்கள் பூர்வகால குடிகளாக இருந்தவர்கள் – 1 சாமு.27:8

ஆவிலா துவங்கி சூருக்குப் போகும் எல்லைவரை இருந்தவர்கள் –1 சாமு. 15:7

ஆதி காலங்களில் போரிட்ட நாடுகளில் ஒன்று –ஆதி.14:7

இவர்களோடு கேனியர்கள் என்ற இனத்தவரும் குடியிருந்தனர் –1 சாமு.15:6

**இவர்களது குணாதிசயங்கள் :**

இவர்கள் பாவிகளாய் வாழ்ந்தனர் – 1 சாமு.15:18

மற்றவர்களை ஒடுக்கியே வளர்ந்தனர் – நியாய.10:12

இவர்கள் இராஜாவால் ஆளப்பட்டார்கள் – 1 சாமு.15:8

இவர்களின் இராஜா தேவ கோபத்தால் சாமுவேலால் சங்கரிக்கப்பட்டான் – 1 சாமு. 15:32–33

இவர்களது அரசு உறுதியும் செழிப்புமாய் இருந்தது – எண்.24:7

இவர்களுடைய பட்டணம் கைப்பற்றப்பட்டவை – 1 சாமு.15:5

**இவர்களது சரித்திரம் :**

இவர்கள் இஸ்ரவேலரை முதன்முதலில் எதிர்த்துப் போரிட்டவர்கள் – யாத்.17:8

மோசேயுடைய ஜெபத்தால் இவர்கள் தோற்கடிக்கப்பட்டார்கள் – யாத்.17:9–13

இவர்களை நாசம் பண்ணுவதாக தேவனும் கூறினார் – யாத்.17:14

இவர்களின் கை கர்த்தரின் சிங்காசனத்திற்கு எதிராயிருந்தது – யாத்.17:16

அமலேக்கியருக்கு எதிராக தலைமுறை தலைமுறைதோறும் யுத்தம் நடந்தது – யாத்.17:16

கானானுக்குள் செல்லும்போது இவர்கள் அழிக்கப்பட வேண்டியவர்கள் – உபா.25:19

இவர்களது தோல்வி தீர்க்கதரிசனமாய் முன்னுரைக்கப்பட்டது – எண்.24:20

இவர்கள் இஸ்ரவேலரை ஒரு முறை துரத்தி முறியடித்தனர் – எண்.14:45

இரண்டாம் முறையும் இவர்கள் இஸ்ரவேலரை முறியடித்தனர் – நியா.3:13

மோவாப்பியரும் அம்மோனியரும் அமலேக்கியரோடு போரில் இணைந்தனர் –நியா.3:12,13

எப்பிராயீம் தேசத்தின் மலைகளிலும் இவர்கள் குடியிருந்தனர் – நியா.12:15

எப்பிராயீமிலிருந்து இவர்களுக்கு எதிர்ப்பு துவங்கியது – நியா.5:14
இவர்கள் மீதியானியரோடு இணைந்து இஸ்ரவேலரை எதிர்த்தனர் – நியா.6:1–3
மீதியானியரோடு இணைந்து போரில் கிதியோனால் வீழ்த்தப்பட்டனர் –நியா.6:33–40
இவர்கள் சவுலால் வீழ்த்தப்பட்டார்கள் – 1 சாமு.14:48
இவர்களை வீழ்த்தும்படி சாமுவேல் சவுலுக்குக் கட்டளையிட்டான் – 1 சாமு.15:1–3
சவுல் இவர்களை வீழ்த்தி தோற்கடித்தான் 1 சாமு.15:4–8
இவர்கள் சவுலால் முழுவதும் அழிக்கப்படாதவர்கள் 1 சாமு.15:9–26; 28:18
இவர்களது இராஜா ஆகாகை சாமுவேல் வெட்டி வீழ்த்தினான் –1 சாமு.15:32–33
தாவீது இவர்கள்மேல் படையெடுத்து இவர்களை கொள்ளையிட்டான் – 1 சாமு27:8–9
இவர்கள் சிக்லாக்கை கொள்ளையிட்டு எரித்தனர் – 1 சாமு.30:1–2
தாவீதோ இவர்கள்மீது படையெடுத்து இவர்களை சூறையிட்டான்–1 சாமு30:10–20
தாவீதுஇவர்களதுபொருட்களை சூறையிட்டுகர்த்தருக்குப்படைத்தான் – 2 சாமு.8:11–12
இவர்கள் இஸ்ரவேலருக்கு விரோதமாய் எழுந்தனர் – சங். 83:6–7
எசேக்கியாவின் நாட்களில் இவ்வினத்தார் முற்றிலும் அழிக்கப்பட்டனர் – 1 நாளா.4:41–43

# 28. ரேகாபியர்
## (Rechabites)

**இவர்கள் வம்சம் :**

அம்மாத்தின் வம்சத்தில் வருபவர்கள் –1 நாளா.2:55
ஆகாபுக்கு எதிராக வந்தவர்களில் யோனதாப் என்பவன் இவ்வினத்தைச் சேர்ந்தவன் – 2 இரா.10:15–17
யோனதாப் இக்குடிகளுக்குத் தகப்பன்போல் இருந்தான் – எரே.35:6,18
திராட்ச ரசம் குடிக்காத வம்சத்தார் – எரே.35:6–8
இஸ்வேலருக்குக்கீழ்ப்படிதலுக்கு அடையாளமாய் இருந்தார்கள் – எரே.35:12–17
இவர்கள் எப்பொழுதும் நிலைத்திருக்கும்படி வாக்குத்தத்தம் பெற்றார்கள் – எரே.35:18–19

# 29. சீதோனியர்
## (The Sidonians)

**இவர்கள் வம்சம் :**

கானானின் மூத்த மகன் சீதோன் என்பவனின் வம்சத்தார் – ஆதி.10:15; 1 நாளா.1:13
கடற்கரை துறைமுகப் பகுதிகளில் குடியிருந்தவர்கள் – லூக்.6:17; அப்.27:3

**இவர்கள் தேசம் :**

கானானியரின் எல்லையாக இருந்தது – ஆதி.10:19

இது புறவினத்து தேசங்களோடு இணைந்திருந்த பட்டணம் – மத்.15:21–22; மாற்.7:24–26
இவர்கள் பட்டணம் சீதோன் நாடு எனப்பட்டது – யோசு.11:8; 19:28; மத்.4:26
சாறிபாத் குறிப்பிடத்தக்க ஊர் – 1 இரா.17:9; லூக்.4:26
இவர்கள் இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – எரே. 25:22; 27:3

**இவர்களது வாழ்க்கை :**

வெளிப்புற வணிகத்தில் பெயர் பெற்றிருந்தார்கள் – ஏசா.23:2
வலிமையுள்ள கப்பல் தண்டு வலிக்கிறவர்களாயும் இருந்தனர் – எசே.27:8
இஸ்ரவேலருக்குக் கேதுரு மரங்களை வழங்கி வந்தார்கள் – 1 நாளா.22:4; எஸ்றா.3:7
இவர்களது வர்த்தகத்தால் ஏரோது ராஜா கோபமடைந்தான் – அப்.12:20

**இவர்களது குணநலன்கள் :**

விக்கிரக ஆராதனைக்காரர்கள் – 1 இரா.11:5
அஸ்தரோத் தேவி எனும் பெண் தெய்வத்தை வணங்கியவர்கள் – 1 இரா.11:5
மூடநம்பிக்கைகளில் அடிமைபட்டுக் கிடந்தனர் – எரே.27:3,9
மிகவும் துன்மார்க்கமான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் – மத்.11:21–22

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

இவர்கள் எல்லையை தேவன் இஸ்ரவேலருக்குத்தந்தார் – ஆதி.49:13; யோசு.13:6
ஆசேர் கோத்திரத்தார் இவர்கள் எல்லைகளை சுதந்தரித்தார்கள் – யோசு.19:24–28
இஸ்ரவேலர் இவர்களைத் துரத்தவில்லை – நியா.1:31; 3:3
நாளடைவில் இஸ்ரவேலரை ஒடுக்கும் மக்களாகவும் மாறினர்
– நியா.10:12; எசே.28:22–24; யோவே.3:4–6
சாலொமோன் இவர்கள் இனத்திலும் பெண்கொண்டான் – 1 இரா.11:1
ஆகாப் இவர்களிடத்தில் பெண் கொண்டான் – 1 இரா.16:31
இஸ்ரவேலர் இவர்களது விக்கிரக வணக்கத்தில் வீழ்ந்தனர் – நியா.10:6; 1 இரா. 11:33
இயேசு இவ்வெல்லைகளில் ஊழியம் செய்தார் – மத்.15:21
இம்மக்களும் இயேசுவின் ஊழியத்தில் பங்கேற்றனர் – மாற்.3:8

**இவர்களைக் குறித்த முன்னறிவிப்புகள் :**

பாபிலோன் ராஜாவான நேபுகாத்நேச்சாரிடம் இவர்கள் எல்லைகள்
கொடுக்கப்படும் – எரே.27:3–6
தேவன் நியாயம் தீர்க்கும் தேசங்களின் வரிசையில் இவர்களும் உள்ளடங்குவர்
– எரே.25:22–28; எசே.32:20
இவர்களது சகாயர் எல்லாம் அகற்றப்படுவர் – எரே.47:4
இவர்கள்மீது வரப்போகும் நியாயத்தீர்ப்பால் தேவன் மகிமைப்படுவார் – எசே.28:21–23
இவர்கள் இஸ்ரவேலரை எவ்வளவு ஒடுக்கினார்களோ அவ்வளவாய் இஸ்ரவேலருக்கு ஈடுசெய்யப்படும் – யோவே.3:4–8

# 30. எகிப்தியர்கள்

## (Egyptians)

**இவர்கள் வம்சம் :**

நோவாவின் இரண்டாம் மகன் காம் என்பவனின் மகனான மிஸ்ராயீம் என்பவனது வம்சத்தாரே எகிப்தியர்கள் என்கின்றனர் – ஆதி. 10:6,13,14

**இவர்கள் தேசம் :**

மிக்தோல் முதல் எத்தியோப்பியா எல்லையான செவெனே வரையிலும் இவர்கள் தேசம் பரவியிருந்தது – எசே.29:10; 30:6

எகிப்து தேசம் காமின் தேசம் என்று அழைக்கப்பட்டது – சங்.105:23; 106:21

தெற்குப்பட்டணம் என்றும் அழைக்கப்பட்டது – எரே.13:19

தென் திசை என்றும் அழைக்கப்பட்டது – தானி.11:14, 25

சீகோர் என்றும் அழைக்கப்பட்டது – ஏசா.23:3

ராகாப் என்றும் அழைக்கப்பட்டது – சங்.87:4; 89:10

அடிமைத்தன வீடு என்றும் அழைக்கப்பட்டது – யாத்.13:3,14; உபா.7:8

**இத்தேசத்தின் நிறைகள் :**

நைல் நதி பாயும் தேசம் – ஆதி.41:1–3; யாத்.1:22

ஆற்றின் வெள்ளம் புரண்டு ஓடியது – ஆமோ.8:8

நீர்வளம் பொருந்தின சம பூமியாயிருந்தது – ஆதி.13:10

கொழுமையும் நன்மையும் பெருத்த தேசமாய் இருந்தது – ஆதி.45:18

ருசியுள்ள மரக்கறிகள் நிறைந்த தேசம் – எண்.11:5

பொக்கிஷங்கள் நிறைந்த தேசமாயிருந்தது – எபி.11:26

ஞானத்தில் வளர்ந்திருந்த தேசம் – 1 இரா. 4:30

இலக்கியங்களில் தேறியிருந்த தேசம் – அப்.7:22

குதிரை பலம் நிறைந்த தேசம் – 1 இரா.10:28

நெசவுத் தொழில் சிறந்தோங்கிய தேசம் – 1 இரா.10:28; ஏசா.19:9

விலையுயர்ந்த ஆடைகளை விநியோகித்த தேசம் – நீதி.7:16

புடவைகள் செய்வதில் புகழ்பெற்ற தேசம் – 1 இரா.10:28; எசே.27:7

வர்த்தகத்தில் வளம்கொழித்த தேசம் – 1 இரா.10:29

**இத்தேசத்தின் குறைகள் :**

இது மழை குறைந்த தேசம் – உபா.11:10,11

வியாதிகள் நிறைந்த தேசம் – உபா.7:15; 28:27,60

பஞ்சம் வந்து போகும் தேசம் – ஆதி.41:30

**இவர்களது ஆட்சி :**

பார்வோன் என்ற பெயரில் இராஜாக்கள் ஆண்டனர் – ஆதி. 40:1–2; யாத்.1:8,22
பார்வோனுக்குக் கீழ் பிரதானிகள் இருந்தனர் – ஆதி.41:41–44
பிரபுக்களின் அமைச்சரவை இருந்தது – ஆதி.12:15
ஆலோசனைக்காரர்களும் ஞானிகளும் இருந்தனர் – ஏசா.19:11
இராணுவத்தில் இரதங்களும் குதிரைகளும் பலமாய் இருந்தன – யாத்.14:7–9

**இவர்களது இராணுவம் :**

இரதங்களும் குதிரைகளும் நிறைந்த இராணுவம் – யாத்.14:6
அதிபதிகளும் வீரர்களும் நிறைந்த இராணுவம் – யாத்.14:7
சிவந்த சமுத்திரத்தில் அழிக்கப்பட்ட இராணுவம் – யாத்.14:23–28
கேசேர் பட்டணத்தைப் பிடித்து சுட்டெரித்த இராணுவம் – 1 இரா.9:16
எருசலேமை முற்றுகையிட்டு சூறையாடினர் – 1 இரா.14:25–26
பார்வோன்நேக்கோ என்பவன் அசீரியாவை வீழ்த்தினான் – 2 இரா.23:29
பார்வோன்நேக்கோ யோவாகாசை வீழ்த்தினான் – 2 இரா.23:31–35
எருசலேமை முற்றுகையிட்டு கல்தேயரைத் துரத்தினர் – எரே.37:5,7

**இவர்களது குணநலன்கள் :**

இவர்கள் தேவர்களை சேவித்து வந்தவர்கள் – யாத்.12:12; எண்.33:4
விக்கிரகங்களை சேவித்தவர்கள் – ஏசா.19:1
சூனியங்களையும் மந்திர வித்தைகளையும் நம்பினர் – யாத்.7:11,12,22; 8:7
பிரச்சனைக்கு கல்விமான்களையும் மந்திரவாதிகளையும் அழைப்பர் –யாத்.7:11
மூடநம்பிக்கைகள் நிறைந்த மக்கள் – ஏசா.19:3
பலம் வாய்ந்த மக்கள் – ஏசா.30:3; எரே.46:8
இவர்கள் பெருமை நிறைந்த மக்கள் – எசே.29:3
ஆடம்பரமான மக்கள் – எசே.32:12
இரக்கமற்ற மக்கள் – யாத்.1:9–22
கலப்புத் திருமணம் செய்பவர்கள் – ஆதி.21:21
இவர்களுக்கு விருந்தோம்பும் குணம் இருந்தது – ஆதி.47:5–6; 1 இரா.11:18
மேய்ப்பர்கள் தொழிலை அருவருத்தவர்கள் – ஆதி.46:34
காளைகளை பலியிடுதலை அருவருத்தார்கள் – யாத்.8:26
அந்நியர்களை ஒடுக்கினார்கள் – யாத்.23:9
எகிப்தியர் எபிரெயரோடு சாப்பிடமாட்டார்கள் – ஆதி.43:32
நறுமணப்பொருட்களை பயன்படுத்தினர் – ஆதி.50:3
அகதிகளாக வருபவர்களுக்கு அடைக்கலம் கொடுத்தனர்
– ஆதி.12:10; 47:4; 1 இரா.11:17,40; 2 இரா.25:26; மத். 2:12–13

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

எகிப்தில் எபிரெயர் அடிமைகளாகி இவர்களை 400 ஆண்டுகள் சேவிப்பார்கள் என ஆபிரகாமுக்கு தேவனே முன்னுரைத்தார் – ஆதி.15:13

யோசேப்பு எகிப்தியருக்கு அடிமையாய் விற்கப்பட்டான் – ஆதி.37:28; 39:1

யோசேப்பு போத்திபார் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டான் – ஆதி.39:2–6

யோசேப்பு அநியாயமாய் எகிப்தின் சிறையிலிருந்தான் – ஆதி.39:7–20

யோசேப்பு சிறையில் ஊழியம் செய்தான் – ஆதி.40:5–19

யோசேப்பு பார்வோனின் சொப்பனத்தை விளக்கினான் – ஆதி.41:14–32

யோசேப்பு பார்வோனுக்கு ஆலோசனை வழங்கினான் – ஆதி.41:33–36

யோசேப்பு எகிப்தின் அதிபதியாய் உயர்த்தப்பட்டான் – ஆதி.41:41–44

யோசேப்பு எகிப்தின் பஞ்சத்தை ஞானமாய் கையாண்டான் – ஆதி.41:46–56

யோசேப்பு தன் சகோதரர்களை சந்தித்தான் – ஆதி.42:1–45:8

பார்வோன் யாக்கோபின் குடும்பத்தை சந்தித்தான் – ஆதி.45:16–47:10

யாக்கோபு குடும்பமாய் எகிப்தில் குடியேறினான் – ஆதி.46:34–47:12

யாக்கோபு எகிப்தில் மரித்தான் – ஆதி.49:33

எபிரெயர் எகிப்தில் வளர்ந்து பெருகினர் – யாத்.1:1–14

எபிரெயர் ஆண் குழந்தைகள் எகிப்தில் அழிக்கப்பட்டனர் – யாத்.1:15–22

மோசே பிறந்து எகிப்தின் நதியில் விடப்பட்டான் – யாத்.2:2–4

மோசே பார்வோன் மகளால் தத்தெடுக்கப்பட்டான் – யாத்.2:5–10

மோசே எகிப்தியனை வெட்டியதால் எகிப்தை விட்டு ஓடினான் – யாத். 2:11–12

மோசே மீதியானில் குடியேறினான் – யாத்.2:15

மோசே தேவனால் எகிப்துக்கு அனுப்பப்பட்டான் – யாத்.3:2–10

பார்வோன் எபிரெயருக்கு துன்பத்தை அதிகரித்தான் – யாத்.5:1–23

மோசே தனது அற்புத ஊழியத்தை செய்து காட்டினான் – யாத்.4:29–12:36

இஸ்ரவேலர் எகிப்தை விட்டு வெளியேறினர் – யாத்.12:31–41

எகிப்தியர் தேவனால் அழிக்கப்பட்டனர் – யாத்.14:5–25

இஸ்ரவேலர் இவர்களை அருவருக்கக்கூடாதென கர்த்தர் கூறினார் – உபா.23:7

இவர்களில் மூன்றாம் தலைமுறையினரை சபையில் சேர்க்கலாம் – உபா.23:8

இவர்கள் விக்கிரகத்தை இஸ்ரவேலர் ஏற்றுக்கொண்டனர் – யாத்.32:4; எசே.20:8

சாலொமோன் எகிப்தியப் பெண்ணையும் மணந்தான் – 1 இரா. 3:1

**இவர்களைக் குறித்த முன்னறிவிப்புகள் :**

கர்த்தர் எகிப்தின் விக்கிரகங்களை அழிப்பார் – ஏசா.19:1

எகிப்தியர் அஞ்சி நடுங்குவர் – ஏசா.19:16–17

எகிப்தியர் மூடநம்பிக்கைகளில் மூழ்குவர் – ஏசா.19:3

எகிப்தியர் இராஜாக்களின்மேல் நம்பிக்கை வைப்பர் – ஏசா.19:11–14

இவர்களின் தேசத்துக்குள் தோல்வியும் வறட்சியும் வரும் – ஏசா.19:5–10
இவர்களுக்குள்ளே யுத்தங்கள் நடக்கும் – ஏசா.19:2
பாபிலோனியர்களால் இவர்கள் அழிக்கப்படுவார்கள் – எரே.46:2–13
பாபிலோனியர் இவர்கள் மீது படையெடுப்பார்கள் – எரே.46:13,24; எசே.32:11
இவர்களது வல்லமை அழிக்கப்படும் – எசே. 30:24–25
இவர்கள் நகரங்கள் அழிக்கப்படும் – எசே.30:14–18
இவர்களது விக்கிரகங்கள் அழிக்கப்படும் – எரே.43:12–13; 46:25; எசே.30:13
பாபிலோன் இராஜாவுக்கு எகிப்து கொடுக்கப்படும் – எசே.29:18–20
எகிப்தியர் சிறைபிடிக்கப்படுவர் – ஏசா.20:4; எரே.46:19,24,26; எசே.30:4
எகிப்து 40 ஆண்டுகள் பாழாய் கிடக்கும் – எசே.29:8–12; 30:12; 32:15
எகிப்திற்கு வரும் அழிவு அவர்கள் கூட்டாளிகளுக்கும் வரும் –எசே.30:4,6
யூதர்கள் எகிப்தியரோடு இணைந்தால் அவர்கள் மீதும் தண்டனை வரும் – எரே.44:7–28
எகிப்தியரால் மற்ற மக்களும் துன்பப்படுவார்கள் – எசே.32:9–10
எகிப்து முன்னேற முடியாத தேசமாகும் – எசே.29:15
எகிப்தில் தேவகுமாரன் இயேசு தங்கி இருப்பார் – ஓசி.11:1; மத்.2:15
எகிப்தில் கர்த்தரை தொழுகிற கூட்டம் எழும்பும் – ஏசா.19:18–21
இஸ்ரவேலருடைய ஆசீர்வாதம் இவர்களுக்கும் கிடைக்கும் – ஏசா.19:23–25
எகிப்தின் அழிவிற்கான உவமைகள் – எரே.43:9–13; எசே.30:21–26; 32:4–6

# 31. அசீரியர்

## (Assyrians)

**இவர்கள் வம்சம் :**

நிம்ரோத் என்பவனின் சந்ததி – ஆதி.10:8–12
இவன் பூமியில் பராக்கிரமசாலியாய் இருந்தான் – ஆதி.10:8
கர்த்தருக்கு முன் பலத்த வேட்டைக்காரனாய் இருந்தான் – ஆதி.10:9
பாபேல், ஏரேக், அக்காத், கல்னே ஆகிய இடங்களை ஆண்டான் – ஆதி.10:10
நினிவே, ரெகொபோத், ரெசேன் ஆகிய பட்டணங்களைக்கட்டினான் – ஆதி.10:10–12

**இவர்கள் தேசம் :**

இவர்களது தேசம் யூப்ரடீஸ் நதிக்கு அக்கரையில் இருந்தது – ஏசா.7:20
ஏதேனில் ஓடிய மூன்றாம் ஆறு இத்தேசத்தின் கிழக்கில் ஓடியது – ஆதி.2:14
அசீரியா தேசமென்றும் நிம்ரோத் தேசமென்றும் அழைக்கப்பட்டது – மீகா 5:6
அசீரியா, சிநெயார் தேசமென்றும் அழைக்கப்பட்டது – ஆதி.11:2
சிநெயாரை அம்ராப்பேல் என்ற இராஜா ஆண்டான் – ஆதி.14:1

நினிவே இவர்களது பிரதான நகரமாய் இருந்தது – 2 இரா.19:36; ஆதி.10:11
இராஜாக்களால் ஆளப்பட்டார்கள் – 2 இரா.15:19,29
செழிப்பு நிறைந்த வாழ்க்கையை வாழ்ந்தவர்கள் – 2 இரா.18:31–32
மது அருந்துவதில் பெயர்போனவர்கள் – ஏசா.36:16–17
தங்களது பெலத்தில் பெருமைப்பட்டனர் – 2 இரா.18:32; ஏசா.36:17
தங்கள் வெற்றியில் பெருமைப்பட்டனர் – 2 இரா.18:33–35
மற்ற தேசங்களை சங்கரித்து பிடித்தனர் – 2 இரா.19:11–13; ஏசா.10:9–14
வியாபாரத்தில் சிறந்து விளங்கினர் – எசே.27:23–24
நிஸ்ரோக் என்ற விக்கிரகத்தை வணங்கினர் – 2 இரா.19:36–37

**இவர்களது ஆட்சி :**

இவர்களைக் கண்டு மற்றவர்கள் அஞ்சும்படி இருந்தனர் – ஏசா.28:2
பிறரை அழிக்கவும் சங்கரிக்கவும் நினைத்தனர் – ஏசா.10:7
உண்மையற்று இருந்தார்கள் – 2 நாளா.28:20–21
பெருமையும் மேட்டிமையும் கொண்டனர் – 2 இரா.19:22–24; ஏசா.10:8

**இவர்களது அரசர்கள் :**

இவர்களது தலைவர்கள் கவர்ச்சிகரமானவர்கள் – எசே.23:6
இவர்களது இராணுவம் விரைவாய் செயல்பட்டது – ஏசா.5:26–29

**பூல் அரசனின் ஆட்சி :**

பூல் இராஜா இஸ்ரவேலை பகையுடன் பார்த்தான் – 2 இரா.15:19–20
மெனாகேம் என்பவன் அவர்களைக் காப்பாற்றினான் . – 2 இரா.15:19–20

**திகிலாத்பிலேசர் அரசனின் ஆட்சி :**

திகிலாத்பிலேசர் இஸ்ரவேலரை சூறையாடினான் – 2 இரா.15:29
இவனிடம் ஆகாஸ் சீரியரை எதிர்க்க உதவி கோரினான் – 2 இரா.16:7–8
இவன் ஆகாஸின் பணத்தைப்பெற்றும் அவனுக்கு உதவவில்லை– 2 நாள.28:20–21
இவன் சீரியரைக் கைப்பற்றினான் – 2 இரா.16:7–9

**சல்மனாசார் அரசனின் ஆட்சி :**

சல்மனாசார் இஸ்ரவேலை கப்பம் கட்டும்படி செய்தான் – 2 இரா.17:3
இவன் ஓசெயாவுக்கு எதிராக சதி செய்தான் – 2 இரா.17:4
இவன் இஸ்ரவேலை முற்றுகையிட்டு சிறைபிடித்தான் – 2 இரா.17:5–6
அசீரியாவிலிருந்து மக்களை சமாரியாவில் குடியேற்றினான் – 2 இரா.17:24

**சனகெரிப் அரசனின் ஆட்சி :**

யூதாவுக்கு விரோதமாக வந்து யூதாவைப்பிடித்தான் – 2 இரா.18:13
இவனிடமிருந்து எசேக்கியா யூதாவைக்காப்பாற்றினான் – 2 இரா.18:14–16

யூதாவை மிரட்டி அவமானப்படுத்தினான் – 2 இரா.18:17–32; 19:10–13
இவன் சேனைகளின் கர்த்தரை தூஷித்தான் – 2 இரா.18:33–35
இவனுக்காக எசேக்கியா விண்ணப்பம் செய்தான் – 2 இரா.19:14–19
இவனது பெருமைக்கு எதிராக பதில் கொடுக்கப்பட்டது – 2 இரா.19:34–36; ஏசா.37:21–29
இவனது இராணுவம் தேவனால் அழிக்கப்பட்டது – 2 இரா.19:35
இவன் தனது குமாரர்களால் வெட்டப்பட்டான் – 2 இரா.19:37

**இவர்களும் இஸ்ரவேலரும் :**

இவர்களால் தேவ ஜனங்கள் ஒடுக்கப்பட்டதாய் கர்த்தர் கூறுகிறார் – ஏசா.52:4
இவர்கள் தேவனது கோபத்தின் கோல் எனப்பட்டனர் – ஏசா.10:5
அவர் கரங்களில் சினத்தின் தண்டாயுதம் எனப்பட்டனர் – ஏசா.10:5
தேவன் தம் மக்களுக்கு எதிராகவும் இவர்களை பயன்படுத்தினார் – ஏசா.7:17; 10:6
மனாசே இவர்களால் சிறைபிடித்துக்கொண்டு போகப்பட்டான் – 2 நாளா.33:11
அஸ்னாப்பார் என்பவன் சமாரியாவிலே மக்களைக்குடியேற்றினான்– எஸ்ற.4:10
சமாரியாவில் விக்கிரக மேடைகளை உருவாக்கினார்கள் – 2 இரா.17:29
யூதா இவர்களை நம்பினதால் கடிந்துகொள்ளப்பட்டான் – எரே.2:18,36
இஸ்ரவேலர் இவர்களை நம்பினதால் கடிந்துகொள்ளப்பட்டனர்– ஓசி.5:13; 7:11; 8:9
யூதர்கள் இவர்களின் விக்கிரக ஆராதனையில் இணைந்ததால் கடிந்து கொள்ளப்பட்டனர் – எசே.16:28; 23:5–49
இவர்களது வளர்ச்சியும் வீழ்ச்சியும் சித்தரிக்கப்பட்டது –எசே.31:3–17

**இவர்களை குறித்த முன்னறிவிப்பு :**

இவர்கள் கேனியரை வீழ்த்துவார்கள் என உரைக்கப்பட்டது – எண்.24:22
சமாரியாவை வீழ்த்துவார்கள் என உரைக்கப்பட்டது – ஏசா.8:4
இஸ்ரவேலரை வென்று சிறைபிடிப்பர் – ஏசா.8:4; ஓசி.9:3; 10:6; 11:5
யூதாவின்மீது படையெடுத்தல் – ஏசா.5:26; 7:17–20; 8:8; 10:1, 5,6
இவர்களிடமிருந்து இஸ்ரவேல் மீட்கப்படும் – ஏசா.27:12,13; ஓசி.11:11; சகரி.10:10
இவர்களது அழிவு – ஏசா.10:12–19; 14:24,25; 30:31–33; 31:8,9; சகரி.10:11
இவர்கள் சுவிசேஷம் கேட்டு ஆசிர்வதிக்கப்படுவர் – ஏசா.19:23–25; மீகா 7:12

# 32. பாபிலோனியர்

**(Babylonians)**

**இவர்கள் வம்சம் :**

நிம்ரோத்தின் வம்சத்திலிருந்து வந்தவர்கள் – ஆதி.10:8–10
பாபேல் என்ற இடத்திலிருந்து உருவானவர்கள் – ஆதி.10:10; 11:8–9

கல்தேயர் என்ற தேசம் பாபிலோன் எனப்பட்டது – எசே.12:13
சிநெயார் தேசம் என்று அழைக்கப்பட்டது – தானி.1:2; சகரி.5:11
மெரதாயீம் என்று மறுபெயரும் இதற்கு உண்டு – எரே. 50:1,21
கடல் வனாந்தரம் என்ற புதுப்பெயருமுண்டு – ஏசா.21:1,9
கல்தேயரின் குமாரத்தி எனவும் அழைக்கப்பட்டது – ஏசா.47:1–5

**இவர்கள் தேசம் :**

இவர்கள் தேசம் யூப்ரடீஸ் நதிக்கப்பால் இருந்தது – ஆதி.11:31; யோசு.24:2,3
முற்காலத்தில் இது மெசொப்பொத்தாமியாவின் ஒரு பகுதி – அப்.7:2
இது அசீரிய மன்னர்களால் தீர்மானிக்கப்பட்டது – 2 இரா.17:24; ஏசா.23:13
நதிகளும் ஆறுகளும் இங்கு பாய்ந்தன – சங்.137:1; எரே.51:13
பலவித இனமொழி மக்கள் வாழ்ந்தனர் – தானி.3:4,29
இவர்கள் இராஜாக்களால் ஆளப்பட்டனர் – 2 இரா.20:12; தானி.5:1
மேதிய பெர்சியர்களால் 120 பகுதிகளாகப்பிரித்து ஆளப்பட்டது – தானி.6:1
பிரதான இராஜாவின் தலைமையில் ஆட்சி நடந்தது – தானி. 2:48; 6:1
பாபிலோன் இவர்களது ஆட்சிக்கு மையமாய் இருந்தது – தானி. 3:1
இவர்கள் கல்தேயர் மொழியையும் சீரிய மொழியையும் பேசினர் – தானி.1:4; 2:4

**இவர்களது தலைநகரச் சிறப்பு :**

பாபிலோன் இவர்களது தேசத்தின் தலைநகர் – தானி .3:1
பாபிலோன் மிகப்பழம்பெரும் நகரங்களில் ஒன்று – ஆதி. 11:4,9
நேபுகாத்நேச்சார் மன்னனால் விஸ்தரிக்கப்பட்டது – தானி. 4:30
இவன் மகா பராக்கிரமம் பொருந்திய மனிதனாய் இருந்தான் – தானி. 4:30
இவனால் பாபிலோன் நவீன மயமாக்கி கட்டப்பட்டது – தானி. 4:30
இதன் எல்லைச்சுவர் மிக உயரமாகவும் இருந்தது – எரே.51:53
இதில் விஸ்தாரமான மதில்களும் உயரமான வாசல்களும் இருந்தன– எரே.51:58
பொன்னகரி (Golden City) என அழைக்கப்பட்டது – ஏசா.14:4
இராஜ்யங்களின் நாயகி என அழைக்கப்பட்டது – ஏசா. 47:5
இராஜ்யங்களுக்குள் அலங்காரமான நகரம் – ஏசா.13:19
கல்தேயருடைய பிரதான மகிமையான நகரம் – ஏசா.13:19
வர்த்தக நகரமென்று கூறப்பட்டது – எசே.17:4
மகா பாபிலோன் என்று சிறப்புற அழைக்கப்பட்டது – தானி. 4:30

**இவர்களது சிறப்புகள் :**

இவர்கள் பூர்வகாலத்து இனத்தவர் – எரே.5:15
கடற்படை வசதி கொண்டவர்கள் – ஏசா.43:14
இராணுவ பலம் படைத்தவர்கள் – எரே.5:16; ஆப.1:8–10

இவர்கள் அனைவரும் பராக்கிரமசாலிகள் எனப்பட்டனர் – எரே.5:16
சர்வ பூமியின் சம்மட்டி என இவர்கள் பலம் சித்தரிக்கப்பட்டது – எரே.50:23
பாபிலோன் சிறப்பு தேசங்களுக்கெல்லாம் வியப்பை உண்டாக்கியது – ஏசா.13:19
மிகுந்த செல்வங்கள் இதில் இருந்தது – எரே.50:37; 51:13
வியாபாரத்தில சிறந்து விளங்கினர் – எசே.17:4
அலங்காரமான ஆடைகள் தயாரிப்பதில் புகழ்பெற்றனர் – யோசு.7:21
ஞானத்திலும் அறிவிலும் சிறந்து விளங்கினர் – ஏசா.47:10; எரே.50:35
பெரிய கழுகுக்கு ஒப்பானவர்கள் – எசே.17:3
சிங்கத்தைப் போன்ற முகமும் கழுகின் செட்டைக்கும் ஒப்பானவர்கள் – தானி.7:4

**இவர்களது குணநலன்கள் :**

இவர்கள் கெடியும் பயங்கரமுமானவர்கள் – ஆப.1:7
கொடிதும் வேகமுமானவர்கள் – ஆப.1:6
நியாயத்தையும் புகழையும் இவர்களே முடிவு செய்வார்கள் – ஆப.1:7
துன்மார்க்கமும் பெருமையும் கொண்டவர்கள் – ஏசா.47:10
சூனியங்களுக்கும் வித்தைகளுக்கும் அடிமைகள் – ஏசா.47:9,12
ஜோசியர்களை நம்பியவர்கள் – ஏசா.47:13; தானி. 2:1
நாள் நட்சத்திரங்களைப் பார்த்தவர்கள் – ஏசா.47:13
அமாவாசையைக் கணித்தவர்கள் – ஏசா.47:13
பிரச்சனைக்கு சாஸ்திரிகளையும், சூனியக்காரர்களையும் தேடியவர் – தானி. 2:2
மது அருந்தியவர்கள் – தானி.5:1
பலதார மணம் புரிந்தவர்கள் – தானி.5:2
ஆணும் பெண்ணும் சேர்ந்து குடித்தவர்கள் – தானி.5:2
பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு, மரம், கல்லால் ஆன தேவர்களை வணங்கி அவைகளைப் புகழ்ந்தவர்கள் – தானி.5:4
பெரிய சிலைகளை வணங்கினர் – தானி. 3:1–2
இசைக்கருவிகளை வாசிப்பதில் தேறியிருந்தனர் – தானி.3:5,10
இவர்கள் கர்வம் மிகுந்த மக்களாய் இருந்தனர் – எரே.50:29,31,32
எதைப்பற்றியும் நினைப்பவர்களல்ல – ஏசா.47:7
எதைக்குறித்தும் கவலையின்றி வாழ்ந்தவர்கள் – ஏசா.47:8
சுக செல்வியைபோல சுகமாய் வாழ்ந்தவர்கள் – ஏசா.47:8
செருக்குக்காரிபோல் அலங்காரத்தோடு வாழ்ந்தவர்கள் – ஏசா.47:1
திரண்ட சம்பத்துடையவர்களாய் விளங்கினர் – எரே.51:13
பொருளாசைக்காரர்களாய் வாழ்ந்தனர் – எரே.51:13
மற்றவர்களை ஒடுக்கியே வளர்ந்தனர் – ஏசா.14:4
பிறரை அழிப்பதில் போர்க்கோலம் செய்தனர் – ஏசா.14:17

**இவர்களது ஆட்சி :**

நினிவேயின் வீழ்ச்சியால் அசீரிய ஆட்சி படிப்படியாக அழிந்து பாபிலோனிய ஆட்சி வலுவான வளர்ச்சி பெற்று தலை தூக்க ஆரம்பித்தது. பெரோதாக்பலாதான் இராஜா எசேக்கியாவோடு உறவு வைத்தான் – 2 இரா.20:12–13

**நேபுகாத்நேச்சாரின் ஆட்சி :**

பாபிலோன் இராஜாவாக நேபுகாத்நேச்சார் பொறுப்பெடுத்தான் – 2 இரா.24:1
யோயாக்கீன் அரசன் மூன்று வருடம் இவனை சேவித்தான் – 2 இரா.24:1
நேபுகாத்நேச்சார் எருசலேமை முற்றுகையிட்டான் – 2 இரா.24:10–11
நேபுகாத்நேச்சார் அனைவரையும் பாபிலோனுக்கு சிறைகொண்டு போனான் – 2 இரா.24:12–16; 2 நாளா.36:10
இஸ்ரவேலரின் கலகத்திற்குத்தண்டனை உவமையாக கூறப்பட்டது– எசே.17:1–24
இஸ்ரவேலருக்கு இவர்களால் அறிவு கூறப்பட்டது – எரே.27:17; 29:1–7
நேபுகாத்நேச்சார் தேவாலயத்தைப் பாழ்படுத்தினான் – 2 இரா.24:13
இவன் யோயாக்கீமின் சிறிய தகப்பனான மத்தனியாவுக்கு சிதேக்கியா என பெயர் மாற்றி அவனை இராஜாவாக வைத்தான் – 2 இரா.24:17
இந்த சிதேக்கியா நேபுகாத்நேச்சாருக்கு எதிரானான் – 2 இரா.24:20
பின்பு நேபுகாத்நேச்சாரால் எருசலேம் முற்றுகையிடப்பட்டது – 2 இரா.25:1
இவர்கள் எருசலேமை அக்கினியால் சுட்டெரித்துப்போட்டார்கள்– 2 இரா.25:9–10
சிதேக்கியாவையும் பாபிலோனுக்கு சிறையாக்கினார்கள் – 2 இரா.25:7–21
தேவாலயத்தை எரித்துப்போட்டார்கள் – 2 இரா.25:9, 13–17; 2 நாளா.36:18–19
நேபுகாத்நேச்சார் சிறையிட்டு கொண்டுபோனவர்களில் யோயாக்கீன் ராஜா மற்றும் யூதர்களான தானியேல் அவனது கூட்டத்தாரும் அடங்குவர்– தானி.1:6
யூதர்கள் இதற்காக துக்கப் பாடல் பாடினர் – சங்.137:1–6
நேபுகாத்நேச்சாரின் ஆட்சி முடிவுற்றது – தானி. 4:31–32

**ஏவில்மெரொதாக்கின் ஆட்சி :**

நேபுகாத்நேச்சாரின் மறைவிற்குபின்பு அவனது மகன் ஏவில்மெரொதாக் என்பவன் பாபிலோனியாவில் ஆட்சிக்கு வந்தான் – 2 இரா.25:27
ஏவில்மெரொதாக் பாபிலோனை ஆண்டுகள் மட்டுமே ஆண்டபோது இவன் யூதர்களுக்கும் யோயாக்கீனுக்கும் இரக்கம் காட்டினான் – 2 இரா.25:27–30

**நப்போனிடஸ் ஆட்சி :**

ஏவில்மெரொதாக்கிற்கு பிறகு நப்போனிடஸ் என்பவன் ஆளுகைக்கு வந்தான். இவனைக்குறித்து வேதத்தில் எங்கும் குறிப்பிடப்படவில்லை

**பெல்ஷாத்சார் ஆட்சி :**

நப்போனிடஸ் ஆட்சியின் மூன்றாம் ஆண்டிலிருந்து பெல்ஷாத்சார் என்பவன்

அவனோடு இணைந்து ஆட்சி செய்து வந்தான். ஆனால் பாபிலோனிய தலைநகருக்கு வெளியே இருந்த பகுதிகளில் தங்கி ஆட்சி செய்தான். பாபிலோனிலிருந்த பெல்ஷாத்சாரின் ஆட்சியின்போது தேவனுடைய விரல் எழுதிய செய்தியால் அவன் ஆட்சி முடிவுக்கு வந்தது – தானி.5:1–30

இதன்பின் பாபிலோனியர் சாம்ராஜ்யம் மேதியர்களால் கைப்பற்றப்பட்டு பாபிலோனியர் ஆட்சியே முடிவு பெற்றது – தானி.5:31

பாபிலோனில் மேதிய–பெர்சிய ஆட்சி வந்ததும் கோரேஸ் என்பவன் இராஜ பதவி ஏற்ற முதல் ஆண்டில் யூதர்களை விடுதலை செய்து அவர்களைத் தங்கள் தேசத்திற்கு செல்லும்படி உதவினான் – 2 நாளா.36:20–23; எஸ்றா.1:1–2

**புதிய ஏற்பாட்டில் பாபிலோன் :**

இந்நகரில் திருச்சபை நிறுவப்பட்டதாக பேதுரு எழுதியுள்ளான் –1 பேது.5:13

பாபிலோன் அந்திக் கிறிஸ்துவின் ஆட்சியில் பாவம் பெருத்த தேசத்திற்கு அடையாளமாகக் கூறப்படுகின்றது – வெளி.16:19; 17:5

**பாபிலோனைக் குறித்த முன்னறிவிப்புகள் :**

பாபிலோனியர்கள் அடையும் வெற்றியைக் குறித்து முன்னறிவிப்பு
– எரே.21:3–10; 27:2–6; 49:28–33; எசே. 21:19–32; 39:18–20

யூதர்கள் சிறைப்பிடிக்கப்படுவதைக் குறித்த முன்னறிவிப்பு
– எரே.20:4–6; 22:20–26; 25:9–10; மீகா 4:10

பாபிலோனிலிருந்து யூதர்களின் விடுதலையைக் குறித்த முன்னறிவிப்பு
– ஏசா.14:1–4; 44:28; 48:20; எரே:29:10; 50:4,8,19

பாபிலோனியர்களின் அழிவைக் குறித்த முன்னறிவிப்பு
– ஏசா.13:1–22; 14:4–22; 21:1–10; 47:1–15; எரே.25:12; 50:1–51:64

இவர்களது குடிகளுக்கு நிரந்தர முடிவைக் கூறும் முன்னறிவிப்பு
– ஏசா:13:19–22; 14:22,23; எரே.50:1–46; 51:37

நற்செய்தி இங்கு பிரசங்கிக்கப்பட முன்னறிவிப்பு – சங்.87:4

# 33. மேதிய–பெர்சியர்கள்

## (Medians - persians)

**இவர்கள் வம்சம் :-**

சேமுடைய மகன் ஏலாம் என்பவனின் வம்சத்தார் – ஆதி.10:22

இந்தியா முதல் எத்தியோப்பியாவரை ஆண்டவர்கள் – எஸ்த.1:1

நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட சிலையின் வெள்ளிப்பகுதியே இந்த இராஜ்ஜியத்திற்கு முன்னறிவிப்பாக இருந்தது – தானி. 2:32,39

தானியேல் கண்ட இரண்டாம் மிருகம் இவர்கள் ஆட்சியாகும் – தானி.7:5
தானியேல் கண்ட இரண்டு கொம்புள்ள ஆட்டுக்கடா இவர்களே – தானி.8:3,20

**இவர்கள் தேசம் :**

சூசான் நகரம் இவர்களது பிரதான ஆட்சி நகரமாகும் – எஸ்த.1:2; 8:15
இவர்கள் ஆட்சி பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு நடந்தது – எஸ்த.1:1; தானி.6:1
தேசாதிபதிகள் இவ்வாட்சியை நடத்தினார்கள் – தானி.6:1–2
தேசாதிபதிகளின் தலைவராக இராஜா பொறுப்பேற்றிருந்தார் – எஸ்த.1:1–2
இவர்களது சட்டம் நிலையற்ற சட்டங்களாய் இருந்தன – தானி.6:12,15

**இவர்களது அரசர்கள் :**

கோரேஸ் இவ்வம்சத்து அரசன் – எஸ்றா.1:1
அகாஸ்வேரு இவ்வம்சத்து அரசன் – எஸ்றா.4:6; எஸ்தர் 1:1–2
அர்தசஷ்டா இவ்வம்சத்து அரசன் – எஸ்றா.4:7
தரியு இவ்வம்சத்து அரசன் – எஸ்றா.6:1; தானி. 5:31
மற்ற மூன்று இராஜாக்கள் – தானி.11:2

**இவர்களது ஆட்சி :**

பாபிலோன் இராஜாக்கள் என அழைக்கப்பட்டார்கள் – நெகே.13:6
இராஜாதி இராஜா என அழைக்கப்பட்டார்கள் – எஸ்றா.7:12
மகாபெரிய அரண்மனைகளில் வீற்றிருந்தார்கள் – எஸ்த.1:2–4
மகா செல்வ செழிப்போடு வாழ்க்கை நடத்தினார்கள் – எஸ்த.1:2–4
மிகப்பெரிய அரண்மனைகளோடு ஆடம்பர ஆட்சி செய்தார்கள் – எஸ்த.1:3,5,7
கைகளில் பொற்செங்கோல்கள் வைக்கும் வழக்கம் இருந்தது – எஸ்த.5:2
விசாரிப்பின்றி தண்டிக்கும் அதிகாரம் கொண்டிருந்தனர் – எஸ்த.4:11,16
ஞானிகளெல்லாம் ஒன்றாய்க் கூடும் நிகழ்ச்சிகள் நடந்தன – எஸ்த.1:13
விநோதமான செயல்முறைகளை அனுசரித்தனர் – எஸ்த.1:8; 2:12–13
மனைவிகளை புருஷர்கள் அதிகாரம் செய்ய விரும்பினர் – எஸ்த.1:17,20,22
பாபிலோனை வீழ்த்தி ஆட்சிக்கு வந்தனர் – தானி.5:20,31
யூதர்களை சிறையிலிருந்து விடுவித்தனர் – 2 நாளா.36:20–23; எஸ்ற.1:1–4

**இவர்களைக் குறித்த முன்னறிவிப்புகள்:**

இவர்களது ஆட்சியின் விரிவாக்கம் – தானி.8:4
பாபிலோனை வீழ்த்தி வெற்றி கொள்ளுதல் – ஏசா.21:1–2; தானி.5:28
யூதர்களை விடுவித்தல் – ஏசா.44:28
இவர்கள் கிரேக்கரால் முற்றுகையிடப்படுதல் தானி.11:2
இவர்கள் அலெக்சாண்டரால் வீழ்த்தப்படுதல் – தானி.8:6–7; 11:3

# 34. சதுசேயர்கள்

## (The Sadducees)

இவர்கள் யூதர்களில் ஒரு சமயக் கூட்டத்தார் – அப்.5:17
இவர்கள் உயிர்த்தெழுதலில் நம்பிக்கையில்லாத மக்கள் – மத்.22:23; லூக்.20:27
தேவதூதர் இல்லையென்று கூறும் மக்கள் – அப்.23:8
ஆவி இல்லையென கூறும் மக்கள் – அப்.23:8
பரிசேயரின் நம்பிக்கைகளுக்கு எதிரானவர்கள் – அப்.23:6–7
இவர்களில் அநேகர் யோவானிடம் ஞானஸ்நானம் பெற்றனர் – மத்.3:7

**இவர்களும் இயேசுவும் :**

இயேசுவை சோதிக்கும்படி அடையாளம் கேட்டவர்கள் – மத்.16:1
இவர்களது உபதேசத்துக்கு எச்சரிக்கையாய் இருக்கும்படி இயேசு தம் சீடர்களை வலியுறுத்தினார் – மத்.16:6,11–12
உயிர்தெழுதல்இல்லையெனசாதித்துஇயேசுவைசோதித்தனர்–மத்.22:24–32;மாற்.12:19–27
ஆதி சபையில் சீடர்களை உபத்திரவப்படுத்தினர் – அப்.4:1; 5:17,18,40

# 35. பரிசேயர்கள்

## (The Pharisees)

யூதர்களின் ஒரு வகைப்பிரிவினர் – அப்.15:5
மோசேயின் சட்டங்களை கண்டிப்பாய் கடைபிடிப்பவர்கள் – அப்.26:5
சதுசேயரோடு இணைந்து செல்லாதவர்கள் – அப்.23:8
நியாயப்பிரமாணத்தில் வைராக்கியம் கொண்டவர்கள் – அப்.15:5; பிலி.3:5–6
பாரம்பரியத்தில் வைராக்கியம் கொண்டவர்கள் – மாற்.7:3–8; கலா.1:14
வெளிப்புறத்தில் நல்லவர்கள்போல் நடப்பவர்கள் – லூக்.18:11; பிலி.3:5–6
உட்புறத்தில் அசுத்தமாய் இருந்தார்கள் – மத்.23:25–28
பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணுபவர்கள் – மத்.23:14
தவறாமல் உபவாசம் இருப்பவர்கள் – லூக்.5:33; 18:12
மற்றவர்களை தங்கள் மார்க்கத்தில் இழுக்க அலைபவர்கள் – மத்.23:15
சுயநீதியை வெளிக்காட்டுபவர்கள் – லூக்.16:15; 18:9
விதவைகளின் வீடுகளைப்பட்சித்தவர்கள் – மத்.23:14
பொருளாசைக்காரராய் இருந்தவர்கள் – லூக்.16:14
முதன்மையான இடங்களை விரும்புபவர்கள் – மத்.23:2,6
மக்கள்மீது பாரங்களை சுமத்தியவர்கள் – மத்.23:4
தாங்கள் ஒன்றும் செய்யாதவர்கள் – மத்.23:4

மனுஷர் தங்களைக் காணும்படி நடப்பவர்கள் – மத்.23:5
தங்கள் வஸ்திரத் தொங்கல்களைப் பெரிதாக்கி அணிபவர்கள் – மத்.23:5
சந்தைவெளியில் வந்தனங்களை விரும்பியவர்கள் – மத்.23:7
பதவி பட்டங்களை விரும்பியவர்கள் – மத்.23:7–10
பரலோக வழிகளைப் பூட்டிப்போட்டவர்கள் – மத்.23:13
எல்லாவற்றிலும் தசமபாகம் செலுத்தியவர்கள் – மத்.23:23
நீதி, இரக்கம், விசுவாசத்தை விட்டுவிட்டவர்கள் – மத்.23:23
கல்லறைகளை சிங்காரித்தவர்கள் – மத்.23:29
கொடூரமான குணம் கொண்டவர்கள் – அப்.9:1–2
உயிர்த்தெழுதலில் நம்பிக்கை கொண்டவர்கள் – அப்.23:8
தேவதூதரையும் ஆவியையும் நம்புகிறவர்கள் – அப்.23:8
இவர்களில் ஆசாரியர்களும் லேவியர்களும் அதிகமிருந்தனர் – யோ.1:19,24
பலர் அதிகாரிகளாயும் நியாயசாஸ்திரிகளாயும் இருந்தனர் – யோ.3:1; அப்.5:34
இவர்களுக்கு சீடர்கள் அதிகமிருந்தனர் – லூக்.5:33; அப்.22:3
இவர்களில் பலர் யோவானிடத்தில் ஞானஸ்நானம் பெற்றனர் – மத்.3:7
இவர்களில் அநேகர் ஞானஸ்நானத்தை புறக்கணித்தனர் – லூக்.7:30

**இயேசுவும் பரிசேயர்களும் :**

இயேசுவை விருந்துக்கு அழைத்தவர்களும் உண்டு – லூக்.7:36; 11:37
இயேசு விருந்துக்கு சென்றதை பலர் விரும்பவில்லை – மத்.9:11; லூக்.7:39;15:2
இவர்களில் சிலர் இயேசுவினிடத்தில் அடையாளம் கேட்டனர் – மத்.12:38; 16:1
நியாயப்பிரமாணத்தைக் குறித்து கேள்வி கேட்டனர் – மத்.19:3; 22:15,16,35
இயேசுவைக் குற்றம் கண்டுபிடிக்கும்படி காத்திருந்தனர் – லூக்.6:7
இயேசு வசனத்தால் அவர்களை கண்டித்தார் – மத்.15:12; 21:45; லூக்.16:14
இயேசு இவர்களது உபதேசத்தை எச்சரித்தார் – மத்.16:11–12; லூக்.12:1
இயேசு இவர்களது வாழ்க்கையைக் கண்டித்தார் – மத்.23:13–33
இயேசு இவர்களைப் பொல்லாத விபச்சாரச் சந்ததி என்றார் – மத்.12:39
இயேசு இவர்களை விரியன்பாம்புக் குட்டிகள் என்றார் – மத்.23:33
இயேசு இவர்களை குருடரான வழிகாட்டிகள் என்றார் – மத்.23:16,24
இயேசு இவர்களை வெள்ளையடிக்கப்பட்ட கல்லறை என்றார் – மத்.23:27
இயேசு இவர்களை பிரேதக் குழிகளைப்போலிருக்கிறவர்கள் என்றார் – லூக்.11:44
இயேசு இவர்களை விட்டு ஒதுங்கி வாழ்ந்தார் – யோவா.4:1–3
இவர்கள் இயேசுவைப் பிசாசுகளின் தலைவனைக்கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறார் என்றனர் – மத்.9:34
இவர்கள் இயேசுவைப் பிடிக்க அதிகாரிகளை அனுப்பினார்கள் – யோவா.7:32,45
இவர்கள் இயேசுவைக் கொலைசெய்ய வகை தேடினவர்கள் – மத்.12:14; 21:46; யோவா.11:47, 53, 57

# 36. வேதபாரகர்
## (Scribes)

**இவர்கள் வம்சம் :**

எழுதுகோலைப் பிடிக்கிற கூட்டத்தாரே வேதபாரகர் – நியா.5:14
கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிறவர்கள் – எசே.9:2–3
யாபேசில் குடியிருந்த கணக்கரின் வம்சத்தார் – 1 நாளா.2:55
செபுலோனில் குடியிருந்த கூட்டத்தார் – நியா.5:14
லேவியரில் இருந்த கணக்கர் கூட்டத்தார் – 2 நாளா.34:13

**இவர்களது குணநலன்கள் :**

நியாயப்பிரமாணத்தில தேறினவர்களாய் இருந்தனர் – எஸ்றா.7:6

**பழைய ஏற்பாட்டில் இவர்களது வாழ்க்கை :**

இராஜாக்களுக்கு சம்பிரதிகளாய் (உதவியாளர்) பணி புரிந்தனர்
– 2 சாமு.8:17; 20:25; 2 இரா.12:10; எஸ்த. 3:12
தீர்க்கதரிசிகளுக்கு சம்பிரதிகளாய் இருந்தனர் – எரே.36:4,26
நீதிபதிகளுக்கு உதவும் பணியாளர்களாய் இருந்தனர் – எரே.32:11–12
சமய போதகர்களாய் இருந்தனர் – நெகே.8:2–6
ஆவணங்கள் எழுதும் எழுத்தாளர்களாய் இருந்தனர் – 1 நாளா.24:6
சேவகம் எழுதுகிற இராணுவ சம்பிரதிகளாய் இருந்தனர்
– 2 இரா.25:19; 2 நாளா.26:11; எரே.52:25

**புதிய ஏற்பாட்டில் இவர்களது வாழ்க்கை :**

பரிசேயரில் சிலர் வேதபாரகராய் இருந்தார்கள் – அப்.23:9
நியாயசாஸ்திரி என அழைக்கப்பட்டார்கள் – மத்.22:35
வேதபாரகர் எனவும் அழைக்கப்பட்டார்கள் – மாற்.12:28
நீண்ட அங்கிகளைத் தரித்து நடந்தார்கள் – மாற்.12:38
சந்தைவெளிகளில் வந்தனங்களை விரும்பினார்கள் – மாற்.12:38
ஜெப ஆலயங்களில் முதலிடத்தில் அமர்ந்தார்கள் – மாற்.12:39
விருந்துகளில் முதன்மையான இடத்தைப் பிடித்தார்கள் – மாற்.12:39
விதவைகளின் வீடுகளைப் பட்சித்தார்கள் – மாற்.12:40
பார்வைக்கு நீண்ட ஜெபம் பண்ணினார்கள் – மாற்.12:40
தாங்கள் கைக்கொள்ளாததை பிறர் கைக்கொள்ளும்படி போதித்தார்கள் – மத்.23:3
மனுஷர் காணவேண்டுமென கிரியை செய்தார்கள் – மத்.23:5
ரபீ என அழைக்கப்படுவதை விரும்பினார்கள் – மத்.23:7
பரலோக ராஜ்யத்தைப் பூட்டிப் போட்டார்கள் – மத்.23:13

மற்றவர்களைத் தங்கள் மார்க்கத்தில் சேர்க்க முயற்சித்தார்கள் – மத்.23:15
சத்தியம் பண்ணுவதை நம்பினார்கள் – மத்.23:16–22
எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தார்கள் – மத்.23:23
நீதி, இரக்கம், விசுவாசம் இவைகளை விட்டுவிட்டார்கள் – மத்.23:23
மாயத்திலும் அக்கிரமத்திலும் நிறைந்திருந்தார்கள் – மத்.23:28
கல்லறைகளை சிங்காரித்தார்கள் – மத்.23:29
மோசேயின் ஆசனத்தில் உட்கார்ந்தார்கள் – மத்.23:2
ஞானிகளின் வரிசையில் இடம் பெற்றார்கள் – 1 கொரி.1:20
சாஸ்திரங்களை வியாக்கியானம் செய்வோராய் இருந்தார்கள்
– மத்.2:4; 17:10; மாற்.12:35
அதிகாரமற்ற பிரசங்கத்தைச் செய்தனர் – மத்.7:28
இயேவின் போதனைகள் இவர்கள் போதனைகளிலிருந்து வேறுபட்டிருந்தது
– மத்.7:29; மாற்.1:22
இயேசு இவர்களை மாயக்காரர் என்றார் – மத்.23:13,14,15,25,27,29
இயேசுவின் ஊழியங்களில் பங்கேற்று விமர்சித்தனர் – மத்.21:15; மாற்.2:6,7,16; 3:22
இயேசுவின் வார்த்தைகளை சோதித்தனர் – யோவா.8:3
இயேசுவைப் பிடிக்கும் கூட்டத்தில் ஆலோசகராய் இருந்தனர் – மத்.26:3; லூக்.23:10
ஆதிக்கிறிஸ்தவர்களைத் துன்பப்படுத்தினர் – அப்.4:5; 6:12

# பலிகள்



## I. பலிபீடங்கள்

**(Altar)**

பலிபீடங்கள் மண்ணினால் உண்டாக்கப்பட்டது – யாத்.20:24

சில பலிபீடங்கள் கல்லினால் உண்டாக்கப்பட்டது – யாத்.20:25

கல்லினால் உண்டாக்கப்பட்ட பலிபீடம் கல்லில் வெட்டப்பட்டதாய் இராமலும் உளி படாததாயும் இருக்க வேண்டும் – யாத்.20:25; உபா.27:5,6

பலிபீடம் இருப்பாயுதம் படாத கல்லினால் கட்டப்படவேண்டும் – உபா.27:5

பலிபீடத்தில் ஆடு மாடுகளை சர்வாங்க தகனபலியாகவும், சமாதான பலியாகவும் செலுத்தலாம் – யாத்.20:24

இயற்கையான கற்பாறை பலிபீடமாகவும் பயன்பட்டது – நியா.6:20; 13:19

பலிபீடத்தில் நிர்வாணம் தெரியக்கூடாது – யாத்.20:26

அந்நிய பலிபீடங்கள் தகர்க்கப்பட்டன – 2 இரா.23:12

விக்கிரக ஆராதனைக்காரர்களும் பலிபீடம் அமைத்திருந்தார்கள் – 1 இரா.16:32; 2 இரா.21:3; எரே.19:13; 32:29

விக்கிரக ஆராதனைக்காரருக்குரிய பலிபீடங்களை அழிக்கும்படி கர்த்தர் மோசேக்குக் கட்டளையிட்டார் – யாத்.34:13; உபா.7:5

பலிபீடம் அதோனியா உயிரையும் காப்பாற்றியது – 1 இரா.1:50–57

பிறனுக்கு விரோதமாக சதிமோசம் செய்து துணிகரமாய் கொன்று போட்டால் பலிபீடத்திலிருந்தும் பிடித்துக்கொண்டுபோய் கொலை செய்யப்பட வேண்டும் – யாத்.21:14

**வேதத்தில் பலிபீடம் கட்டிய மனிதர்கள்**

பேழையிலிருந்து வெளியே வந்த நோவா பலிபீடம் கட்டினான் –ஆதி.8:20

ஆபிரகாம் பலிபீடம் கட்டி கர்த்தரைத் தொழுதான் – ஆதி.12:7–8; 13:18; 22:9

ஈசாக்கு கர்த்தருக்கு பலிபீடம் கட்டினான் – ஆதி.26:25

யாக்கோபு ஆண்டவருக்கு பலிபீடம் கட்டினான் – ஆதி.33:20; 35:1,3,7

மோசே கர்த்தருக்கு பலிபீடம் கட்டினான் – யாத்.17:15; 24:4

பாலாக் சர்வாங்க தகனபலியிட பலிபீடம் கட்டினான் – எண்.23:1, 14, 29

யோசுவா இருப்பாயுதம் படா முழுக்கல்லில் பலிபீடம் கட்டினான் – யோசு.8:30

சாலொமோன் தேவாலயத்தில் பலிபீடம் உண்டாக்கினான் – 2 நாளா.4:1,19

எஸ்றா தேவாலயத்தில் பலிபீடம் கட்டினான் – எஸ்றா 3:2–3

யோர்தானின் கிழக்குக் கோத்திரத்தார் பலிபீடம் கட்டினர் – யோசு.22:10

கிதியோன் கற்பாறை உச்சியிலே பலிபீடம் கட்டினான் – நியா.6:26–27

இஸ்ரவேல் மக்கள் பலிபீடம் கட்டினர் – நியா.21:4

சாமுவேல் ராமாவில் கர்த்தருக்கு ஒரு பலிபீடம் கட்டினான் – 1 சாமு.7:17

தாவீது வாதை நிறுத்தப்பட பலிபீடம் கட்டி பலியிட்டான் – 2 சாமு.24:21,25

யெரொபெயாம் பெத்தேலில் பலிபீடம் கட்டினான் – 1 இரா.12:32–33

ஆகாஸ் தமஸ்குவில் பலிபீடம் கட்டினான் – 2 இரா.16:10–12

இஸ்ரவேலர் தகனபலிபீடமும் தூபபீடமும் செய்து பலியிட்டனர் – யாத்.27:1–8; 30:1–10

அத்தேனே பட்டணத்தார் பலிபீடத் தொழுகை செய்தனர் – அப்.17:23

# 2. பலிகள் / காணிக்கைகள்
## (Offerings)

பலிகள் தேவனுக்காக மட்டும் இடும்படி ஏற்படுத்தப்பட்டது – நியா. 13:16; யாத். 22:20

ஆதி நாட்கள் முதற்கொண்டே இது இருந்து வந்தது – ஆதி.4:3,4

இவைகள் பரிசுத்தத்திற்கு அடையாளமாக இருந்தன – எண்.18:9

**பலிகளின் வகைகள் :**

தகனபலி – லேவி.1:3–17; சங்.66:15

| | |
|---|---|
| சர்வாங்க தகனபலி | – லேவி.1:1–17; 6:8–13 |
| பாவ நிவாரணபலி | – லேவி.4:3–35; 6:25; 10:17 |
| குற்ற நிவாரண பலி | – லேவி.5:16–19; 6:6; 7:1 |
| சமாதான்பலி | – லேவி.3:1–17; 7:11 |
| அசைவாட்டும்பலி | – யாத்.29:26; லேவி.7:30 |
| போஜனபலி | – லேவி.2:1–16; எண்.15:4 |
| பானபலி | – யாத்.29:40; எண்.15:5 |
| ஸ்தோத்திரபலி | – லேவி.7:12; 22:29; சங்.50:14 |
| உற்சாகபலி | – லேவி.23:37; உபா. 23:23 |
| தூபபலி | – யாத்.30:8; மல்.1:11; லூக்.1:9 |
| முதற்பலனில் காணிக்கை | – யாத்.22:29 |
| தசமபாக காணிக்கை | – எண்.18:21; உபா.14:22 |
| பொருட்காணிக்கை | – எண்.5:15; 7:2–18 |
| ஆபரணக்காணிக்கை | – யாத்.35:22 |
| மீட்கும் பொருட்காணிக்கை | – யாத்.30:2–15 |

**பலியிட தேவையான தகுதிகள்**

| | |
|---|---|
| பலி பழுதில்லாமல் உத்தமமாய் இருக்க வேண்டும் | – லேவி.22:21 |
| மனதில் நியமித்தபடி செலுத்த வேண்டும் | – லேவி.22:19 |
| நீதியாக செலுத்த வேண்டும் | – மல்கி.3:3 |
| சகோதரனோடு ஒப்புரவாகி செலுத்த வேண்டும் | – மத்.5:23–24 |
| சுத்தமான பாத்திரத்தில் செலுத்த வேண்டும் | – ஏசா.66:20 |
| தேவன் தெரிந்துகொள்ளும் இடத்தில் பலியிட வேண்டும் | – உபா.12:5–7 |
| காணிக்கையை பலிபீடத்தின் முன்பு கொண்டுவந்து வைக்க வேண்டும் | – மத்.5:23–24 |
| ஆசாரியனே பலியிட வேண்டும் | – எபி.5:1 |
| காணிக்கையைத் தாமதமில்லாமல் செலுத்த வேண்டும் | – யாத்.22:29–30 |

**பலியிடக்கூடாத பொருட்கள் :**

| | |
|---|---|
| வேசிப்பணயத்தை பலியில் சேர்க்கக்கூடாது | – உபா.23:18 |
| நாயின் கிரயத்தை பலியில் சேர்க்கக்கூடாது | – உபா.23:18 |
| குருடு, நெரிசல், முடம், கழலை, சொறி, புண் முதலான பழுதுள்ளவைகளை பலியில் சேர்க்கக்கூடாது | – லேவி.22:22 |
| விதை நசுங்கினதும், நெருக்கினதையும், காயப்பட்டதையும், விதை அறுக்கப்பட்டதையும் பலியிடக்கூடாது | – லேவி.22:24 |
| பசுவையும், கன்றையும்; ஆட்டையும் அதன் குட்டியையும் ஒரே நாளில் பலியிடக்கூடாது | – லேவி.22:28 |
| சுத்தமில்லாத யாதொரு மிருகத்தையும் பலியிடக்கூடாது | – லேவி.27:11 |
| காணிக்கையை தேவாலயத்தில் கொண்டு வரவேண்டும் | – 2 நாளா.31:12 |

ஆலய பண்டகசாலையில் காணிக்கையை சேர்க்க வேண்டும் – 2 நாளா.31:11

புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து அனைவருக்காகவும் அனைத்து பலிகளின் சார்பாக தம்மையே ஒப்புக்கொடுத்தார் – எபே.5:2

# 3. தகனபலிபீடம்

## (The Altar of Burnt - offering)

இதற்கு வெண்கல பீடம் என்றும் பெயர் – யாத்.39:39; 1 இரா.8:64

தேவனுடைய பலிபீடம் எனவும் அழைக்கப்பட்டது – சங்.43:4

கர்த்தருடைய பலிபீடம் எனவும் அழைக்கப்பட்டது – மல்கி.2:13

தகன பலிபீடம் சித்தீம் மரத்தால் செய்யப்பட்டது – யாத்.27:1; 38:1

இது 5 முழ நீளம், 5 முழ அகலம், 3 முழ நீளமானது – யாத்.27:1; 38:1

இதன் 4 முனைகளிலும் கொம்புகள் இருக்கும் – யாத்.27:1; 38:2

இது வெண்கலத் தகட்டால் மூடப்பட்டது – யாத்.27:2; 38:2

இதன் பணிமுட்டுகளெல்லாம் வெண்கலத்தாலானவை – யாத்.27:3; 38:3

இதற்குள் வெண்கல வலைப்பின்னல் சல்லடை வைக்கப்பட்டது – யாத்.27:4,5; 38:4

இந்த சல்லடையின் 4 முனைகளிலும் 4 வளையங்கள் இருக்கும் – யாத்.27:4,5; 38:4,5

பலிபீடத்தின் மாதிரி மோசேக்குக் காட்டப்பட்டது – யாத்.27:8

இது ஆசரிப்புக்கூடார ஸ்தலத்தின் வாசலுக்குமுன் வைக்கப்பட்டது – யாத்.40:6,29

இது தேவனால் பரிசுத்தமாக்கப்பட்டது – யாத்.29:44இது பரிசுத்த எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டு பரிசுத்த மாக்கப்பட்டது – யாத்.40:10; லேவி 8:10–11

பலிபீடத்திற்காக பிராயச்சித்தம் செய்யப்பட்டது – யாத்.29:36–37

இது மகாபரிசுத்தமான பலிபீடமாகும் – யாத்.40:10

இப்பீடத்தை தொடுகிறதெல்லாம் பரிசுத்தமாகும் – யாத்.29:37

இதன்மேல் இடைவிடாமல் பலியிடப்படும் – யாத்.29:38–42

இதனருகே காணிக்கை வைக்கப்படும் – மத்.5:23–24

இதன்மேல் ஊனமான பலிகள் செலுத்தப்படமாட்டாது – லேவி.22:22

ஆசரிப்புக்கூடார திறப்பின்போது இதில் பலியிடப்பட்டது – எண்.7:1–83

கர்த்தருடைய அக்கினி பலிபீடத்தின்மேல் இறங்கி பலியை தகனித்தது – லேவி.9:24

இப்பலிபீடத்தின்மேல் அக்கினி எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும் – லேவி.6:13

சர்வாங்க தகனபலி இப்பீடத்தின்மேல் இடப்படும் – லேவி.1:8–9

பண்டிகையின் பலிகள் இதன் கொம்புகளில் கட்டப்படும் – சங்.118:27

பலிபீடத்தின் அடியில் இரத்தம் ஊற்றப்படும் – யாத்.29:12; லேவி.4:7,18,25

ஆசாரியர்கள் மட்டுமே இங்கு பணிபுரிவர் – எண்.18:3–7
இதில் வரும் பங்குகள் ஆசாரியர்களுக்கு சேரும் – 1 கொரி.9:13
ஆகாஸ் ராஜா பலிபீடத்தில் பலியிட்டான் – 2 இரா.16:10–13
பலர் பலிபீடத்தில் சத்தியம் பண்ணவும் செய்தனர் – மத்.23:18
புதிய ஏற்பாட்டில் இயேசுகிறிஸ்துவே பலிபீடமாயிருக்கிறார் – எபி.13:10–13

# 4. தூப பீடம்
## (The Altar of Incense)

தூப பீடம் சித்தீம் மரத்தால் செய்யப்பட்டது – யாத்.30:1
இது ஒரு முழ நீளமும் ஒரு முழ அகலமும் இரு முழ உயரமானது – யாத்.30:2
இதன் கொம்புகள் அதனோடே ஏகவேலைப்பாடானாது – யாத்.30:2; 37:25
இது பசும்பொன் தகட்டால் மூடப்பட்டது – யாத்.30:3; 37:26
சுற்றிலும் பொன்திரணையால் சுற்றப்பட்டது – யாத்.30:3; 37:26
இதன் திரணையின்கீழ் இரண்டு பக்கங்களில் இருக்கும் இரு மூலைகளிலும் இரு பொன் வளையங்கள் கொண்டது – யாத்.30:4; 37:27
அதன் தண்டுகள் சித்தீம் மரத்தால் செய்யப்பட்டு பொன்தகட்டால் மூடப்பட்டது – யாத்.30:5
இது பொற்பீடம் என்று அழைக்கப்பட்டது – யாத்.39:38
தூபபீடம் திரைச்சீலைக்கு முன்பும் கிருபாசனத்திற்கு முன்பும் வைக்கப்பட்டது – யாத்.30:6; 40:5,26
இது கர்த்தருடைய சந்நிதியில் இருப்பது – லேவி.4:7; 1 இரா.9:25
இது பரிசுத்த எண்ணெயால் அபிஷேகம் பண்ணப்பட்டது – யாத்.30:26,27
ஆசாரியர் தினமும் காலை மாலையில் இதில் தூபம் காட்டுவர் – யாத்.30:7,8
இதில் அந்நிய தூபத்தையாகிலும் தகனபலியையாகிலும், போஜனபலியையாகிலும் படைக்கக்கூடாது – யாத்.30:9
தூபபீடத்தின்மேல் பானபலியை ஊற்றக் கூடாது – யாத்.30:9
வருஷத்தில்ஒருமுறைபாவநிவாரணபலியின்இரத்தத்தைபிரதான ஆசாரியன்எடுத்துஇதன் கொம்புகளின்மேல் பிராயச்சித்தம் பண்ணுவான் – யாத்.30:10; லேவி.16:18,19
பாவ நிவாரண இரத்தத்தை ஆசாரியன் எடுத்து தூபப்பீடத்து கொம்புகளில் பூசி மீதமுள்ள இரத்தத்தை தகனபலிபீடத்தின் அடியில் ஊற்றிவிடுவான் – லேவி.4:7,18
தூபகலசத்தில் அந்நிய அக்கினியை கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுவரக் கூடாது. அப்படிக்கொண்டு வந்தவர்களை கர்த்தர் அடித்தார் – லேவி.10:1–2
அங்கீகரிக்கப்படாதவர்கள் தூபம் காட்டக்கூடாது – 2 நாளா.26:16–19
இது இளநீல துப்பட்டியால் மூடப்பட்டு பாதுகாக்கப்பட்டது – எண்.4:11

புதிய ஏற்பாட்டில் தேவதூதன் இதைப்பிடித்திருப்பதாகவும் இதில் வரும் தூபம் பரிசுத்தவான்களின் ஜெபங்களுக்கு அடையாளமாகவும் கூறப்படுகிறது – வெளி.8:3

# 5. பாவநிவாரண பலி

## (Sin Offerings)

கர்த்தருடைய கட்டளையை அறியாமல் மீறி செய்யத்தகாததை செய்து பாவத்திற்கு உட்பட்டால் இதை செலுத்த வேண்டும் – லேவி.4:2,13,22,27

ஆசாரியனுடைய பரிசுத்தத்திற்கு செலுத்தப்பட வேண்டும் – யாத்.29:10,14

லேவியர்களுடைய பரிசுத்தத்திற்கு செலுத்தப்பட வேண்டும் – எண்.8:8–10

நசரேய விரத நிறைவு நாளில் செலுத்தப்பட வேண்டும் – எண்.6:13–14

பாவ நிவர்த்தி செய்யும் நாளில் பலியிடவேண்டும் – லேவி.16:3–9

இது மகா பரிசுத்தமான பலி – லேவி.6:25,29

### பலியிடும் முறை

அபிஷேகம் பெற்ற ஆசாரியன் பாவம் செய்தால் பழுதற்ற இளங்காளையை கர்த்தருடைய சந்நிதியில் பலியிட வேண்டும் – லேவி.4:3

சபையார் பாவம் செய்தால் ஒரு இளங்காளையையோ, வெள்ளாட்டுக் கடாவையோ பலியிடவேண்டும் – லேவி.4:14; 2 நாளா.29:23

சபை மூப்பர் பாவம் செய்தால் இளங்கடாவை பலியிடவேண்டும் – லேவி.4:14–15

சாதாரண ஜனங்களில் ஒருவன் பாவம் செய்தால் வெள்ளாடுகளில் பழுதற்ற ஒரு பெண்குட்டியை பலியிட வேண்டும் – லேவி.4:27–29

பாவம் செய்தவர் பலியின்தலைமேல் தன் கைகளை வைக்க வேண்டும் – லேவி.4:4,15,24,29; 2 நாளா.29:23

தகனபலியிட்ட இடத்திலேயே பாவநிவாரணபலியிடவேண்டும் – லேவி.4:24–25

ஆசாரியனோ சபையாரோ பாவம் செய்தால் அவர்களுக்காக பலியிட்டபின் அதன் இரத்தத்தை ஆசாரியன் ஆசரிப்புகூடாரத்திலே கொண்டுவர வேண்டும் – லேவி.4:5,16

ஆசாரியனோ, சபையாரோ பாவம் செய்தால் பலியிட்டபின் அதன் இரத்தத்தை பரிசுத்த ஸ்தலத்தின் திரைக்கு எதிரே கர்த்தருடைய சந்நிதியில் ஏழுதரம் தெளிக்க வேண்டும் – லேவி.4:6,17

ஆசாரியனோ சபையாரோ பாவம் செய்தால் பலியிட்டபின், ஆசாரியன் அதன் இரத்தத்தில் கொஞ்சம் தன் விரலால் எடுத்து, தகன பலிபீடத்து கொம்புகளின் மேல் பூசி மற்ற இரத்தத்தை தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிடவேண்டும் – லேவி.4:25,30

மற்ற எல்லா நேரத்திலும் பலியிட்டபின் இரத்தத்தை தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றிவிட வேண்டும் – லேவி.4:7; 9:9

பலியிட்ட காளையின் கொழுப்பையும் குண்டிக்காய்களையும், கல்லீரல் ஜவ்வையும் எடுத்து தகன பலிபீடத்தில் தகனிக்க வேண்டும் –லேவி.4:8–10

ஆசாரியனுக்கோ சபைக்கோ பலியிட்டால் அதன் தோல், தலை, தொடை, குடல், சாணி ஆகியவை பாளையத்துக்கு புறம்பே சுத்தமான இடத்தில் கொட்டப் படவேண்டும் – லேவி.4:11,12,21; 9:11

பாவ நிவர்த்தி செய்ய பலியிடுகிற ஆசாரியன் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க வேண்டும் – லேவி.6:26

எந்தப்பாவ நிவாரண பலியின் இரத்தம் பரிசுத்த ஸ்தலத்தில் பாவ நிவர்த்தியின் பொருட்டு ஆசாரிப்புக் கூடாரத்துக்குள்ளே கொண்டு வரப்பட்டதோ அந்த பலி புசிக்கப்படலாகாது – லேவி.6:30

ஆசாரியர் பலியை புசிக்காததால் மோசே அவர்களைக் கடிந்து கொண்டான் – லேவி.10:16–18

இப்பலி மாம்சத்தில் படுகிறது எதுவும் பரிசுத்தமாயிருக்கும் – லேவி.6:27

அதன் இரத்தம் வஸ்திரத்தில் தெறித்தால் அந்த வஸ்திரத்தை பரிசுத்த ஸ்தலத்தில் கழுவ வேண்டும் – லேவி. 6:27

அது சமைக்கப்பட்ட பாத்திரங்கள் உடைக்கப்பட வேண்டும் – லேவி.6:28

செம்புப்பானையில் சமைக்கப்பட்டதானால் அது விலக்கப்பட்ட தண்ணீரில் கழுவப்பட வேண்டும் – லேவி.6:28

புதிய ஏற்பாட்டில் இயேசு கிறிஸ்து ப்பாவ நிவாரண பலியாக பலியிடப்பட்டார் – 2 கொரி.5:21; எபி.13:11–13

# 6. குற்றநிவாரண பலி

## (Trespass Offering)

பாவநிவாரண பலியைப்போல் இதுவும் ஒரு பலி – லேவி.5:6,9

குற்றத்தை அறிந்தும் செய்கிற பாவத்திற்கு இடப்படும் பலி – லேவி.5:1–6

அசுத்தமான உடலை அறியாமல் தொட்டால் இடப்படும் பலி – லேவி.5:2,3

மனம் பதறி அறியாமல் ஆணையிட்டால் இடவேண்டிய பலி – லேவி.5:4

பரிசுத்தமானவைகளில் அறியாமல் குற்றம் செய்தால் இடும் பலி – லேவி.5:15

யாதொரு பாவத்தையும் அறியாமல் செய்தால் இடும் பலி – லேவி.5:17–18

அடுத்தவனுக்கு அநியாயம் செய்தவன் இடவேண்டிய பலி – லேவி.6:2–5

இது மகா பரிசுத்தமான பலிகளில் ஒன்று – லேவி.14:13

**பலியிடும் முறை**

ஆடு, வெள்ளாடு, வெள்ளாட்டுக்குட்டி இவற்றில் ஒன்றை பலியிடலாம் – லேவி.5:6
பழுதற்ற ஆட்டுக்கடாவை பலிக்குத் தெரிந்துகொள்ளலாம் – லேவி.5:15; 6:6
இரு காட்டுப்புறாக்கள், இரு புறாக்குஞ்சுகளை பலியிடலாம் –லேவி.5:7–10
வசதியில்லாதவன் போஜனபலியையாவது இடலாம் – லேவி.5:11–13
அறியாமையினால் செய்த பாவங்களுக்கு இப்பலியிடலாம் – லேவி.4:1–5:19
பாவநிவர்த்திக்கு உருவாக்கப்பட்ட பலி – லேவி.5:6,10,13,16,18; 6:7; 19:22
பாவத்தை அறிக்கையிட வேண்டிய பலி – லேவி.5:5
பாவ நிவர்த்திக்கு பொதுவாக இடப்படும் பலி – லேவி.5:16; 6:5
பாவ நிவாரண பலியைப்போலவே இது ஆசாரியனுக்குரியது – லேவி.14:13
அசைவாட்டும் பலியாய் கர்த்தர் சந்நிதியிலிடும் பலி – லேவி.14:12,13

**இப்பலி இடவேண்டியவர்கள் :**

தொழு நோயாளி சுத்திகரிக்க இடப்படும் பலி – லேவி.14:2
ஸ்திரீயை சுத்திகரிக்க இடப்படும் பலி – லேவி.12:6–8
உதிர ஊரலிலிருந்து சுத்திகரிக்க இடப்படும் பலி – லேவி.12:4–8
நசரேய விரதம் தீட்டுப்பட்டால் சுத்திகரிக்க இடும் பலி – எண்.6:12
நியமிக்கப்பட்ட பெண் கறைபட்டால் சுத்திகரிக்க இடும் பலி –லேவி.19:20–22
இப்பலியை இடும் ஆசாரியனே அதை எடுத்துக்கொள்ளலாம் – லேவி.14:13
புதிய ஏற்பாட்டில் இயேசுவே குற்ற நிவாரண பலியானர் – எபி.13:10–13

# 7. சர்வாங்க தகனபலி

## (The Burnt offering)

சர்வாங்க தகனபலி கர்த்தருக்கு செலுத்தும் பலியாகும் – நியா.13:16
இப்பலி தேவன் விரும்பும் பலியாகும் – ஆதி.8:21; லேவி.1:9,13,17
இது தேவன் விரும்பும் நீதியின் பலி எனப்படுகிறது – சங்.51:19
ஆதிமுதல் செலுத்தி வந்த பலி – ஆதி.4:4; 8:20; 22:2,13; யோபு 1:5
எபிரெயர் கர்த்தருக்கு செலுத்தி வந்த பலி – யாத்.10:25; 24:5

**பலி செலுத்தும் விதம்**

ஆடு அல்லது மாடு அல்லது ஒரு மிருகத்தை பலியிடவேண்டும் – லேவி.1:2
பறவை அல்லது காட்டுப்புறா, புறாக்குஞ்சுவையும் பலி இடலாம் – லேவி.1:14
பாவம் நிவர்த்தி செய்வதற்கு இப்பலியிட வேண்டும் – லேவி.9:7
பலியை ஆசரிப்புக்கூடார வாசலில் கொண்டுவர வேண்டும் – லேவி.1:3; உபா.12:6,11,14

தன் கையை பலியின் தலையின் மேல் வைக்க வேண்டும்– லேவி.1:4; எண்.8:12
கர்த்தருடைய சந்நிதியில் ஆசாரியர் மிருகத்தைக்கொன்று அதன் இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும் – லேவி.1:5,11
பலி பறவையாய் இருந்தால் அதின் தலையைக்கிள்ளி பலிபீடத்தில் தகனித்து அதின் இரத்தத்தை பலிபீடத்தின் பக்கத்தில் சிந்தவேண்டும் – லேவி.1:15
பலி முழுவதையும் அக்கினியில் சுட்டெரிக்க வேண்டும் – லேவி.1:8,9,12,13
தினமும் சர்வாங்க தகனபலியை வரிசையாக வைத்து அதன்மேல் சமாதான பலிகளின் கொழுப்பைப் போட்டு தகனிக்க வேண்டும் – லேவி.6:12
ஆசாரியன் மட்டுமே பலியை இடவேண்டும் – லேவி.1:9; எசே.44:15
பலியிட மக்கள் கூட்டம் அதிகமாயிருந்தால் லேவியர்கள் ஆசாரியர்களுக்கு உதவலாம் – எசே.44:11
பழுதடைந்த மிருகத்தை பலியிடக்கூடாது – லேவி.1:3; 22:20
பலி செலுத்த வருபவர்கள் உற்சாகத்தோடு பலியிட வேண்டும் – லேவி.22:18,19
பலியிட்டபின் அதன் சாம்பலை பாளையத்திற்குப்புறம்பே சுத்தமான இடத்தில் கொண்டுபோய் கொட்ட வேண்டும் – லேவி.6:11
பலியிட்ட மிருகத்தின் தோலை ஆசாரியன் எடுத்துக்கொள்ளலாம் – லேவி.7:8

**பலியிடும் நேரம்**

ஒவ்வொரு மாதத்தின் காலையும் மாலையும் பலியிடலாம் – யாத்.29:38–42
ஒவ்வொரு ஓய்வு நாளிலும் பலியிடலாம் – எண்.28:9,10
ஒவ்வொரு மாதத்தின் முதல் நாளிலும் பலியிடலாம் – எண்.28:11
புளிப்பில்லா அப்பம் புசிக்கும் ஏழு நாளளவும் பலியிடலாம் – எண்.28:19,24

**எதற்கெல்லாம் பலியிடலாம்**

பரிசுத்த சபை கூடும்போது பலியிடலாம் – எண்.29:7,8
லேவியரை சுத்திகரிப்பதற்கு பலியிடலாம் – எண்.8:12
ஆசாரியரை சுத்திகரிப்பதற்கு பலியிடலாம் – லேவி.9:2,12–14
இராஜாக்களை சுத்திகரிப்பதற்கு பலியிடலாம் – 1 நாளா.29:21–23
பெண்களை சுத்திகரிப்பதற்கு பலியிடலாம் – லேவி.12:6
நசரேய விரதம் நிறைவேறியதும் பலியிடலாம் – எண்.6:11–15
சுகமான தொழு நோயாளன் பலியிடலாம் – லேவி.14:13,19,20
தேவாலயத்திறப்பு விழாவில் பலியிடலாம் – 1 இரா.8:63–64
நலமானவைகள் நடந்தால் பலியிடலாம் – 1 சாமு.6:14; 2 சாமு.24:25
யுத்தத்திற்கு செல்லும்முன் பலியிடலாம் – 1 சாமு.7:9
பண்டிகைகளில் பலியிடலாம் – எண்.10:10
இஸ்ரவேல் குடும்பத்தாரில் பலியிடாதவர்களை கர்த்தர் ஏற்றுக் கொள்வதில்லை – லேவி.17:8–10

துன்மார்க்கருடைய பலியை கர்த்தர் ஏற்றுக்கொள்வதில்லை – ஏசா.1:11; எரே.6:20; ஆமோ.5:22

குமாரன் குமாரத்திகளை பலியிடுவதை தேவன் ஏற்பதில்லை – உபா.12:31

**இப்பலி கற்றுக் கொடுக்கும் பாடம்**

பலியைக் காட்டிலும் கீழ்ப்படிதலே நல்லது – 1 சாமு.15:22; எரே.7:21–23

பலியைப்பார்க்கிலும் தேவனை அறிகிற அறிவே நல்லது – ஓசி.6:6

பலியைப்பார்க்கிலும் தேவனில் அன்புகூறுவது நல்லது – மாற்.12:33

இயேசு நம் அனைவருக்கும் தகன பலியானார் – எபே.5:2; எபி.10:8–10

ஆபிரகாம் ஈசாக்கை இதற்கு அடையாளமாக பலியிட்டான் – ஆதி.22:1–24

# 8. சமாதான பலி

## (Peace Offerings)

ஆண் அல்லது பெண் மாட்டை சமாதான பலியாக செலுத்தலாம் – லேவி.3:1

ஆண் அல்லது பெண் ஆட்டை சமாதான பலியாக செலுத்தலாம் – லேவி.3:6

பலியிடும் மிருகம் மந்தையிலிருந்து எடுக்கப்பட வேண்டும் – லேவி.3:1,6

பலியிடும் மிருகம் பழுதற்று இருக்க வேண்டும் – லேவி.3:1,6

மன உற்சாகத்தோடு செலுத்த வேண்டும் – லேவி.19:5

பலியை கர்த்தருடைய சந்நிதியில் செலுத்த வேண்டும் – லேவி.7:29

பலியை செலுத்துகிறவன் கையிலே கொண்டு வரவேண்டும் – லேவி.7:30

பலியின் தலைமேல் அவன் கையை வைக்க வேண்டும் – லேவி.3:2,8,13

ஆசாரிப்பு கூடார வாசல் முன் மிருகம் கொல்லப்பட வேண்டும் – லேவி.3:2,13

**ஆசாரியன் செய்ய வேண்டியது**

அதிபதிகளின் பலிகளையும் ஆசாரியன் படைக்க வேண்டும் – எசே.46:2

இரத்தத்தை பலிபீடத்தின்மேல் சுற்றிலும் தெளிக்க வேண்டும் – லேவி.3:2,8

கொழுப்பையும் சவ்வையும் எடுத்து தகனிக்க வேண்டும் – லேவி.3:3–4,10

பலியை சர்வாங்க தகனபலியின்மீது தகனிக்க வேண்டும் – லேவி.3:5

மார்க்கண்டத்தை எடுத்து அசைவாட்டும் காணிக்கையாக அசைவாட்ட வேண்டும். அது ஆசாரியனுக்குரிய பங்காக வேண்டும் – யாத்.29:26–27

மார்க்கண்டமும் முன்தொடையும் ஆசாரியனுக்கு சேரவேண்டும் – யாத்.29:26; லேவி.7:31–34

இது பலியிட்டதும் அன்றைய தினமே புசிக்கப்பட வேண்டும் – லேவி.7:15

இது உற்சாக பலியாக இருந்தால் மறுநாளிலும் புசிக்கலாம் – லேவி.7:16

இதை கர்த்தருடைய சந்நிதியில் புசிக்க வேண்டும் – உபா.12:17–18

சுத்தமில்லாத எவரும் இதைப் புசிக்கக்கூடாது – லேவி.7:20–21

**இப்பலியின் சிறப்பு**

இது சுகந்த வாசனையான தகனபலி, தகன ஆகாரம் – லேவி.3:5,16
இது சர்வாங்க தகனபலியோடு இணைந்து வருவது – நியா.21:4; 1 சாமு.10:8
இது பாவநிவாரண பலியோடு இணைந்து வருவது – லேவி.23:19
ஸ்தோத்திரபலியோடு கூட இணைந்து வருவது – லேவி.7:12–13
ஒப்புரவாக்குதலுக்கு இடப்படும்பலி – எசே.45:15; எபே.2:13–16
உடன்படிக்கையை உறுதிசெய்ய இட்டபலி – யாத்.24:5
ஆசாரியர்களின் பரிசுத்தத்திற்கான பலி – யாத். 29:28
கர்த்தருடைய சபையார் யாவருக்குமுரிய பலி – லேவி.9:4–5
நசரேய விரதத்தை நிறைவேற்றுவதற்குரிய பலி – எண்.6:14
பண்டிகைகளுக்கு ஞாபக்குறியாக இருக்கும் பலி – எண்.10:10
ஆசரிப்புக்கூடார திறப்பு விழாவில் செலுத்திய பலி – எண்.7:17,23
தேவாலயத் திறப்பு விழாவில் செலுத்திய பலி – 1 இரா.8:62–64
இராஜாக்கள் முடிசூட்டு விழாவில் செலுத்திய பலி – 1 சாமு. 11:15
யோசுவா வெற்றி கண்டபின் செலுத்திய பலி – யோசு.8:31
இஸ்ரவேலர் தோல்வியுற்றபின் செலுத்திய பலி – நியா.20:26
தாவீது பெட்டியைக்கொண்டுவந்தபோது செலுத்திய பலி – 2 சாமு.6:17–18
தாவீது ஆட்சியில் வாதை வந்தபோது செலுத்திய பலி – 2 சாமு.24:25
சாலொமோன் வருஷத்திற்கு மூன்று முறை செலுத்திய பலி – 1 இரா.9:25
மனாசே பலிபீடத்தைப் பழுது பார்த்தபோது செலுத்திய பலி– 2 நாளா.33:15–16

# 9. பானபலி

## (The Drink offering)

திராட்ச பழரசம் பானபலியாகும் – யாத்.29:40; லேவி.23:13
யாக்கோபு இப்பலியை செலுத்தத்துவங்கினான் – ஆதி.35:14
பலிகளோடு சேர்த்து செலுத்தும் இதற்கு அளவுகள் உண்டு – எண்.15:3–10
பொதுவான பலிகளில் இது சேர்த்து செலுத்தப்படும் – எஸ்றா 7:17;எசே.45:17
தூபத்தோடு பானபலியை சேர்க்கக்கூடாது – யாத்.30:9

**இஸ்ரவேலர் செய்த தவறுகள்**

அந்நிய தேவர்களுக்கும் பானபலியை செலுத்தினார்கள் – எரே.7:18
சிலைகளுக்கு பானபலியை செலுத்தினார்கள் – ஏசா.57:6; 65:11; எரே.19:13
இரத்தத்தையும் பானபலியாய் செலுத்தினார்கள் – சங்.16:4
விக்கிரகங்களுக்கு பானபலியை செலுத்தினார்கள் – உபா.32:37

இயேசு தம்மை பானபலியாக ஒப்புக்கொடுத்தார் – ஏசா.53:12

பரிசுத்த ஆவியானவர் நம்மேல் பானபலிபோல் ஊற்றப்படுகிறார் – யோவே. 2:28

# 10. போஜனபலி

## (The Meat offering)

இது மகா பரிசுத்த பலி என அழைக்கப்படுகிறது – லேவி.6:16–17

போஜனபலி மெல்லிய மாவால் ஆனது – லேவி.2:1

மெல்லிய மாவினால் புளிப்பில்லாத அதிரசங்களாக செய்யப்படுவது – லேவி.2:4

எண்ணெயில் பிசைந்த புளிப்பில்லாத மாவினால் செய்யப்படுவது – லேவி.2:5

எண்ணெயில் பிசைந்த மெல்லிய மாவினால் செய்யப்படுவது – லேவி.2:7

### இப்பலியிட செய்ய வேண்டியது

பச்சையான கதிர்களை நெருப்பிலே வாட்டி உதிர்த்து அதன் முதற்பலனை போஜனபலிக்கு கொண்டுவரலாம் – லேவி.2:14

வாற்கோதுமை மாவினால் செய்யப்படலாம் – எண்.5:15

போஜனபலி உப்பால் சாரமாக்கப்படவேண்டும் – லேவி. 2:13

இதன்மேல் எண்ணெயை வார்த்து தூபவர்க்கம் இட வேண்டும் – லேவி.2:1,4,15

தகனபலி பீடத்திற்குமேல் போஜனபலி செலுத்தவேண்டும் – யாத்.40:29

அனுதின பலிகளோடு சேர்த்து செலுத்த வேண்டும் – யாத்.29:40–42

சர்வாங்க தகனபலியோடு சேர்த்து செலுத்த வேண்டும் – யாத்.40:29

போஜன பலிசெலுத்த வசதி இல்லாதவன் பாவ நிவாரணபலியோடு சேர்த்து மெல்லிய மாவிலே ஒரு பங்கை காணிக்கையாக செலுத்தலாம் – லேவி.5:11

ஆசாரியன் பலிசெலுத்தும்போது மெல்லிய மாவில் பத்தில் ஒரு பங்கை காலையில் பாதியும் மாலையில் பாதியுமாக செலுத்த வேண்டும் – லேவி.6:20

### இப்பலியில் செய்யக்கூடாதது

ஒருவேளை எரிச்சலின் காணிக்கையும் அக்கிரமத்தையும் நினைப்பூட்டும் காணிக்கையும் செலுத்த வந்தால் அதன்மேல் எண்ணெய்யையும் தூபவர்க்கத்தையும் வார்க்கக்கூடாது – எண்.5:15

போஜனபலி புளித்த மாவினால் செய்யப்படலாகாது – லேவி.2:11; 6:17

தூபத்தின்மேல் போஜனபலியை படைக்கக்கூடாது – யாத்.30:9

### பலியில் செய்ய வேண்டியது

நியமித்த அளவின்படி செலுத்த வேண்டும் – எண்.7:13,19

ஆசாரியன் போஜனபலியிலிருந்து ஒரு பங்கை எடுத்து பலிபீடத்தின்மேல் தகனிக்கவேண்டும் – லேவி.2:2,9,16; 6:15

ஆசாரியனுக்காக இடப்படும் எந்த போஜனபலியையும் புசிக்காமல் முழுவதும் தகனிக்கப்பட வேண்டும் – லேவி.6:23

இப்பலியை முழுவதும் ஆசாரியன் கவனிக்க வேண்டும் – எண்.4:14–16

இப்பலிக்குரிய பொருட்களை தேவாலயத்தில் ஒரு பெரிய அறையில் வைக்க வேண்டும் – நெகே.10:39; 13:5

பலியில் மீதமாகும் பகுதி ஆசாரியனுக்கு சேரவேண்டும் – லேவி.2:3; 6:17

இதை ஆரோனின் ஆண்பிள்ளைகள் யாவரும் புசிக்க வேண்டும் – லேவி.6:18

இதை பரிசுத்த ஸ்தலத்திலும் கூடாரப்பிரகாரத்திலும் புசிக்க வேண்டும்–லேவி.6:14–16

# II. அசைவாட்டும் பலி

## (Wave Offering)

காணிக்கையை ஆசாரியரின் உள்ளங்கையில் வைத்து கர்த்தருக்கு முன் அசைவாட்டும் பலி – லேவி.8:27; யாத்.29:24

கொழுப்பு, முன்னந்தொடை, அதிரசம் அடை இவைகளை அசைவாட்டுவது – லேவி.8:25–27

மார்க்கண்டத்தை எடுத்து ஆசாரியன் அசைவாட்டுவது – லேவி.8:29; யாத்.29:26

நசரேயன் பொருத்தனையின்போது அசைவாட்டுவது – எண்.6:17–20

அறுப்பின் முதற்பலனை அசைவாட்டுவது – லேவி.23:10–11

முதற்பலனாகிய அப்பத்தை அசைவாட்டுவது – லேவி.23:20

எரிச்சலின் காணிக்கையை அசைவாட்டுவது – எண்.5:25

குற்ற நிவாரண பலியை அசைவாட்டுவது – லேவி.14:12

புளிப்பில்லாத அப்பம், அதிரசம், அடை ஆகியவைகளை அசைவாட்டுவது – லேவி.29:24–25

தகனபலியோடு வைத்து அசைவாட்டுவது – யாத்.29:23–25; லேவி.8:25–29

அசைவாட்டும் பலி ஆசாரியனுக்கு பங்காகக் கொடுக்கப்பட வேண்டும் – யாத்.29:23–28; லேவி.7:30,34; 8:29; 10:14–15; 23:20

இதை ஆசாரியனின் குடும்பம் மட்டும் பரிசுத்த ஸ்தலத்தில் புசிக்க வேண்டும் – லேவி.10:14–15

# பண்டிகைகள்



## I. யூபிலி வருடப்பண்டிகை
### (The feast of the Jubilee)

ஐம்பதாம் வருஷத்தில் கொண்டாடும் பண்டிகை – லேவி.25:10

பாவநிவாரண நாளிலிருந்து இது துவங்கும் – லேவி.25:9

இது விடுதலையின் வருஷம் என அழைக்கப்படுகிறது – லேவி.25:10; எசே.46:17

இது மகா பரிசுத்தமான வருஷமாகும் – லேவி.25:12

எக்காளம் ஊதவேண்டிய பண்டிகையாகும் – லேவி.25:9

இப்பண்டிகையில் விவசாயிகளுக்கு ஓய்வளிக்கப்படுகிறது – லேவி.25:11

இவ்வாண்டில் வயலில் விளைந்தவைகளைப் புசிக்க வேண்டும் – லேவி.25:12

விற்ற நிலங்களை மீட்க வேண்டும் – லேவி.25:23–27

இந்த ஆண்டில் ஒவ்வொருவரும் தன்தன் காணியாட்சிக்கும் தன்தன் குடும்பத்துக்கும் திரும்பிப்போகவேண்டும் – லேவி.25:10,13,28; 27:24

எபிரெய வேலைக்காரர்களை விடுவிக்க வேண்டும் – லேவி.25:40,41,54

மதில்சூழ்ந்த பட்டணத்து வீடு மீட்கப்படலாகாது – லேவி.25:30

சொத்துக்கள் வாங்கவும் விற்கவும் செய்யலாம் – லேவி.25:15–16

கர்த்தருக்கு நேர்ந்துகொண்ட வீட்டை மதித்து வாங்க வேண்டும் – லேவி.27:14–23

# 2. ஐம்பதாம் நாள் பண்டிகை

## (The feast of pentecost)

ஐம்பதாம் நாளில் கொண்டாடும் பண்டிகை – லேவி.23:15,16; உபா.16:9

இது அறுப்புக்கால பண்டிகை எனப்படுகிறது – யாத்.23:16

ஏழு வாரங்களின் பண்டிகை எனப்படுகிறது – யாத்.34:22; உபா.16:9

முதற்கனிகளை செலுத்தும் பண்டிகை எனப்படுகிறது – எண்.28:26

புதிய ஏற்பாட்டில் பெந்தேகொஸ்தே நாள் எனப்படுகிறது – அப்.2:1

ஆண்மக்கள் அனைவரும் இதில் கலந்துகொள்ள வேண்டும் – யாத்.23:16–17; உபா.16:16

பரிசுத்த நாளாய் அனுசரிக்க வேண்டும் – லேவி.23:21

அனைவரும் சந்தோஷப்படவேண்டிய நேரம் – உபா.16:10–12

முதற்பலனானவைகளைப் படைக்க வேண்டும் – லேவி.23:17

கர்த்தருக்கு சுகந்த வாசனையாக காணிக்கை செலுத்த வேண்டும் – லேவி.23:18; எண்.28:27

புதிய ஏற்பாட்டில் இந்த பண்டிகையில் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார் – அப்.2:1–3

இது பரிசுத்த ஆவியின் பண்டிகையாக சபையில் கொண்டாடப்பட்டு வருகிறது – அப்.2:1; 20:16; 1 கொரி.16:8

# 3. பூரீம் பண்டிகை

## (The feast of PUrim)

யூதர்கள் அழிவிலிருந்து தப்புவிக்கப்பட்டதால் அவர்கள் மகிழ்ந்து கொண்டாடும்படியாக நியமிக்கப்பட்ட பண்டிகைநாள் – எஸ்த. 9:17,26–28

இது மொர்தெகாயால் துவங்கப்பட்டதாகும் – எஸ்த. 9:20

ஆமானுடைய அழிவை நினைவுகூறும் நாளாகவும், சதிகளை யூதர்கள் தோற்கடித்த நாளாகவும் நினைத்துக்கொண்டாடப்பட்டது – எஸ்த. 3:7–15; 9:24–26

இப்பண்டிகை 12ஆம் மாதம் 14ந்தேதியில் துவங்கியது – எஸ்த.9:17

ஆண்டுதோறும் 12ஆம் மாதத்தில் 2 நாட்கள் கொண்டாடப்பட்டது – எஸ்த.9:21

இதில் விருந்துண்டு சந்தோஷப்படவும் ஒருவருக்கொருவர் வரிசைகளை அனுப்பவும், தானம் தர்மம் செய்யவும் வேண்டும் – எஸ்த.9:17–19, 22

யூதர்கள் அனைவருக்கும் இது கட்டாயமாக்கப்பட்டது – எஸ்த.9:27–28

இப்பண்டிகை அரசாங்க அங்கீகாரம் பெற்றது – எஸ்த.9:29–32

# 4. ஏழாம் வருடப் பண்டிகை

## (The feast of Sabbatical year)

இது கர்த்தருக்கென்று ஓய்ந்திருக்கும் பண்டிகை – லேவி.25:1–5

ஏழு வருஷங்களுக்கு ஒருமுறை கொண்டாடப்பட்ட பண்டிகை – லேவி.25:3–7; யாத்.23:10–11

ஆறு வருடங்களில் சேர்த்ததை ஏழாம் வருஷத்தில் புசிக்கும் பண்டிகை – லேவி.25:20–22

இது விவசாயிகளுக்கு ஓய்வு வருஷமாகும் – லேவி.25:4–7

எளியவர்களுக்கு உதவி செய்யும் வருஷமாகும் – யாத்.23:11; லேவி.25:4–7

கடன்கொடுத்தவன் கடனை வாங்கக்கூடாது – உபா.15:1–3; நெகே.10:31

எபிரெய வேலைக்காரர்களை விடுவிக்க வேண்டும் – யாத்.21:2; உபா.15:12

ஏழை சகோதரனுக்கு துரோகம் செய்யக்கூடாது – உபா.15:9–11

ஓய்வு நாட்களை இரம்மியமாய் அனுபவிக்க வேண்டும் – லேவி.26:34,35,43

சிறையிருப்பிலிருந்து வந்தபின் இதைக் கொண்டாடினர் – நெகே.10:31

# 5. கூடாரப் பண்டிகை

## (The feast of Tabernacles)

அறுவடைப்பலன்களை சேர்த்தபின் கொண்டாடும் பண்டிகை – உபா.16:13

இது ஏழாம் மாதத்தில் 15ம் தேதியில் துவங்கும் – லேவி.23:34,39

ஏழு நாள் கொண்டாடவேண்டிய பண்டிகை – லேவி.23:34–39, 41; உபா. 16:13

இப்பண்டிகையில் எல்லா ஆண்களும் பங்கேற்க வேண்டும் –யாத்.23:16–17

பண்டிகை முதல் நாளும் கடைசி நாளும் பரிசுத்த நாட்களாகும் – லேவி.23:35–39

இந்நாட்களில் பலிகள் செலுத்தப்படும் – லேவி.23:36,37; எண்.29:13–39

குடும்பத்தார் அனைவரும் சந்தோஷமாயிருக்க வேண்டும் – உபா.16:14–15

வருஷந்தோறும் இப்பண்டிகையை ஆசரிக்க வேண்டும் – லேவி.23:41

இந்நாட்களில் கூடாரங்களில் குடியிருக்கவேண்டும் – லேவி.23:42–43; நெகே.8:15–16

சிறையிருப்பிலிருந்து வந்தவர்களும் இதை நினைவுகூறும்படி கூடாரங்களைப் போட்டு அதில் தங்கி மகிழ்ந்தனர் – நெகே.8:17

இப்பண்டிகையில் நியாப்பிரமாணம் வாசிக்கப்படும் – உபா.31:10–12; நெகே.8:18

பழங்களையும் கிளைகளையும் கொண்டு வந்து மகிழ வேண்டும் – லேவி.23:40

யூதர்கள் இப்பண்டிகையை அனுசரித்து வந்தார்கள் – யோவா.7:2

இயேசுவும் இப்பண்டிகைக்கு சென்றிருந்தார் – யோவா.7:2,37

# 6. பஸ்கா பண்டிகை

## (The feast of the passover)

எபிரெயர்களுக்கு எகிப்தில் தேவனால் நியமிக்கப்பட்ட பண்டிகை – யாத்.12:1–3

ஆண்டில் முதல் மாதத்தில் 14ம் தேதியில் கொண்டாடப்பட்டது – யாத்.12:6,18; லேவி.23:5; எண்.9:3

இது பஸ்கா பண்டிகை என்று அழைக்கப்பட்டது – எண்.9:5; யோவா.2:23

இது கர்த்தருடைய பஸ்கா என்றும் அழைக்கப்பட்டது – யாத்.12:11,27

யூதருடைய பஸ்கா பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது – யோவா.2:13; 11:55

புளிப்பில்லாத அப்பப்பண்டிகை என்றும் அழைக்கப்பட்டது – மாற்.14:1; லூக்.22:1; அப்.12:3

இப்பண்டிகை ஏழு நாட்கள் கொண்டாடப்பட்டது – யாத்.12:15; லேவி.23:6

இதில் எல்லா ஆண்களும் பங்கேற்க வேண்டும் – உபா.16:16

முதலாம் நாளில் பஸ்கா ஆட்டுக்குட்டி அடிக்கப்பட வேண்டும் –யாத்.12:1–6

புளிப்பில்லாத அப்பத்தை ஏழு நாளும் புசிக்க வேண்டும் – யாத்.12:15; உபா.16:3

வீட்டில் புளித்தமா காணப்படக் கூடாது – யாத்.12:19

புளிப்பிட்ட யாதொன்றையும் புசிக்கக்கூடாது – யாத்.12:20

எல்லைக்குள் எங்கும் புளித்தமாவு இருக்கக்கூடாது – யாத்.14:7

புளிப்புள்ளதை புசித்தால் தண்டிக்கப்படுவர் – யாத்.12:19

முதல் நாளும் கடைசி நாளும் பரிசுத்த நாட்கள் – யாத்.12:16; எண்.28:18,25

இந்நாட்களில் பலி செலுத்தப்படலாம் – லேவி.23:8; எண்.28:19–24

ஓய்வு நாளுக்கு மறுநாள் அசைவாட்டும் பலியை இடலாம் – லேவி.23:10–14

எகிப்தை விட்டு வந்தபோது இது கொண்டாடப்பட்டது – யாத்.12:1–51

சீனாய் வனாந்தரத்தில் கொண்டாடப்பட்டது – எண்.9:3–5

வாக்குத்தத்த தேசத்தில் நுழைந்தபோது கொண்டாடப்பட்டது – யோசு.5:10–11

எசேக்கியாவின் ஆட்சியில் கொண்டாடப்பட்டது – 2 நாளா.30:1

யோசியாவின் ஆட்சியில் கொண்டாடப்பட்டது – 2 இரா.23:22,23; 35:1,18

சிறையிருப்பிற்குப் பின் கொண்டாடப்பட்டது – எஸ்றா 6:19,20

இயேசு கிறிஸ்து மரிப்பதற்கு முன் அனுசரிக்கப்பட்டது – லூக்.22:1,15

இயேவின் மரணத்தைக் குறிப்பதாக அனுசரிக்கப்பட்டது – மத்.26:26–28; மாற்.14:22–24; லூக்.22:19–20

இந்நாளில் சிறைக்கைதியை விடுதலையாக்குவதுண்டு – மத்.27:15; 23:16,17

ஓய்வு நாளுக்கு முந்தைய நாள் ஆயத்த நாள் எனப்பட்டது – யோவா.19:14,31

இது கிறிஸ்து நம்மை மீட்பதற்கு உதாரணமானது – 1 கொரி.5:7–8

# 7. வருடாந்திரப் பண்டிகை

## (The feast of anniversary)

வருடத்தில் மூன்றுதரம் கொண்டாடும் பண்டிகை – 2 நாளா.8:13

புளிப்பில்லாத அப்பப் பண்டிகை, வாரங்களின் பண்டிகை, கூடாரப்பண்டிகை – 2 நாளா. 8:13

புளிப்பில்லா அப்பப்பண்டிகை – யாத்.23:15

அறுப்புகாலப் பண்டிகை – யாத்.23:16

சேர்ப்புகாலப் பண்டிகை – யாத்.23:16

இவைகள் கர்த்தரின் பண்டிகை என்றழைக்கப்பட்டது – லேவி.23:4

எல்லா ஆண்களும் கொண்டாடவேண்டியது – யாத்.23:17; 34:23

பெண்கள் விரும்பினால் பங்கேற்பார்கள் – 1 சாமு.1:3,9; லூக்.2:41

குழந்தைகளும் பெற்றோருடன் பங்கேற்பார்கள் – லூக்.2:42

யூதர்கள் மிகவும் களிகூர்ந்து கொண்டாடுவார்கள் – சங்.42:4; லூக்.2:44

இப்பண்டிகை நாட்களில் தேசத்திற்கு உகந்த பாதுகாப்பு அளிக்கப்படும் – யாத்.34:24

ஒவ்வொருவரும் கையில் காணிக்கையைக்கொண்டு வருவர் – யாத்.34:20

தங்கள் வசதிப்படி கர்த்தருக்கு பலியிடுவார்கள் – 1 சாமு.1:3; 1 இரா.9:25

யூதர்கள் எல்லா பகுதிகளிலிருந்தும் இப்பண்டிகைகளுக்கு வருவர்– அப்.2:5–11

கிறிஸ்துவும் இப்பண்டிகையில் கலந்து கொண்டார் – யோவா.5:1; 7:10

# 8. ஆசரிப்புக் கூடாரம்

## (Tabernacle)

கர்த்தர் இஸ்ரவேலர் நடுவில் வாசம் பண்ணுவதற்கு உருவாக்கப்பட்ட இடமே ஆசரிப்புக்கூடாரம் – யாத்.25:8

இது மோசேக்கு காட்டப்பட்ட தெய்வீக தரிசனப்படி உருவாக்கப்பட்டது – யாத்.25:9; 26:30; எபி.8:5

இது ஒரு கூடாரம்போல அமைக்கப்பட்டது – யாத்.33:7

இதை உருவாக்குவதற்கு பெசலெயேலுக்கு விசேஷித்த ஞானம் கொடுக்கப்பட்டது – யாத்.31:2–5; 35:30–35; 36:1

இது கர்த்தருடைய கூடாரம் என்றழைக்கப்பட்டது – 1 இரா.2:28

கர்த்தருடைய வாசஸ்தலம் எனப்பட்டது – யோசு.22:19; 1 நாளா.16:39

சாட்சியின் வாசஸ்தலம் என்றழைக்கப்பட்டது – யாத்.38:21; எண்.1:50

சாட்சியின் கூடாரம் என்றும் அழைக்கப்பட்டது – எண்.17:7

சாட்சி சந்நிதி என்றும் கர்த்தருடைய சந்நிதி என்றும் கூறப்பட்டது – யாத்.27:21; 40:25–26

சீலோவின் வாசஸ்தலம் என்றும் கூறப்பட்டது – யோசு.18:1; சங்.78:60

கர்த்தருடைய ஆலயம் என்றும் அழைக்கப்பட்டது – 1 சாமு.1:9; 3:3

தேவன் இதில் உலாவி வாசம் பண்ணினார் – 2 சாமு.7:6,7

இதன்படி தேவன் மக்கள் நடுவே வாசம் பண்ணினார் – யாத்.25:8; 29:42,43

**ஆசரிப்புக்கூடார அளவுகள் :**

ஆசரிப்புக்கூடாரம் சித்தீம் மரத்தால் செய்யப்பட்டது – யாத்.26:15; 36:20

இது நிமிர்ந்து நிற்கும் பலகைகளால் அமைக்கப்பட்டது – யாத்.26:15; 36:20

ஒவ்வொரு பலகையும் 10 முழ நீளமும் 11/2 முழ அகலமுமானது – யாத்.26:16; 36:21

ஒவ்வொரு பலகையும் ஒன்றோடொன்று இசைந்திருக்க வேண்டும் – யாத்.26:17

இரண்டு கழுந்துகள் இருக்க வேண்டும் – 26:17

20 பலகைகளின் கீழே 40 வெள்ளிப்பாதங்கள் உண்டுபண்ணவேண்டும் –26:19

ஒரு பலகையின்கீழ் இரண்டு கழுந்துகளும், இரண்டு பாதங்களும் இருக்கும் – யாத்.26:19; 36:22–24

20 பலகைகள் தென்திசையிலே இருக்கும் – யாத்.26:18; 36:23

20 பலகைகள் வடதிசையிலே இருக்கும் – யாத்.26:20; 36:25

ஆறு பலகைகள் மேற்புறத்திலும் இரு பக்கங்களின் மூலையில் இரண்டு பலகைகளும் இருக்கும் – யாத்.26:22–25; 36:27–30

வாசஸ்தலத்தின் ஒரு பக்கத்து பலகைக்கு 5 தாழ்ப்பாள்கள் இருக்கும் – யாத்.26:27–29

வாசஸ்தலத்தின் பின்பக்கத்தில் பலகைக்கு 5 தாழ்ப்பாள்கள் இருக்கும் –26:27

நடுத்தாழ்ப்பாள் ஒரு முனை தொடங்கி மறுமுனை மட்டும் பலகைகளின் மையத்தில் உருவ பாய்ச்சப்பட்டிருக்கும் – யாத்.26:28

பலகைகள் பொன் தகட்டால் மூடப்பட்டிருக்கும் – யாத்.26:29

தாழ்ப்பாள்களும் வளையங்களும் பொன்தகட்டால் மூடப்பட்டிருக்கும் – யாத்.26:29

**தொங்குதிரையின் அளவுகள் :**

கூடாரத்தின் தொங்குதிரை இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும் திரித்த மெல்லிய பஞ்சு நூலாலும் அமைக்கப்பட்டது – யாத்.26:31

இது சித்தீம் மரத்தால் பொன்தகட்டால் மூடப்பட்ட 4 தூண்களிலே தொங்க விடப்பட்டிருக்கும் – 26:32

அந்த தூண்கள் 4 வெள்ளிப்பாதங்கள் மேல் நிற்க அதன் கொக்கிகள் பொன்னினால் செய்யப்பட்டிருக்கும் – 26:32

**மூடுதிரையின் அளவுகள் :**

திரிந்த மெல்லிய பஞ்சு நூலினாலும் இளநீல நூலினாலும் இரத்தாம்பரத்தினாலும் சிவப்பு நூலினாலும் நெய்யப்பட்ட 10 மூடுதிரைகள் இருக்கும். இவை ஒவ்வொன்றும் 28 முழ நீளமும் 4 முழ அகலமுமாயிருக்கும் – யாத்.26:1–2

இதில் 5 மூடுதிரை ஒன்றோடொன்றும் மற்ற 5 மூடுதிரை ஒன்றோடொன்றும் இணைக்கப்பட்டிருக்கும் – யாத்.26:3

இணைக்கப்பட்ட மூடுதிரையின் ஓரத்தில் இளநீல நூலால் காதுகள் உண்டு பண்ணப்பட்டு இருக்கும் – யாத்.26:4

காதுகள் ஒன்றோடொன்று இணையும்படி ஒவ்வொரு மூடுதிரையிலும் ஐம்பது காதுகள் இருக்கும் – யாத்.26:5

**கூடார மேல்புறத்து திரைகள் :**

வாசஸ்தலத்தின்மேல் கூடாரமாக போடும்படி 11 மூடுதிரைகள் ஆட்டு மயிரால் செய்யப்பட்டிருக்கும் – யாத்.26:7–13; 36:14–18

ஒவ்வொரு மூடுதிரையும் 30 முழ நீளமும் 4 முழ அகலமுமாய் மொத்தம் 11 மூடுதிரைகள் ஒரே அளவாய் இருக்கும் – யாத்.26:8

இதில் 5 மூடுதிரைகள் ஒன்றாகவும், 6 மூடுதிரைகள் ஒன்றாகவும் இணைக்கப் பட்டிருக்கும் – யாத்.26:9

ஆறாம் மூடுதிரை கூடாரத்தின் முகப்பிற்கு முன்னே மடித்துப் போடப்பட்டிருக்கும் – யாத்.26:9

இணைக்கப்பட்ட மூடுதிரையின் ஓரத்தில் 50 காதுகளும் மற்ற மூடுதிரையின் ஓரத்தில் 50 காதுகளும் இருக்கும் – யாத்.26:10

இந்த காதுகளில் 50 வெண்கலக்கொக்கிகள் மாட்டப்பட்டு ஒரே கூடாரமாய் இணைக்கப்பட்டிருக்கும் – யாத்.26:11

கூடாரத்திற்கு சிவப்புத்தீர்த்த ஆட்டுக்கடா தோலினால் ஒரு மூடியையும் அதன்மேல் தகசுத்தோலால் ஒரு மூடியும் இருக்கும் – யாத்.26:14; 36:19

ஆசரிப்புக்கூடாரம் இருபகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இதில் ஒரு பகுதி பரிசுத்த ஸ்தலம் எனப்பட்டது. – யாத்.26:33; எபி.9:2–6

மறுபகுதி மகா பரிசுத்த ஸ்தலம் எனப்பட்டது – யாத்.26:34; எபி.9:3,7

பரிசுத்த ஸ்தலத்துக்கும் மகாபரிசுத்த ஸ்தலத்துக்கும் இடையே திரைச்சீலை ஒன்று தொங்கவிடப்பட்டிருக்கும் – யாத்.26:33

திரைச்சீலைக்கு வெளிப்புற பகுதியான பரிசுத்தஸ்தலத்தில் மேசையும் பொன் குத்துவிளக்கும், தேவ சமூகத்து அப்பமும் இருக்கும், விளக்கு எரியும், பொற்பீடம் இருக்கும், சுகந்த வர்க்க தூபம் இருக்கும்– யாத்.26:35.36; 40:22,24,26; எபி.9:2

திரைச்சீலைக்கு உட்புறப்பகுதியான மகாபரிசுத்தஸ்தலத்தில் பொன்னால் செய்த தூபகலசமும் பொற்தகடினால் மூடப்பட்ட உடன்படிக்கைப் பெட்டியும் இருந்தன.

அந்த பெட்டிக்குள் மன்னா வைக்கப்பட்ட பொற்பாத்திரமும் ஆரோனுடைய துளிர்த்த கோலும் உடன்படிக்கையின் பலகைகளும் இருந்தன
– யாத்.26:33,34; 40:20,21; எபி.9:3–5

**கூடாரத்தின் பிரகார அளவுகள் :**

கூடாரத்தைச் சுற்றிலும் சுற்றுப்பிரகாரம் இருந்தது – யாத்.40:8

பிரகாரத்தின் நீளம் 100 முழமும் இருபுற அகலம் 50 முழமும் இருந்தது – யாத்.27:18

தென்திசைக்கு எதிரான பிரகாரத்திற்கு திரித்த மெல்லிய பஞ்சு நூலால் செய்யப்பட்ட நூறு முழ நீளமான தொங்குதிரைகள் இருக்கும் – யாத்.27:9

பிரகாரத்தின் மேற்கு பக்க அலங்கத்தில் 50 முழ நீளமான தொங்கு திரைகள் இருக்கும் – யாத்.27:12

பிரகாரத்தின் வாசலுக்கு இளநீல நூலாலும், இரத்தாம்பர நூலாலும், சிவப்பு நூலாலும், மெல்லிய பஞ்சு நூலாலும் , சித்திரத்தையல் வேலையாய்ச் செய்யப்பட்ட 20 முழ நீளமான தொங்குதிரையும் அதற்கு 4 தூண்களும் அவைகளுக்கு 4 பாதங்களும் இருந்தன – யாத்.27:16; 38:18

கூடாரத்தின் வாசலுக்கு முன்பாக தகனபலிபீடமும் தொட்டியும் வைக்கப்பட்டிருந்தது. இந்தத் தொட்டியில் கை கழுவுவதற்கு தண்ணீர் இருந்தது – யாத்.40:29–30

சுற்றுப்பிரகாரத்தின் தூண்களெல்லாம் வெள்ளியினால் பூண் கட்டப்பட்டிருக்க வேண்டும் – யாத்.27:17; 38:17

வாசஸ்தலத்துக்கு அடுத்த சகல பணிமுட்டுகளும் வெண்கலத்தால் இருந்தன
–யாத்.27:19

**ஆசரிப்புக்கூடார நிகழ்ச்சிகள் :**

கூடாரத்து வேலைகள் முதல் மாதம் முதல் தேதியில் துவக்கப்பட்டு 2–ம் வருஷம் முதல் மாதம் முதல் தேதியில் ஸ்தாபிக்கப்பட்டது – யாத்.40:2,17

ஆசரிப்புக்கூடாரம் மோசேயினால் சீனாய் வனாந்திரத்தில் உருவாக்கப்பட்டது
– யாத்.40:18,19; எண்.10:11,12

சீலோவில் கூடாரம் நிறுத்தப்பட்டது – யோசு.18:1; 19:51

நோப் என்னுமிடத்தில் ஆசாரிப்புக்கூடாரம் இருந்தது – 1 சாமு.21:1–6

கிபியோனில் கூடாரம் இருந்தது – 1 நாளா.16:39; 21:29

அபிஷேகத்தைலத்தால் வாசஸ்தலம் அபிஷேகம் பண்ணப்பட்டது
– யாத்.40:9; லேவி.8:10

ஆராதனைக்குரிய பணிமுட்டுக்களில் இரத்தம் தெளிக்கப்பட்டது – எபி.9:21

**ஆசரிப்புக்கூடாரமும் கர்த்தரும் :**

கர்த்தருடைய மகிமை ஆசரிப்புக்கூடாரத்திற்குள் இறங்குவதால் இது மகிமையில் பரிசுத்தமாக்கப்பட்ட ஸ்தலம் எனப்பட்டது – யாத்.29:43

கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று – யாத்.40:34

அக்கினிமயமான தோற்றம் உண்டாயிருந்தது – எண்.9:15
கர்த்தர் இதற்குள் பிரவேசித்து பேசுவார் – எண்.7:89
கிருபாசனத்தின்மேலுள்ள சாட்சிப்பெட்டியின்மேல் இரண்டு கேருபீன்கள் நடுவிலிருந்து கர்த்தர் பேசுவார் – யாத்.25:22
கர்த்தர் கிருபாசனத்தின்மேல் ஒரு மேகத்தில் காணப்படுவார் – லேவி.16:2
வாசஸ்தலத்தின்மேல் பகலில் கர்த்தருடைய மேகமும் இரவில் அக்கினியும் தங்கியிருந்தது – லேவி.40:38; எண்.9:15–16
மேகமானது கூடாரத்தை மூடிற்று – எண்.9:15
வாசஸ்தலத்திலிருந்து மேகம் மேலே எழும்பும்போது இஸ்ரவேல் புத்திரர் பயணத்தைத் துவக்குவர் – யாத்.40:36
மேகம் எழும்பும் நாள்வரைக்கும் பயணம் செய்யாமல் இருப்பர் – யாத்.40:37
கூடாரத்துக்குள் ஆசாரியர் மட்டுமே பிரவேசிக்க வேண்டும் – எண்.18:1–5; எபி.9:6–7
எல்லா ஆராதனைகளையும் அவர்கள் செய்ய வேண்டும் – எண்.3:10; 18:1,2
ஆசரிப்புக் கூடாரத்தில் ஆசாரிய ஊழியத்தை செய்ய வேண்டும் – எபி.8:2; எண்.3:10
ஆசாரியருக்கு உதவி செய்ய லேவியரை நியமிக்க வேண்டும் – எண்.1:50; 3:6–8
கூடாரப் பொருட்களையும் வளாகத்தையும் காக்க வேண்டும் – எண்.3:6–8
வனாந்திரப்பயணத்தில் கூடாரத்தை எடுத்து நிறுத்த வேண்டும் – எண்.1:51
கூடாரத்தை சுமக்க வேண்டும் – எண்.4:15,25,26,31,32
சாட்சியின் வாசஸ்தலத்தை காவல் செய்யவேண்டும் – எண்.1:53
காணிக்கைகளை லேவியருக்கு அவரவர் வேலைக்குத்தக்கதாய் பங்கிட வேண்டும் – எண்.7:1–5
ஆசரிப்புக்கூடாரத்தின் பிரதிஷ்டையின்போது காணிக்கை செலுத்த வேண்டும் – எண்.7:10–87
எல்லா பலிகளையும் கூடாரத்தில் செலுத்த வேண்டும் – உபா.12:5,6,11,13,14
வாசஸ்தலத்தை தீட்டுப்படுத்தினால் தண்டிக்கப்படுவர் – லேவி.15:31

**புதிய ஏற்பாட்டில் ஆசரிப்புக்கூடாரம் :**

கிறிஸ்து மெய்யான ஆசரிப்புக் கூடாரத்தின் ஆசாரியராயிருக்கிறார் – எபி.9:11–12
அவர் நித்திய ஆசாரியராய் நமக்கிருக்கிறார் – எபி.6:20
தம்முடைய இரத்தத்தினால் மீட்பை உண்டு பண்ணினார் – 9:12
தம்முடைய சொந்த இரத்தத்தினால் பிதாவிடம் பிரவேசித்தார் – எபி.9:12
புது உடன்படிக்கையின் மத்தியஸ்தரானார் – எபி.9:15
இயேசுவின் சரீரம் பலியாக பலியிடப்பட்டது – எபி.10:10
தமது மாம்சமாகிய திரையின் வழியாய் புது மார்க்கம் உண்டாக்கினார் – எபி.10:19
அவருடைய இரத்தத்தினால் நமக்கு தைரியம் உண்டாயிருக்கிறது – எபி.10:20

007


# இயேசுவின் இயக்கம்

- ஸ்தாபகர் -

**Dr. ஆன்ட்ரு தேவ்**

**Dr. ஜெயராணி தேவ்**

*இயேசுவின் இயக்கம் என்ற இவ்வூழியம் சபைப்பாகுபாடற்று இயேசுவின் அன்பையும், இயேசுவின் வார்த்தையையும், பூமியின் கடைசி மனிதனுக்கும் கொண்டு செல்ல வேண்டும் என்ற தரிசனத்தோடு ஸ்தாபிக்கப்பட்டதாகும்.*

நற்செய்தி கூட்டங்கள் ❖ எழுப்புதல் கூட்டங்கள்

வாலிபர் ஊழியம் ❖ பெண்கள் ஊழியம்

இலக்கிய ஊழியம் ❖ பத்திரிக்கை ஊழியம்

கடித ஊழியம் ❖ தொலைக்காட்சி ஊழியம்

❖ ஒலி ஒளி நாடாக்கள் ❖ மருத்துவ பணிகள் ❖ ஜெப உதவிகள்

இம்மாபெரும் பணிக்கு தங்களின் ஜெபமும், ஆதரவும் தேவைப்படுகின்றன.

மேலும் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

**இயேசுவின் இயக்கம்,**

த.பெ.எண். 1040, சென்னை - 10, இந்தியா.

E-Mail : thejesusmission@yahoo.com Website : thejesusmission.org

உங்களுக்காக நாங்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறோம் ...

உங்கள் அவசர ஜெபதொடர்புக்கு

**ஜெபக்கோட்டை**

போன் : (91-44) 26564080 செல் : 9444 98080

*பைபிள் தாலீஸ்*

வெளியிடும் எமது புத்தகங்களை வாசித்து பயனடையுங்கள்

# இஸ்ரவேல் கோத்திரக் குறிப்புகள்

## ஆன்ட்ரு தேவ்

தேவனையும் அவர் மக்களையும் மையம் கொண்ட புத்தகமே வேதாகமம் – அதில் புதிய ஏற்பாடு முழு உலகில் உள்ள விசுவாச மக்கள் கூட்டத்தை மையம் கொண்டு இருக்கிறது. ஆனால் பழைய எற்பாடோ இஸ்ரவேல் என்னும் ஒரு மக்கள் கூட்டத்தை மையம் கொண்டே இயங்குகிறது. இந்த இஸ்ரவேல் இனத்தாரின் வகைகள், வாழ்க்கை, வழிபாட்டு முறை என அவர்களின் சகல வர்த்தமானங்களும் இப்புத்தகத்தில் இடம் பெற்றுள்ளன. இதில் உள்ள குறிப்புகள் வாரந்தோறும் ஒரு தலைப்பில் வேதபாடமாக தியானிப்பதற்கு வசதியாய் அமைந்துள்ளது.



சகோதரர் ஆன்ட்ரு தேவ் தேவனால் பயன்படுத்தப்படும் பாத்திரமாவார். இவரும் இவரது துணைவியார் டாக்டர் ஜெயராணியும் இறைவனின் சேவைக்காய் தங்களை முழு நேரமாய் அர்ப்பணித்தவர்கள்.

"இயேசுவின் இயக்கம்" (The Jesus Mission) என்ற ஊழியத்தின் ஸ்தாபகரான இவர், "பைபிள் கால்ஸ்" (Bible Calls) என்ற வேதாகம கல்லூரியின் நிறுவனராகவும் இருக்கிறார்.

இப்புத்தக ஆக்கியோன் கூட்டங்களில் பிரசங்கிப்பதோடு எழுத்துப்பணியிலும் கவனம் செலுத்தி வருகிறார். எளிய நடையுள்ள இவரது புத்தகங்கள் அனைத்தும் கிறிஸ்தவ உலகிற்கு மிகுந்த ஆசீர்வாதமாய் இருப்பதோடு இறையியல் கல்லூரி மாணவர்களுக்கும் சபைப் போதகர்களுக்கும் பெரிதும் பயனுள்ளதாய் இருக்கின்றன.

THE JESUS MISSION
Chennai, India

Bible Calls
Chennai, India